இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 94 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 16. செவ்வாய்க்கிழமை 28.02.2017

## மேலும் ஐவருக்கு வவுனியாவில் பன்றிக் காய்ச்சல்

வவுனியா. பெப். 28
பன்றிக் காய்ச்சல் எனப்படும் என்1எச்1 வைரஸ் தொற்றினால் வவுனியாவில் மேலும் 5 பேர் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று வவுனியா சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.
கடந்த 22ஆம் திகதி 2 பேர் தொற்றுக்கு உள்ளாகியிருந்தனர். >> 24

# 3 தினங்களுள் காணி விடுவிப்பு

## பிலக்குடியிருப்பு விவகாரத்தில் கூட்டமைப்பிடம் மைத்திரி உறுதி

கொழும்பு, பெப்ரவரி 28
முல்லைத்தீவு மாவட்டத்தின் பிலக்குடியிருப்பு மற்றும் புதுக்குடி யிருப்புப் பிரதேசங்களில் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் மூன்று தினங்களுக்குள் விடுவிக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று நேரில் உறுதியளித்துள்ளார்.
இதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு, கூட்டமைப்பினர் முன்பாகவே உத்தரவுகளையும் அரச தலைவர் பிறப்பித்துள்ளார்.
அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்றது.
இதன்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று மாலை 7 மணியளவில் பத்திரிகையாளர் சந்திப்பில் இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவித்ததாவது: >> 04

## இலங்கை அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை

### மோடியிடம் வலியுறுத்தினார் தமிழக முதலமைச்சர் எடப்பாடி

சென்னை, பெப். 28
தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குமாறு, இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியுடனான சந்திப்பில் வலியுறுத்தியுள்ளதாக, தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள் ளார்.
தமிழகத்தின் புதிய முதலமைச்சராக எடப்பாடி பழனிச்சாமி பதவியேற்ற பின்னர், இந்தியாவின் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியுடன் முதலாவது சந்திப்பு நேற்று நடைபெற்றது. >> 24

## மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனரா படையினர் ?

### ஆராயுமாறு இலங்கையைக் கோருகிறார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்



கொழும்பு. பெப். 28
ஐ.நா. அமைதிப் படைக்கு இலங்கைப் படையினரை இணைப்பதற்கு முன்னதாக, அவர்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்களா >> 24

## மோசடிக் குற்றச்சாட்டுக் குறித்து டெனீஸ்வரனிடமும் விசாரணை

யாழ்ப்பாணம், பெப். 28
வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிரான மோசடி குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை செய்யும் குழுவினர் நான்காவது அமைச்சராக போக்குவரத்து, மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரனிடமும் விசாரணையை மேற்கொண்டனர். >> 04

கர்ப்பிணிப் பெண் கொலை வழக்கில்

## கண்கண்ட சாட்சியான சிறுவனுக்கு பொலிஸ் காவலையும் மீறி மிரட்டல்

யாழ்ப்பாணம், பெப். 28
ஊர்காவற்றுறை கர்ப்பிணிப் பெண் படுகொலை வழக்கின் கண்கண்ட சாட்சியமான சிறுவனுக்கு பொலிஸ் பாதுகாப்பு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள போதும், அதனையும் விஞ்சி மீண்டும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றுக்கு >> 04



## ஐ.நாவில் இலங்கைக்கு கடும் நிபந்தனை வரும்

### பிரான்ஸ் செனட்டர்களிடம் கூறினார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, பெப். 28
இலங்கை ஐ.நா.வில் இணங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு கடும் நிபந்தனைகளுடன் கூடிய கால அவகாசம் வழங்கப்படலாம். இவ்வாறு பிரான்ஸ் செனட்டர்கள் குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார் என, எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. >> 24

## தமது நிலைப்பாட்டில் மக்கள் பிடிவாதம்

முல்லைத்தீவு, பெப். 28
கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் எம்மை மீளக்குடியமர்த்தும்போது வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு மாறாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன செயற்படக்கூடாது.
இவ்வாறு பிலக்குடியிருப்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.
கேப்பாபிலவு மாதிரிக் >> 22

## தூதரகங்களின் முன்பாக காணாமற்போனோரின் உறவுகள் நேற்று திரள்வு




கொழும்பு, பெப். 28
வடக்கு-கிழக்கைச் சேர்ந்த காணாமற்போனோரின் உறவினர்களால் கொழும்பிலுள்ள தூதரகங்கள் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.
இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது என்று >> 24

முச்சந்தி முரளி



காணி விடுவிச்சிட்டுத் தான் ஐயா யாழ்ப்பாணம் வருவார் என்றியளோ...

## போராட்டங்களுக்கு நியாயத்தை வழங்க தவறக்கூடாது அரசு

### யாழ்ப்பாண வணிகர் கழகம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 28
கேப்பாபிலவு, புதுக்குடியிருப்புப் பிரதேச மக்கள் முன்னெடுத்துள்ள அறப்போராட்டம் முற்றுமுழுதாக நியாயமானதாகும். அவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டிய கடப்பாட்டில் இருந்து அரசு விலகிவிட முடியாது. >> 24

## களுத்துறை சூட்டுச் சம்பவம்; அம்பாறை தமிழ் அலுவலரும் சாவு



மட்டக்களப்பு, பெப்.28
களுத்துறையில் சிறைக் கைதி களை ஏற்றிச்சென்ற வாகனத்தின் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அம்பாறை-காரைதீவு கிராமத்தைச் சேர்ந்த சிறைச்சாலை உத்தியோகத்தரான சிவானந்தம் தர்மீகன் (வயது-24) என்பவரும் உயிரிழந்தார்.
இவர் [illegible]பத்தில்தான் அரச அலுவலராக நியமனம் பெற்றுச் சேவையில் இணைந்து >> 24

## சிறைச்சாலை பஸ்மீது சூடு; அதிகாரி உட்பட 7 பேர் சாவு

### களுத்துறையில் நேற்றுக் காலை பயங்கரம் பொலிஸ் உடையில் வந்தோர் கைவரிசை




கொழும்பு, பெப். 28
களுத்துறையில் கைதிகளை இலக்கு வைத்து சிறைச்சாலை பேருந்து மீது நேற்று நடத்தப்பட்ட சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் கைதிகள் 5 பேரும் சிறைச்சாலை அதிகாரிகள் 2 பேருமாக 7 பேர் உயிரிழந்தனர் என்று >> 24

## தனயன் செலுத்திய பஸ் சில்லு ஏறி தந்தை சாவு

கொழும்பு, பெப். 28
தனயன் செலுத்திய பேருந்தின் சில்லில் அகப்பட்டு தந்தை உயிரிழந்த பரிதாபச் சம்பவம் அக்கரப்பத்தனை ஊற்று வெளியில் நேற்று இடம்பெற்றது என்று >> 04

## 28 நாள்களைக் கடந்து தொடரும் மக்கள் போர்

### பிலக்குடியிருப்பு மக்களுக்கு கிழக்கில் இருந்தும் ஆதரவு



முல்லைத்தீவு, பெப். 28
பிலக்குடியிருப்புக் காணி உரிமையாளர்கள் முன்னெடுத்துள்ள தொடர் அறவழிப் போராட்டம் முடிவுகள் ஏதும் கிடைக்காத நிலையில் 28 ஆவது நாளாக [illegible] >> 24

## விசாரணைக்கு 5 பொலிஸ் குழு

### தாக்குதலாளிகளின் வாகனமும் மீட்பு

கொழும்பு, பெப். 28
களுத்துறையில் சிறைச்சாலை வாகனம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக >> 24



## புதுக்குடியிருப்பிலும் அறப்போர் நீடிக்கிறது

முல்லைத்தீவு, பெப். 28
புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் உள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி காணி உரிமையாளர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடர்கிறது. >> 24

# ஐ.நா. புதிய செயலருடன் மங்கள நேற்று சந்திப்பு



ஜெனிவா, பெப். 28
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்குச் சென்றுள்ள அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, ஐ.நா.வின் பொதுச் செயலர் அன்டோனியோ குட்டரஸை நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34 ஆவது கூட்டத் தொடரின் ஆரம்ப உரை நிகழ்த்துவதற்காக பொதுச் செயலர் ஜெனிவாவுக்கு வருகை தந்திருந்தார். இதன் போதே இந்தச் சந்திப்பு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# மாகாண அரசுகள் பிரிவினை கோர புதிய அரசமைப்பு இடம் கொடாது

## சட்டவாட்சிக்கான அதிகாரங்களும் கொழும்பிடமே என்கிறார் ரணில்



மாகாண சபைகள் பிரிவினைவாதத்தைக் கோரு வது புதிய அரசமைப்பின் ஊடாகத் தடை செய் யப்படும். அத்துடன் சட்டவாட்சிக்கான அழுத் தத்தை ஏற்படுத்தும் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் முழுமையான அதிகாரம் கொழும்பு அரசின் நாடாளு மன்றமே கொண்டிருக்கும்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொட்டிகாவத்த நாகருக்காராம விகாரையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகாராத்தைப் பகிர்வது தொடர்பில் தற்போதைய அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. புதிய அரசமைப்பின் கீழ் அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்படும்.

உள்ளூராட்சி மன்றங்கள் மாகாண சபையின் கீழேயே செயற்படும். கிராம நிர்வாகம் கிராம இராச்சிய எண்ணக்கருவின் ஊடாக முன்னெடுக்கப்படும். பௌத்த மதத்துக்குப் புதிய அரசமைப்பின் ஊடான முக்கியத்துவம் குறைந்திருப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு பொய்யானது.

அரசியல் நிர்ணயச் சபையினால் நியமிக்கப்பட்டுள்ள வழிகாட்டல் குழுவினதும், உப குழுக்களினதும் அறிக்கைகளை விவாதத்திற்கு உட்படுத்தி, அங்கீகரிக்க வேண்டும் என்றார். (த-5)



# நிலங்களை அரசு விடுவிக்காவிடின் போராட்டங்கள் தீவிரமடையும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் எச்சரிக்கை

வவுனியா, பெப். 28
ஓரிரு தினங்களுக்குள் கேப்பாப்பிலவு, புலக்குடியிருப்பு ஆகிய இரண்டு பிரதேசங்களும் விடுவிக்கப்படா விட்டால், பெரும் மக்கள் போராட்டங்கள் வெடிக்கும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

வவுனியா - கற்குழிப் பகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று காலை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உக்கிரம் கொண்ட தமிழர் விடுதலைப் போராட்டம் முள்ளிவாய்க்கால் மண்ணில் மையம் கொண்டு கரையேறிய நிலமாகிய கேப்பாப்பிலவில் இன்று அகிம்சைப் போராட்டமாக வெடித்துள்ளது. இந்தப் பேர்ராட்டங்கள் இரு மையங்களில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கேப்பாபுலவு, புதுக்குடியிருப்பு என இரு மண் மீட்புப் போராட்டங்களும் மக்களால் அகிம்சை ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

புதுக்குடியிருப்பில் ஒரு தொகுதியினர் சுழற்சி முறையிலான தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கேப்பாப்பிலவில் தொடர் போராட்டம் நடக்கிறது. புதுக்குடியிருப்பில் 19 ஏக்கர் காணிகள். இது 49 பேருக்குரிய பரம்பரைக் காணிகள். அந்த மக்களின் நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருப்பது மட்டுமல்லாமல், அங்கிருக்கும் இராணுவ முகாம் மூலம் பாடசாலை மாணவர்கள் மீதான பகிடிவதைகள், பாலியல் சேட்டைகள், சிகரட் வியாபாரம் போன்ற நடைபெறுகின்றன. இவை எமது கலாசாரத்தைக் கெடுத்து வருகின்றன. இதை எதிர்த்து 2ஆயிரம் வரையிலான மாணவர்கள் ஒன்று சேர்ந்து புதுக்குடியிருப்பில் போராட்டம் ஒன்றையும் நடத்தியிருந்தார்கள்.

அதேபோல, கேப்பாபிலவு நிலத்தில் ஒட்டுமொத்தமான கிராமத்தையே இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளது. 600 ஏக்கருக்கு மேற்பட்ட பொதுமக்களின் காணிகள் அங்கு சுவீகரிக்கப்பட்டுள்ளன. சில காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இறுதியாக அரச தலைவரால் 243 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டும் அதனை நிறைவேற்ற இராணுவத்தினர் இன்றுவரை பின்னடித்து வருகிறார்கள்.

இந்த இரண்டு பிரதேசங்களும் விடுவிக்கப்பட வேண்டும். அதற்கு அரச தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (த-21)

# ஐ.நா. பரிந்துரைகளின் செயற்படுத்தலிலேயே முற்றாகத்தங்கியுள்ளது தமிழரின் பாதுகாப்பு

## கூட்டமைப்பு எம்.பிக்கள் எட்டுப் பேர் மனித உரிமை ஆணையாளருக்கு கடிதம்

கொழும்பு, பெப். 28
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் சொல்லப்பட்ட பரிந்துரைகளை இலங்கை அரசு முறையாக நடைமுறைப்படுத்தினால் மட்டுமே தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ள கூட்டமைப்பின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34 ஆவது கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமாகியது. இந்த நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல்ஹூசைனுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சீனித்தம்பி யோகேஸ்வரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், கவீந்திரன் கோடீஸ்வரன், தருமலிங்கம் சித்தார்த் தன், எஸ். வியாழேந்திரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கை அரசுக்கு இதுவரைக் காலமும் வழங்கப்பட்ட அவகாசத்தை மேலும் நீடிக்கக் கூடாது. ஐ.நா. மனித உரிமைகள் சபையினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை இலங்கை அரசு முறையாக நடைமுறைப்படுத்தினால் மட்டுமே தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம், ஐ.நா. மனித உரிமைகள் சபை உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புக்களின் கரிசனை தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு மிகவும் அவசியமாகும்.

இலங்கை அரசு இதுவரையிலும் தமிழ் மக்களின் உரிமைக்காகக் காத்திரமான விடயங்கள் எவையும் செய்யாதிருக்கும் போது, மேலுமொரு காலநீடிப்பு வழங்குவது தமிழ் மக்களின் பாதுகாப்பை மேலும் கேள்விக்குறியாக்கிவிடும். இதுவரை காலமும் வழங்கப்பட்ட அவகாசத்தில் எவ்வித முன்னேற்றகரமான விடயங்களும் மேற்கொள்ளப்படவில்லை. இதன்மூலம் இலங்கை அரசிடம் முறையான அரசியல் நிலைப்பாடொன்று இல்லை என்பது தெளிவாகின்றது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசின் முக்கிய தரப்பினர்கள் பலரும் ஐ.நா.வினால் பரிந்துரைக்கபட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த முடியாதெனவும் இந்தப் பரிந்துரைகளை ஏற்கமாட்டோம் எனவும் பொதுமக்கள் மத்தியில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தனர்.

இலங்கைக்குக் கால நீடிப்பு வழங்கப்படுமானால் அது போர்க் குற்றம், பாலியல் குற்றங்களைச் செய்யும் பிற நாடுகளுக்கு இலங்கையை முன்னுதாரணமாகவும் ஊக்கத்தையும் வழங்கிவிடும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லைஎன்றுள்ளது. (த-5)

# தனிப் பல்கலை கோரி இன்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 28
வவுனியா மாவட்டத்துக்குத் தனியான பல்கலைக்கழகம் அமைக்கக் கோரி இன்று இடம்பெறும் ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் அணி திரளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் தற்போதுள்ள பல்கலைக்கழக வளாகத்தைத் தனியான பல்கலைக்கழகமாக மாற்றக் கோரி இன்று இடம்பெறும் ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் அணி திரண்டு எதிர்கால மாணவச் செல்வங்களின் கல்விக்கு வித்திடவேண்டும். காலத்தின் தேவை கருதி அனைவரும் கரம் கோர்க்கவேண்டும்என்றார். (த-101)



அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் நேற்று இரவு 7.30 மணியளவில் உதயன் பத்திரிகை அலுவலகத்துக்கு வருகை தந்தனர். வடக்கு அரசியல் நிலமைகள், உதயனின் பணிகள் என்பன தொடர்பாக அவர்கள் கேட்டறிந்து கொண்டதுடன் உதயன் குழும தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவனுடன் கலந்துரையாடினர். (த-21)

வாகன விபத்தையடுத்து

## கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் மீது தாக்குதல்

எருவில், பெப்.28

மட்டக்களப்புகொழும்பு பிரதான வீதியில் ஓட்டமாவடி நாவலடிப் பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றை அடுத்து அங்கு ஏற்பட்ட அமைதியற்ற சூழ்நிலை காரணமாகக் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் நா.திரவியம் (ஜெயம்) தாக்கப்பட்டுள்ளார் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனையில் இருந்து வாகரைப் பிரதேசத்துக்குக் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் திரவியம் சென்ற வானும் நாவலடி பிரதேசத்தில் இருந்து ஏறாவூர் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் சிலரால் வானைச் செலுத்தி வந்த கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான திரவியம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

வாகனத்தில் மோதுண்ட எஸ்.எச்.வீதி மீராகேணி ஏறாவூரைச் சேர்ந்த அலியார் முஸாதீக்கீன் என்ற மீன் வியாபாரி (வயது-48) வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பாக வாழைச்சேனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-ய)



# வடக்கில் தொடர்கிறது காணாமற்போனோரை தேடும் போராட்டம்

உறுதியான பதில்கள் எதுவும் இதுவரை இல்லை

யாழ்ப்பாணம், பெப். 28

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை ஒப்படைக்குமாறுகோரி, அவர்களது உறவுகள் கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் முன்னெடுத்துள்ள போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.

கிளிநொச்சியில் 8ஆவது நாளாகவும், வவுனியாவில் 4 ஆவது நாளாகவும் இந்தப் போராட்டங்கள் நேற்றுத் தொடர்ந்தன.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கிளிநொச்சி மாவட்டத்தில் போர் இடம்பெற்ற காலத்தில் வலிந்து காணாமற்போனவர்கள், கடத்தப்பட்வர்கள், அரசியல்கைதிகள் மற்றும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் ஆகியோரின் விடுதலை, அவர்கள் பற்றிய தெளிவான வெளிப்படுத்தல் என்பவற்றை வலியுறுத்தி இரவு பகல் பாராது உறவுகள் இந்தத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போராட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர்

ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் சபை அமர்வில் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை தொடர்பாக அரசுக்கு மேலும் ஒரு கால நீடிப்பை வழங்கக்கூடாது எனவும் போராட்டக்காரர்கள் கோரியுள்ளனர்.

வவுனியாவில் நேற்று 4 ஆவது நாள் போராட்டம் மழைக்கு மத்தியிலும் இடம்பெற்றது. வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்கள அலுவலகத்துக்கு முன்பாக அவர்கள் சுழற்சி முறையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (த-46)

## ஐ.தே.கவுடன் கூட்டிணைந்து சு.கவை உடைக்கும் மகிந்த

அமைச்சர் அமரவீர குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 28

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுப்படுத்தத் தயாராகி வருகிறார் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தத்தின் பிரதிபலனாகவே புதிய கட்சியை ஆரம்பித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுப் படுத்தப் பார்க்கின்றார்.

முன்னாள் அரச தலைவர் கடந்த வாரம் சிங்கப்பூர் சென்றிருந்தபோது தலைமை அமைச்சர் ரணிலுடன் இரகசியமான பேச்சு ஒன்றையும் நடத்தியுள்ளார் என்றார். (த-10)

# போரில் பங்கேற்று அவயவங்களை இழந்தவர்களுக்கும் நலத்திட்டம் தேவை

வியாழேந்திரன் எம்.பி. வலியுறுத்து

எருவில், பெப்.28



போரில் நேரடியாகப் பங்கு கொண்டு அவயவங்களை இழந்த பலர், கிழக்கு மாகாணத்தில் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள். இவர்களுக்கான நலத் திட்டங்களை அதிகமாகக் கொண்டுவரவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

புனர்வாழ்வு அதிகார சபையின் கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற்றவர்களின் வாழ்வாதார உற்பத்திப் பொருள்கள் கண்காட்சி மற்றும் போரில் பாதிப்புற்றோருக்கான காசோலை வழங்கும் நிகழ்வு என்பவற்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு பாட்டாளிபுரம் மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு–கிழக்கு மாகாணங்கள் போரில் பெரும் அழிவைக் கண்டுள்ளன. உண்மையில் நாங்கள் பலவற்றை இழந்திருக்கிறோம். அனைத்தையும் இழந்த நிலையில் தான் வடக்கு- கிழக்கு மாகாணம் இருக்கிறது. வடக்கு-கிழக்கில் வாழுகின்ற மக்கள் மிகக் காத்திரமான பங்களிப்பைச் செய்து இந்த அரசைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே எமது மக்களின் பல்வேறுபட்ட இழப்புகளுக்கான நிவாரணங்கள் சரியான முறையில் வழங்கப்பட வேண்டும். இது குறித்து நாங்கள் வரவு-செலவுத்திட்டம் உட்பட பல விவாத ங்களில் பேசியிருக்கிறோம்.

ஏனைய மாகாணங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன ஒதுக்கீடுகளை விட, அதிகளவான நிதிகளை வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு ஒதுக்க வேண்டும். இங்குள்ள மக்களின் தேவைகள் மலைபோல் குவிந்து காணப்படுகின்றன. போரில் இறந்தவர்களுக்கான சரியான இழப்பீடுகளில்லை. போரில் நேரடியாகப் பங்கு கொண்டவர்கள் கைகளை இழந்தவர்கள், கால்களை இழந்தவர்கள் என்று பாதிப்புக்களைச் சந்தித்தவர்கள் கிட்டத்தட்ட 700க்கு மேற்பட்டவர்கள், இடுப்புக்குக் கீழ் இயங்க முடியாதவர்கள் என இழப்புக்களைச் சுமந்து நிற்பவர்கள் கிழக்கு மாகாணத்திலே இருக்கிறார்கள். இவர்களுக்கான நலத்திட்டங்களை அமைச்சர்கள் இந்த ஆட்சியிலே இன்னும் அதிகமாகக் கொண்டுவரவேண்டும் என்றார். (த-ய)





## ஐ.எஸ். ஊடுருவலை தடுக்கும் ஒத்திகை நேற்று மன்னாரில்

பங்கேற்றார் மைத்திரிபால

மன்னார், பெப்.28

ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஊடுருவலை முறியடிக்கும் விதத்திலான ஒத்திகை நிகழ்வு ஒன்று மன்னார் முள்ளிக்குளம் கடற்படைத் தளத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பங்கேற்றார்.

மன்னார் முள்ளிக்குளம் கடற்படைத் தளத்தில் சிறப்புப் பயிற்சியை பூர்த்தி செய்த கடற்படையினருக்கு இலட்சினை அணிவிக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. அரச தலைவர் மைத்திரிபால சிரிசேன் கலந்து கொண்டு இலட்சினையை அணிவித்தார்.

இதனைத்தொடர்ந்து முள்ளிக்குளம் கடற்படைத்தளத்தில் சிறப்பு ஒத்திகை நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு கடற்கரைப் பகுதியில் சிலரைப் பிடித்துப் பணயக்கைதிகளாக வைத்திருப்பதையும், அதனைக் கடற்படை, விமானப்படை மற்றும் இராணும் இணைந்து முறியடிப்பதாகவும் குறித்த ஒத்திகை நிகழ்வு அமைந்தது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் ரூவான் விஜயவர்த்தன ஆகியோர் குறித்த ஒத்திகை நிகழ்வைப் பார்வையிட்டனர். இதன்போது கடற்படைத் தளபதி உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-56)

## துப்பாக்கிச் சூட்டில் வர்த்தகர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 28

குருநாகல்மா-வத்தகமையில் இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 65 வயதான வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மாவத்தகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்பொத்த சந்தியில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் நடைபெற்றது. உயிரிழந்தவர் ஹிந்தகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த வீரசேகர என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் குருநாகல்-கண்டி வீதியில் கெட்வானையிலுள்ள தம் மதுபானசாலையை மூடிவிட்டு நண்பருடன் வீடு சென்றுள்ளார். நண்பனின் இல்லம் வந்தவுடன் அவரை இறக்கிவிட்டு வர்த்தகர் வாகனத்தைச் செலுத்துவதற்காக இறங்கியவேளை மோட்டார் சைக்கில் வருகை தந்த இருவர் கையிலுள்ள பணத்தை தருமாறு கேட்டுள்ளனர். பணத்தை வழங்க அவர் மறுத்தமையால் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

வர்த்தகரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக குருநாகல் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-10)

## தவக்காலம் நாளை ஆரம்பம்

கொழும்புத்துறை.பெப்.28

கிறிஸ்தவர்கள் வருடாந்தம் அனுசரிக்கும் தவக்காலத்தின் ஆரம்பநாளான திருநீற்றுப் புதன் நாளை முதலாம் திகதி புதன்கிழமை இடம்பெற வுள்ளது.

அனைத்துக் கிறிஸ்தவ ஆலயங்களிலும் காலைத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித சாம்பலால் பக்தர்களின் நெற்றியில் "மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்ற உச்சாடனத்துடன் ட்குருவானவர் சிலுவை வரைதலுடன் சிறப்பு வழிபாடுகளும் இடம்பெறும். (த-135)

## மகனின் வாகனச் சில்லில் சிக்கித் தந்தை உயிரிழப்பு

கொழும்பு, பெப் 28

அக்கரப்பத்தனை ஊற்றுவெள்ளிப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் பஸ் சில்லில் அகப்பட்டு நேற்று மாலை 5.40 மணியளவில் உயிரிழந்துள்ளார் என அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பஸ்ஸை அவரது மகன் தனது வீட்டில் நிறுத்துவதற்காக பின்னோக்கிக் கொண்டு செல்லும்போது அவரது தந்தை பின் சில்லில் அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தின்போது பஸ் நடத்துனர் இருக்கவில்லையெனவும் இந்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளதாகவும் அக்கரப்பத்தனைப் பொலிஸார் கூறினர். (த)

சிறுப்பிட்டிக் கொலை;

## 9 சிப்பாய்களின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு

கொழும்பு, பெப. 28

சிறுப்பிட்டிக் கொலை வழக்கில் கைது செய்யபட்ட இராணுவத்தினர் 9 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் மார்ச் மாதம் 13ஆம் திகதி வரை

>> 24

## மறைந்த சாந்தனின் இறுதிப் பயணம் இன்று



மறைந்த புரட்சிப் பாடகர் எஸ். ஜி.சாந்தனின் உடலம் மக்களின் அஞ்சலிக்காக நேற்று மாங்குளத்தில் வைக்கப்பட்டது. அவரது இறுதிக் கிரியைகள் கிளிநொச்சியில் இன்று இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஈழத்தின் புரட்சிப் பாடகர் சாந்தன் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். சிறுநீரகங்கள் இரண்டும் செயலிழந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார். அவருடைய உடலம் உறவினர்களால் பொறுபேற்கப்பட்டு யாழ்ப்பாணம் ஓட்டுமடத்திலுள்ள மலர்ச்சாலையில் வைக்கப்பட்டது. அதன் பின்னர் மாங்குளத்துக்கு எடுத்துவரப்பட்டது. மாங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் வைக்கப்பட்டு அஞ்சலிக்கப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கலைஞர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதனை அடுத்து அவருடைய உடலம் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் பாண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதைகளுடன் ஏ9 சாலை வழியாக கிளிநொச்சிக்கு எடுத்துவரப்பட்டு கிளிநொச்சி விவேகானந்தா நகரில் உள்ள பாடசாலை ஒன்றில் வைக்கப்பட்டு அஞ்சலிக்கப்பட்டது. அவரது இறுதிக் கிரியைகள் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபை வளாகத்தில் இன்று உணர்வெழுச்சியாக நடைபெறவுள்ளன. (வ-21-7)



## சம்பந்தனின் கருத்து முட்டாள்தனமானது

சாடுகின்றார் சுரேஸ்

கொழும்பு, பெப், 28

ஒட்டுமொத்த தமிழ் மக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இலங்கை அரசுக்கு ஐ.நா. கால நீடிப்பு வழங்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் இருக்கும் போது சம்பந்தன் நிபந்தனையுடன் கால அவகாசம் வழங்கவேண்டும் என்று தெரிவித்திருக்கும் கருத்து மிக மிக முட்டாள்தனமானது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை நேற்றுத் திங்கட்கிழமை மாலை சந்தித்து கலந்துரையாடிய பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒட்டுமொத்த தமிழ் மக்களும் கால அவகாசம் வழங்குவதை மறுத்திருக்கின்றார்கள். ஏற்கனவே இருந்த ஒன்றரை வருட காலத்தில் ஒரு துரும்பையும் அசைக்காதவர்கள், பன்னாட்டு நீதிபதிகளை அனுமதிக்க மறுத்தவர்கள், ஐ.நாவில் ஒப்புக்கொண்ட விடயங்கள் எதனையும் நடைமுறைப்படுத்தாதவர்கள் இனிவரும் ஒன்றரை வருட கால அவகாசத்தில் எதைச் செய்யப் போகின்றார்கள்.

இராணுவத்தை விசாரிக்க முடியாது. பன்னாட்டு நீதிபதிகளை அனுமதிக்க முடியாது. விசாரணைக் குழுவை அமைக்க முடியாது என்றால் அதற்குப் பிற்பாடு கால அவகாசம் எதற்கு? இது சம்பந்தனுக்கு விளங்கவேண்டும்.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரைவாசி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ.நா. இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்கக்கூடாது என்று கடிதம் எழுதி அனுப்பியிருகின்றர்கள். பல மாகாண உறுப்பினர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் கால அவகாசம் வழங்கக் கூடாது என்று கூறியுள்ளனர். எனவே சம்பந்தன் இதனை விளங்கிக்கொண்டு கால நீடிப்பு வழங்கக்கூடாது என்று வெளிப்படையாக உலக அரங்குக்கும் ஐ.நாவுக்கும் அறிவிக்க வேண்டும்.

இலங்கை அரசு எமது உறவுகளைத் தேடித் தராது. தம்மைத் தொடர்ந்து ஏமாற்றி வருகிறது என்பதை மக்கள் உணர்ந்திருக்கின்றார்கள். எனவே தான் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பன்னாட்டு விசாரணை என்பது மிக மிக அவசியம் என்பது உணரப்பட்டுள்ளது என்றார். (த)

### 3 தினங்களுள்...

வான் படையினர் வசமுள்ள தமது சொந்தக் காணிகளை விடுவிக்கக் கோரி முல்லைத்தீவு மாவட்டத்தின் பிலக்குடியிருப்புப் பிரதேசத்தில் கடந்த 28 நாள்களாகப் போராட்டத்தை மக்கள் முன்னெடுத்து வருகின்றனர். பிலக்குடியிருப்பில் 84 குடும்பங்களின் காணிகள் வான் படையினர் வசமுள்ளன. இதை முல்லைத்தீவு மாவட்டச் செயலர் உறுதிப்படுத்தியுள்ளார். வான் படையினர் வசமுள்ள காணிகளின் உறுதிப் பத்திரம் மக்களிடம் உள்ளது. இந்தக் காணிகளை விடுவிக்குமாறு கோரியே மக்கள் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அரச தலைவருடன் இன்று (நேற்று) நாம் நடத்திய நேரடிக் கலந்துரையாடலின்போது, வான்படைத் தளபதிக்கு அரச தலைவர் அழைப்பை ஏற்படுத்தி பிலக்குடியி ருப்பு மக்களின் காணிகளை எதிர்வரும் இரண்டு, மூன்று தினங்களுக்குள் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார்.

பிலக்குடியிருப்பு மக்களைப்பொறுத்தமட்டில் அவர்களுக்கு வேறு இடமொன்றில் காணிகள் வழங்கப்பட்டு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் அங்கு வேண்டும் என்றாலும் தங்கலாம். இல்லாவிடின் அந்தக் காணிகளை வீடுகளை அரசிடம் ஒப்படைத்துவிட்டு தமது பூர்வீக இடத்துக்கு அவர்கள் வரலாம் என்று அரச தலைவர் கூறினார். இது தொடர்பில் மக்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பிலும் 49 குடும்பங்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணிகள் இராணுவத்தினர் வசமுள்ளன. அவற்றின் காணி உறுதிப் பத்திரங்களும் முல்லைத்தீவு மாவட்டச் செயலரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் காணிகளை விடுவிக்குமாறு கோரியும் கடந்த 25 நாள்களாக அப்பகுதி மக்கள் போராடி வருகின்றனர். அந்தக் காணிகளையும் விடுவிக்கும்படி அரச தலைவரிடம் கோரினோம். அத்துடன் மக்கள் தங்களுடைய சொந்தக் காணிகளில் கால் பதிக்கும்வரை அவர்களுடைய போராட்டம் தொடரும் என்பதை உறுதியாகத் தெரிவித்துள்ளனர் என்பதை அரச தலைவரிடம்எடுத்துக் கூறினோம்.

அரச தலைவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அழைப்பை ஏற்படுத்தி எதிர்வரும் இரண்டு, மூன்று தினங்களுக்குள் இராணுவத்தினர் வசமுள்ள புதுக்குடியிருப்பு மக்களின் காணிகளை விடுவிக்கும்படி உத்தரவிட்டார். எதிர்வரும் 4 ஆம் திகதி அரச தலைவர் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இதற்கு முன்னர் இந்த விவகாரங்கள் தீர்க்கப்பட்டிருக்கவேண்டும் என்று உரிய அதிகாரிகளிடம் அரச தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

எமது கோரிக்கைக்கு இணங்க இராணுவத்தினர் வசமுள்ள கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்குச் சொந்தமான ஒரு பகுதி காணியையும் விடுவிப்பதாகவும் அரச தலைவர் எம்மிடம் உறுதியளித்தார் என்றார். (த-5)

### தனயன்...

பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது. குறித்த பேருந்தை மகன் தனது வீட்டில் நிறுத்து வதற்காக பின்னோக்கிக் கொண்டு செல்லும் போது, அவரது தந்தை பின் சில்லில் அகப்பட்டு உயிரிழந்தார். அந்தநேரம் பேருந்து நடத்துனர் பேருந்தில் இருக்கவில்லை என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

### கண்கண்ட...

அறிவிக்கப்பட்டது. ஊர்காவற்றுறையில் கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஒரு பிள்ளையின் தாயும் ஏழு மாதக் கர்ப்பிணியுமான ஞானசேகரன் மேரிறெம்சிகா (வயது 27) என்ற பெண் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கொடூரக் கொலைச் சம்பவத்தை கண்ணால் கண்டதாக 12 வயதுச் சிறுவன் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்திருந்தான். கடந்த 22ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் 16 பேர்களுக்கு மத்தியில் இரு சந்தேகநபர்களையும் சிறுவன் அடையாளம் காட்டியிருந்தான்.

"அன்று மாலை மோட்டார் சைக்கிளில் நீல நிற தலைக்கவசம் அணிந்த நபர் ஒருவர் எனது மகனை அழைத்து உனது கழுத்தை வெட்டுவேன் என சைகை மூலம் கூறி விட்டு தப்பிச் சென்றுள்ளார்" என்று சிறுவனின் தாயார் தெரிவித்தவிடயம் மன்றின் கவனத்துக்கு நேற்றுக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தக் கொலையை அடுத்து இணையத்தளங்கள் சிலவற்றில் வெளியான செய்தி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறும் நீதிமன்றில் கோரப்பட்டது. அதனை விசாரிக்குமாறு நீதிமன்று பொலிஸாருக்குக் கட்டளையிட்டது.

மட்டக்களப்பைச் சேர்ந்த சகோதர இனத்தைச் சேர்ந்த ஒருவரை குறித்த கொலையுடன் தொடர்புபடுத்தி இணையங்களில் செய்தி வெளியாகியிருந்தது. அந்த நபர் தேடப்படுகிறார் என்றும் கூறப்பட்டது. எனினும் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று இணையத்தளச் செய்திக்கு எதிராக முறையிட்டிருந்தார்.

"கொலைச்சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்தவேளை, ஒரு பெண்ணும் மற்றுமொரு நபரும் சந்தேகநபர்களுடன் முச்சக்கர வண்டியில் பயணித்து உள்ளனர். அவர்கள் இருவரையும் பொலிஸார் எந்த அடிப்படையில் விடுதலை செய்தனர். முச்சக்கர வண்டியை நீதிமன்றில் பாரப்படுத்தாது எந்த அடிப்படையில் பொலிஸார் விடுவித்தனர். இவை தொடர்பிலும், விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்" என்று படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் உறவினர்கள் நலன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி க. சுகாஸ் மன்றில் விண்ணப்பம் செய்தார்.

பாதிக்கப்பட்ட தரப்பினரின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட நீதிவான் அது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்த வழக்கிலுள்ள சந்தேக நபர்கள் இரண்டுபேரையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தரவிட்டார். (வ-4-37)

### மோசடிக்...

வடக்கு மாகாணத்தின் அமைச்சர்கள் மீது ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இதில் அமைச்சர்களான ஐங்கரநேசன், குருகுலராஜா மற்றும் சத்தியலிங்கம் ஆகியோரிடம் கடந்த வாரம் விசாரணை நடத்தப்பட்டது. இந்த நிலையில் அமைச்சர் டெனீஸ்வரன் மீது சுமத்தப்பட்ட குற்ற ச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைக் குழுவினர் நேற்றுமுன்தினம் அவரை நேரில் அழைத்து வாக்குமூலத்தைப் பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதன்போது குறித்த அமைச்சர் டெனீஸ்வரன் மீது 5குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. அவற்றின் அடிப்படையில் அவற்றுக்கான பதிலை அமைச்சர் வழங்கினார்.

* மர நடுகை காலத்தில் இ. போ. சபைக்குச்சொந்தமான பேருந்தை தவறான ஒப்பந்தத்தின் கீழ் பயன்படுத்தியமை தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு மர நடுகையோ அல்லது இ.போ.சபையோ தனது அமைச்சுக்கு உட்பட்டதல்ல என்று அவர் பதிலளித்தார்.

* வடக்கு மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி வீதிகள் சீரமைக்கப்படுவதான குற்றச்சாட்டுத் தொடர்பில் அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட அத்தனை வீதிகளுக்குமான அனுமதியின் பிரதிகள் அமைச்சரால் முன்வைக்கப்பட்டன.

* வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையங்கள் அனுமதி இன்றியும் பொருத்தமற்ற இடங்களிலும் அமைக்கப்பட்டமை தொடர்பில் கேட்கப்பட்டது. திட்டத்துக்கான அனுமதி சமர்ப்பிக்கப்பட்டதோடு இடத் தேர்வுகள் பிரதேச மக்களின் வேண்டுகோளின் பேரில் உள்ளூராட்சி சபைகளின் பரிந்துரையின் அடிப்படையிலேயே கட்டப்பட்டது என்று அமைச்சர் டெனீஸ்வரன் பதிலளித்தார்.

* போராளி , மாவீரர் குடும்பங்களுக்கான உதவிகளின்போது சரியான முறையில் தேர்வு இடம்பெறவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு, குறித்த விடயம் அமைச்சின் ஊடாகவே நடைமுறைப்படுத்தப்பட்டது என்று அமைச்சரால் பதிலளிக்கப்பட்டது.

* நன்னீர் குளத்தில் மீன் குஞ்சுகள் விடுவதில் பல குளங்கள் உள்வாங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு, தேசிய நீரியல் உயிரியல் அதிகார சபையின் கீழ் பதிவில் உள்ள குளங்களுக்கு மட்டுமே மீன் குஞ்சுகள் விடமுடியும். அந்த நடைமுறையே பின்பற்றப்படுவதாக அமைச்சர் பதிலளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101)

## மரண அறிவித்தல்

### திருமதி பூரணம் (செங்கமலம்) தர்மபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற முன்னாள் ஆசிரியை மா/பாக்கிய வித்தியாலயம் மாத்தளை, யாழ். மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை பருத்தித்துறை, யாழ். வட்டு இந்து கல்லூரி வட்டுக்கோட்டை) பருத்தித்துறை தம்பசிட்டி வர்ண குடியிருப்பைப் பிறபிடமாகவும், வட்டு தெற்கு வட்டுகோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் (செங்கமலம்) தர்மபாலசிங்கம் 27.02.17 திங்கட்கிழமை அன்று காலமானார் அன்னார் காலஞ் சென்றோரான சபாபதிப்பிள்ளை சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் தம்பையா (கட்டட ஒப்பந்தகாரர்) - செல்லம்மா தம்பதியினரின் மருமகளும், திருமதி தம்பையா இரத்தினத்தின் மருமகளும், தம்பையா தர்மபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றோரான செல்வநாயகம் (அதிபர்), திருமதி தங்கராஜா மனோன்மணி, திருமதி வேலுப்பிள்ளை இராசமணி, திருமதி ஆழ்வார்ப்பிள்ளை பவளநாயகி (ஆசிரியை), திருமதி பசுபதி மரகதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 28.02.17 செவ்வாய்க்கிழமை பி.பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக வட்டுக்கோட்டை கொத்துத்துறை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு தெற்கு வட்டுக்கோட்டை
0772607785

தகவல்:
தர்மபாலசிங்கம் (கணவர்)

### மாணவி மீது துர்நடத்தை முயற்சி

# கில்லாடி குடும்பத்தலைவர் மறியல் சாலையில் தடுப்பு

தென்மராட்சி, பெப். 28

மாணவி மீது துர்நடத்தைக்கு முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குடும்பத்தலைவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்று நேற்று உத்ரவிட்டது.

15 வயது பாடசாலை மாணவி ஒருவரை சந்தேகநபர் பற்றைக்குள் கூட்டிச் சென்றுள்ளார். இதனை ஊரவர்கள் அவதானித்தனர்.

மாணவி மீது அவர் துர்நடத்தைக்கு முயன்றவேளை ஊர்மக்கள் திரண்டு சந்தேகநபரைப் பிடித்து முறையான கவனிப்பின் பின்னர் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.


விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபரை சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர். இந்தச் சந்தேகநபர் பருத்தித்துறை நீதிவான் மன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதனால் அவர் வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தார்.

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணை சந்தேகநபர் திருமணம் செய்துள்ளார். இந்த நிலையில் அவருக்கு ஒரு குழந்தையும் பிறந்துள்ளது.அந்தப்பெண்ணைக் கைவிட்டு வேறொரு பெண்ணை அவர் திருமணம் செய்துள்ளார். இதனால் முதல் மனைவி தாபரிப்புக் கோரி பருத்தித்துறை நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் தாபரிப்புப் பணம் செலுத்துமாறு குடும்பத் தலைவருக்கு உத்தரவிட்டது. தாபரிப்புப் பணம் வழங்குவதில்லையென முதல் மனைவியால்நீதிமன்றில்முறையிடப்பட்டது. அத்துடன், அவர் மன்றின் வழக்குத் தவணைகளில் முன்னிலையாகாமல் தலைமறைவாகி இருந்துள்ளார். இதனால் சந்தேகநபருக்கு எதிராகப்பிடியாணை பருத்தித்துறை நீதிவான் மன்றினால் பிறப்பிக்கப்பட்டது.

இந்த நபர் தலைமறைவாக வாழ்ந்து மேசன் வேலைக்குச் சென்று வருகிறார். தென்மராட்சி கிழக்குப் பகுதியில் தொழிலுக்குச் சென்ற 24 வயதுடைய குடும்பத் தலைவரான அவர் அங்கு 15 வயது மாணவியை காதலிப்பதாக ஆசை வார்த்தை பேசி வந்துள்ளார். அந்த மாணவியை அழைத்துக் கொண்டு நேற்றுமுன்தினம் பகல் வேளை பற்றைக்குச் சென்றுள்ளார். இருவரையும் அந்த ஊர்மக்கள் அவதானித்துள்ளனர். இதனால் வசமாக மாட்டிக் கொண்ட குடும்பத்தலைவர் ஊர்மக்களால் நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

மாணவி மீது துர்நடத்தை முயற்சி மற்றும் தாபரிப்பு வழக்கு தொடர்பாக பருத்தித்துறை நீதிவான் மன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் என்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து சந்தேகநபரை சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று கொடிகாமம் பொலிஸார் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் முதல் குற்றச்சாட்டுக்கு எதிர்வரும் பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன், இரண்டாவது குற்றச்சாட்டுக்காக சந்தேநபரை எதிர்வரும் 8ஆம் திகதி பருத்தித்துறை நீதிவான் மன்றில் முற்படுத்துமாறும் சிறைச்சாலைக்கு உத்தரவிட்டார். (வ-9)



# சாவ. வைத்தியசாலை வளாகத்தில் குரங்குகளால் பெரும் தொல்லை

### மருத்துவர் விடுதிக் கூரைத் தட்டுக்களுக்குச் சேதம்

சாவகச்சேரி, பெப். 28

சாவகச்சேரி வைத்தியசாலையில் குரங்குகளின் அட்டகாசத்தால் கட்டடக் கூரையின் அடித்தளத்துக்குக் கடும் சேதம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி வைத்தியசாலை ஆறாம் விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

விடுதியில் உள்ள மருத்துவர் ஓய்வு அறையில் தங்கியிருந்த மருத்துவர் நோயாளி ஒருவரைப் பார்வையிடச் சென்ற வேளையில் விடுதிக் கட்டடத்தினுள் சுமார் 25 குரங்குகள் கூரையின் அடித்தளத்துக்குள் புகுந்துள்ளன. அவை அங்கு பாய்ந்து திரிந்துள்ளன. அப்போது மருத்துவரின் அறையின் தட்டைத் தகட்டின் மீது பாய்ந்தபோது அங்கு பொருத்தப்பட்டிருந்தகம்பிவளைந்து அனைத்து தட்டைத் தகடுகளும் (லெவல்சீற்) உடைந்து அறைக்குள் விழுந்தன.

கடமையிலிருந்த மருத்துவர் உள்ளிட்ட பணியாளர்கள் ஓடிவந்து பார்த்தபோது அறைக்குள் நொருங்கிய நிலையில் தகடுகள் காணப்பட்டன. எனினும் குரங்குகள் வெளியே பாய்ந்து சென்றுவிட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சாவகச்சேரி வைத்தியசாலை வளாகத்தில் உள்ள மருத்துவர்களின் வதிவிட விடுதிக்குள் நுழைந்த குரங்குகள் அங்கும் அட்டகாசம் புரிந்ததில் மருத்துவ அதிகாரியின் விடுதியின் பல தட்டைத் தகடுகள் உடைந்து நொருங்கின என்று தெரிவிக்கப்பட்டது.

கட்டம் அமைக்கப்பட்டபோது அறைகளின் தட்டைத் தகடுகள் மரங்களுக்குப் பதிலாக கம்பிகளில் பொருத்தப்பட்டதால் குரங்குகளின் பாரம் தாங்காமல் அவை உடைந்து போயுள்ளன என்று குற்றஞ்சாட்டப்பட்டது. (வ-9)

### சாவகச்சேரி நகர சபையால்

# ஆதனங்களுக்கு இலக்கங்கள் பொருத்தும் பணி ஆரம்பம்

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து ஆதனங்களுக்கும் ஆதன வரி இலக்கத் தகடுகள் பொருத்தும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

நகர சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள், சாவகச்சேரி அஞ்சல் அதிபர் ஏ.ஆர். லம்பேர்ட் ஆகியோர் கலந்து கொண்டு மாபிள்களிலான இலக்கத் தகடுகளைப் பொருத்தி திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.



சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி வாரத்தில் மேற்கொள்ள்ப்படவிருந்த ஆதனங்களுக்கு இலக்கத் தகடுகள் பொருத்தும் பணி தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

'இலக்கத் தகடுகள் சபை எல்லைக்குட்பட்ட வெற்றுக் காணிகள் தவிர்ந்த குடியிருப்புகள், வியாபார நிலையங்கள் உள்ளிட்ட 12 ஆயிரம் ஆதனங்களுக்கும் பொருத்தப்படும். 2009ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மீளாய்வின் போது வழங்கப்பட்ட இலக்கங்கள் அமைவாக மாபிளில் தயாரிக்கப்பட்ட இலககத் தகடுகள் பொருத்தப்படுகின்றன' என்று சாவகச்சேரி நகர சபைத் தலைவர் தெரிவித்தார். (வ-9)

**ஆண் சமையல்காரர் தேவை**

வவுனியாவில் அமைந்துள்ள சைவ உணவகம் ஒன்றிற்கு தென் இந்திய முறையில் நன்றாக சமைக்க நன்கு அனுபவம் உள்ள ஆண் சமையல் காரர்தேவை. தங்கும் இட வசதி உண்டு. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்பு - 077 469 2911

**ஆள்கள் தேவை**

மிக்சர் கொம்பனி ஒன்றிற்கு வேலை செய்வதற்கு அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை.
076 537 5779

**தேவை**

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.
மார்பியன் மில், சுதுமலை, மானிப்பாய்.
077 772 2215

**தவறிவிட்டது**

A9 வீதி. கரடிப்போக்கு சந்திக்கும் திருவையாற்றுக்கும் இடையில் சாரதி அனுமதிப்பத்திரம் (A009236451) உட்பட கைப்பை ஒன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் இம் முகவரியுடனோ அல்லது தொலை பேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்
076 985 6954 திலஜ் மொபைல் சொப், நீதிமன்றம் அருகில், கிளிநொச்சி

**சிறுநீரகம் தேவை**

48 வயதுடைய A+ வகைக் குருதி உடைய ஒருவருக்கு O+ அல்லது A+ வகைக் குருதி உடையவரின் சிறுநீரகம் தேவை.
077 408 5397, 077 006 5028

**வேலைவாய்ப்பு**

நல்லூரில் இயங்கும் பிரபல விருந்தினர் விடுதிக்கு பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உள்ளன. கீழ்வரும் முகவரிக்கு காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 இற்குள் கிராம அலுவலரின் நற்சான்றிதலுடன் சமுகமளிக்கவும்.

1. சமையல் ஆள்-02
2. Room Boy -01
3. தோட்ட பராமரிப்பாளர்(பகுதி நேரம்)-01

இல 45, செட்டித்தெருலேன், நல்லூர்.
021 222 6476

**வேலையாள்கள் தேவை**

சுழிபுரத்தில் அமைந்துள்ள இந்திராஸ் ஏஜென்சி (கொக்கக்கோலா) இற்கு சாரதி. விநியோகத்தர். விற்பனை உதவியாளர் (லேபர்). அலுவலகப்பணியாளர் தேவை. சுயவிவரத்துடன் 01.03.2017 புதன்கிழமை காலை 11.00 மணிக்குச் சமுகமளிக்கவும்
077 045 8955, 021 567 1500

**வாடகை அடிப்படையில் கட்டடம் கோரல்**

பனை அபிவிருத்திச் சபையின் வவுனியா மாவாட்டக் காரியாலயம் , களஞ்சியசாலை. உற்பத்தி நிலையம் என்பனவற்றிற்குப் பொருத்தமான 2000 சதுர அடிக்கு அதிகமான பரப்பளவு கொண்டதும் வாகனத் தரிப்பிட வசதியுடன் வவுனியா பழைய பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து 2km தூரத்திற்கு உட்பட்ட பொருத்தமான கட்டடம் தேவை. தொடர்புகளிற்கு மாவட்ட முகாமையாளர் பனை அபிவிருத்திச் சபை மாவட்டக் காரியாலயம் இல.67 பசார் வீதி.வவுனியா என்ற முகவரிக்கு 08.03.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்கவும்.

மாவட்ட முகாமையாளர்
பனை அபிவிருத்திச் சபை
வவுனியா . 077 889 9949

**வேலையாள்கள் தேவை**

எமது நிறுவனத்துக்கு அனுபவமுள்ள மேசன், கூலியாள்கள், தச்சுத்தொழிலாளி. Welder, Painter, Electrician, Tiler கல் அரிபவர்கள் மற்றும் Sub Contractors உடனடியாக யாழ்ப்பாணத்தில் வேலை செய்வதற்குத் தேவை.
EIM
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
075 912 1759

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

19.02.2017 அன்று BMICH கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற



பட்டமளிப்பு விழாவில்
B.Sc in MIT
பட்டம் பெற்ற
**தர்சிகாவுக்கு**




மகேந்திரன் தர்சிகா
( B.Sc in MIT )

**பட்டம் பெற்ற பதுமைக்கு ஓர் பாராட்டு மடல்**
பாரினில் நீ ஜெயம் கொள்ளத்தான் பிறந்தாயோ?
பாதி பூத்த மலர் தூவி உன்னை பாதம் வரைக்கும்
நனைத்திடல் வேண்டும்
இந்தநாள் உன்னால் எத்தனை பெருமை கொள்கின்றது
இந்தநாள் உன்னால் இன்பம் பொங்கிறது
பலநூலும் கற்று நீயின்று பட்டமும் பெற்றாய்
பாவை உனை நாங்கள் மேடைதனில் காணும் கணங்கள்
பரவசம் கண்டோம் நீ நீடூழி வாழ்க
உன் நிறைவான கல்வி நித்தியமும் வாழும்

வாழ்த்துவோர் :- நண்பர்கள் சார்பாக
Shifani

# வறட்சியை எதிர்கொண்ட விவசாயிகளுக்கு இலவசமாக விதைகள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், பெப் .28

வறட்சியை எதிர்கொள்ளும் வகையில் விவசாயி களுக்கு பயிரினங்கள் வழங்குவதற்கு முதற்கட்டமாக கொழும்பு அரசு 1.4 மில்லியன் பெறுமதியான விதைகளை இலவசமாக வழங்கவுள்ளது என்று யாழ்ப்பான மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரி வித்தன.

இந்த முறை வறட்சி காரணமாக ஏராளமான விவசாயிகள் பாதிப் படைந்துள்ளனர்.

பொதுவாக மரக்கறிச் செய்கையாளர்கள், நெற் செய்கையாளர்கள் பெருமளவில் பாதிப்படைந்துள்ளனர். வறட்சி காரணமாக மாவட்டத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும். அதனை நிவர்த்தி செய்யும் முகமாக விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

ஒரு மில்லியன் பெறுமதியான இந்தத் திட்டம் கொழும்பு அரசின் உதவியுடன் மேற்கொள்ளப் படவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பான மாவட்ட விவசாயிகளுக்கு குரக்கன், எள்ளு, வத்தாளை, உளுந்து,பயறு,கௌப்பி போன்ற விதைகள் முதற் கட்டமாக வழங்கப் படவுள்ளன.

இந்த உதவித் திட்டத்தின் மூலம் வறட்சியான காலப் பகுதியிலும் இந்த விதைகள் மூலம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு உணவுத் தட்டுப் பாட்டிலிருந்து ஓரளவு விடுபட முடியும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

அத்துடன் இந்த திட்டத்துக்கு தேவையான நிதி அரச தலைவர் செயலகத் தால் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆகவே இலவசமாக விதைகள் வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன் விவசாயிகள் மற்றும் பய னாளிகள் கமநல சேவைகள் திணைக்களம், பிரதேச செயலகங்கள் ஊடாக இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

# கூட்டமைப்பின் அறிக்கை கடும் அதிர்ச்சியளிக்கிறது

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கம் கடும் கண்டனம்

பொறுப்பு கூறும் விடயத்தில் ஐ.நா. இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்கக்கூடாது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை அரசு உடன் வெளிப் படுத்தவேண்டும் என நாங்கள் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வரும் நிலையில், நிபந்தனையுடன் கால அவகாசம் வழங்க வேண்டும் என்று கூட்டமைப்பின் தலைவர் விடுத்துள்ள அறிக்கை எமக்குக் கடும் அதிர்ச்சியையும், மன வருத்தத்தையும் அளிக்கிறது எனக் கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் உப தலைவி ஆனந்தநடராஜா லீலாதேவி தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது: வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளான நாங்கள் தொடர் போராட்டத்தை மேற் கொண்டு வருகின்றோம். எங்களின் போராட்டத்தின் நோக்கம் ஐ.நா. இலங்கை அரசைக்கொண்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை வெளிப்படுத்த வேண்டும் என்பதே.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நிபந்தனையுடன் கால அவகாசம் வழங்க வேண்டும் என்று அறிக்கை விடுத் திருப்பது எமக்கு அதிர்ச்சியளிக் கிறது.

எம்முடன் கலந்தாலோசிக்காது எங்களின் உணர்வுகளைப் புரிந் துகொள்ளாது இவ்வாறு அறிக்கை விட்டுள்ளார்கள். தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எம்மை, வந்து சந்திக்க முடியாதவர்கள் அறிக் கையை மட்டும் விட்டுள்ளார்கள். எம்மைப் பற்றிக் கருத்து வெளியிடுவதற்கு முன்னர் சம்பந்தன் ஐயா தனது பிரதிநிதிகளை அனுப்பி எமது கருத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்றார். (த)

# இருபாலை கிழக்கு மக்களுக்கு சீரான குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.28

'இருபாலை கிழக்கு பிரதேசத்துக்கு நிலத்தடி குழாய் மூலம் குடிதண்ணீரை வழங்குவ தற்கான நீர்த் தாங்கி கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது. அந்தத் தாங்கிலிருந்து பரீட்சாத்தமான குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது'

இவ்வாறு வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார்.

'இருபாலை கிழக்கு பிரதேச மக்களுக்கு இதுவரை பவுசர் வாகனம் மூலம் குடிதண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டது. அந்தப் பகுதிக்கு மக்களுக்கு சீரான குடிதண்ணீர் விநியோகம் நிலத்தடி குழாய் மூலம் விரைவில் இடம்பெறும்' என்று பிரதேச சபைச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (வ17)

# இருவேறு விபத்துக்களில் மூவர் படுகாயம்

தென்மராட்சி, பெப். 28

தென்மராட்சி பிரதேசத்தில் ஏ - 9 சாலையில் இடம்பெற்ற இரு விபத்துக்களில் மூவர் படுகாயடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த 73 வயதுடைய வயோதிபர் உணவருந்த சபாரி மோட்டார் சைக்கிளில் சாவகச்சேரி நகருக்குப் பயணித்துள்ளார். அவர் நுணாவில் சந்திக்கு அண்மித்த பகுதியில் வேகக் கட் டுப்பாட்டினை இழந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் முதியவருக்கு தலையில் பலத்த காயமேற்பட்டது. சாவகச்சேரி, மட்டு வில் தெற்கைச் சேர்ந்த கதிரேசு கந்தசாமி (வயது- 73) என்றவயோதிபரே படு காயமடைந்தார். அவர் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மீசாலைப் பகுதியில் நேற்று மாலை இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இரு மோட்டார் சைக்கிள்களில் பயணித்த இருவர் காயமடைந்தனர். வரணி, சிமிழ் அம்மன் கோவிலடியைச் சேர்ந்த நடராசா கார்த்தீபன் (வயது-24) மற்றும் மீசாலை கிழக்கைச் சேர்ந்த சண்முகம்ராச குலச்சந்திரன் (வயது- 50) என்ற குடும்பத் தலைவருமே படு காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். குடும்பத் தலைவருக்கு கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# தரம் 5 பரீட்சைத் தொடர் - 06

## பாராட்டுப் பெறுவோர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பூரண அனுசரணையுடன் கடந்த ஜனவரி மாதம் ஒளி அரசி மூலம் இடம்பெற்ற தரம் - 5 தபால் மூலமான பரீட்சைத் தொடரில் உயர் புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் புலமைசாலிகளை ஒளிஅரசி, புலமைச்சுடர் குழுமத்தின் சார்பாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| பெயர் | பாடசாலை | புள்ளிகள் |
|---|---|---|
| சி.பிரவின் | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 197 |
| பா.தனுஷாந் | யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி | 196 |
| ச.மிகானா | யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி | 196 |
| தர்ஷன்கரீஸ் | யா/அ.த.க.பாடசாலை | 195 |
| சு.கவிநயா | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 194 |
| செ.யாழிசை | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 192 |
| சி.தர்மினி | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 192 |
| பா.சானுஜன் | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 191 |
| நா.மதுரா | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 191 |
| சு.டிசானா | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 191 |
| கு.ஜடனுசா | யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் | 191 |
| பி.பிரஷா | யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் | 191 |
| உ.கிதுஷான் | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 191 |
| ஜெ-விழிமதி | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 190 |
| இ.சுபீட்சா | யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் | 190 |
| றொ.பெ.கபிராஜ | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 190 |
| அ.அபர்ணா | யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் | 189 |
| க.சந்தியா | யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி | 189 |
| சி.லக்சிகாக | யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் | 187 |
| செ.கிருசிகன் | யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி | 185 |
| சி.அக்சயன் | யா/மீசாலை வீரசிங்கம் | 185 |
| த.தக்சயன் | யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி | 185 |
| நி.ரவீந்திரராஜ | கொ/இராமநாதன் இந்துக்கல்லூரி | 185 |
| சு.இந்திகா | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 184 |
| ச.பிரணவி | யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை | 183 |
| நி.மானுஷா | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 183 |
| சூ.சகானா | யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | 182 |
| சு.தவச்செல்வன் | கொ/நல்லாயன் மகளிர் வித்தியாலயம் | 181 |
| பி.லக்ஷன் | யாழ்/இந்து ஆரம்ப பாடசாலை | 179 |
| அ.பாத்திமா அஸ்ன | அல்/முபாரக் கனிஸ்ட வித்தியாலயம் | 179 |

(தொடர்ச்சி நாளை)

உங்கள் பிள்ளைகளும் பரீட்சையில் பங்குபற்ற விரும்பினால் அருகிலுள்ள உதயன் முகவரிடம் ஒளிஅரசி சஞ்சிகையைப் பெறுவதன் மூலம் பங்குபற்றலாம். மேலதி தொடர்புகளுக்கு 071 862 8351 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்கவும்.

# சாதனைகளைப் பெறத் துடிக்கும் மாணவர்கள் சிறிய பாடசாலைகளிலேயே அதிகம் உள்ளனர்

## உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

சாதனைகளை ஏற்படுத்தத் துடிக்கும் மாணவர்கள் சிறிய பாட சாலைகளிலேயே அதிகமாக உள்ளனர். இவ்வாறானவர்களை இனங் கண்டு போட்டியில் பங்குபற்றச் செய்தலே உடற்கல்வி ஆசிரியர்களின் தார்மீகக் கடமையாகும்.

இவ்வாறு உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியரும் உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத் தலைவருமான ப.தர்மகுமாரன் தெரிவித்தார்.

உயரப்புலம் மெதடிஸ்த மிசன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் கா.ரவீந்திரராசா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

சூரியனைப் போல பிரகாசிக்க வேண்டுமானால் முதலில் சூரியனைப் போல மரல வேண்டும் என அப்துல்கலாம் கூறினார். அதுபோல நீங்களும் மைதானத்தில் பிர காசிக்க வேண்டுமானால் சிறந்த முறையில் தொடர்பயிற்சிகள் உடலுக்கும் உள்ளத்துக்கும் வழங்கினால் சிறப்பாக பிரகாசிக்க முடியும். உயரப்புலம் மெதடிஸ்த மிசன் சிறிய பாடசாலையாக இருந்தாலும் தனது மனித வளங்களையும் பௌதிக வளங்களையும் முழுமையாக பயன்படுத்தி வெற்றிகொண்டுள்ளது.

மேலும் நடைபெற்ற போட்டிகள் அனைத்திலும் சர்வதேச விதிப் பிரமாணங்களுக்கு ஏற்ப ஒழுங்காக நேர்த்தியாக அர்ப்பணிப்புடன் மாணவர்கள் ஆசிரியர் பங்குபற்றியிருந்தனர் என்றார். (ஐ-50)

# பண மோசடி செய்தவருக்கு நிபந்தனையுடன் பிணை

தென்மராட்சி, பெப். 28

சுவிஸ் நாட்டுக்கு அனுப்புவதாக 5 லட்சம் ரூபா பணத்தைப் பெற்று நம்பிக்கை மோசடி செய்த சரசாலை வாசியை 5 மாதங்களில் முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் அனுமதியளித்தார்.

சரசாலையைச் சேர்ந்த சந்தேகநபர் கொழும்பு, வத்தளையைச் சேர்ந்த நபரிடம் சுவிஸ் நாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி 5 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார். எனினும் அவர் சுவிஸ் நாட்டுக்கு அனுப்பி வைக்கவில்லை. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சிறப்புக் குற்றப்பிரிவுப் பொலிஸாரிடம் பாதிக்கப்பட்டவரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

சந்தேகநபரை சரசாலையில் வைத்து கைது செய்த பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர்.

வழக்கினை விசாரித்த நீதிவான், சந்தேகநபரை நேற்று 50 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும். அடுத்த தவணையில் 50 ஆயிரம் ரூபா பணம் செலுத்த வேண்டும். அடுத்த மாதங்களில் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் முழுத் தொகையையும் 5 மாதங்களுக்குள் மீளச் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டார்.

தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், அடுத்த வாரம் மேலும் 5 லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையை மன்றில் முற்படுத்த வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். சந்தேகநபர் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடல் வேண்டும் என்றும் நீதிமன்றம் கட்டளையிட்டது. (வ - 9)

# சித்தியெய்திய 559 பேருக்கும் விரைவில் ஆசிரியர் நியமனம்

## ஏனையோர் குறித்து கூட்டத்தில் தீர்மானம் வடக்கு மாகாணக் கல்விச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு நடத்திய ஆசிரியர் ஆள்சேர்ப்புக்கான நேர்முகத் தேர்வில் சித்தி எய்திய 559 பேருக்கும் இன்று நடைபெறவுள்ள கூட்டத்தின் பின்னர் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும். ஏனையவர்கள் தொடர்பினில் கூட்டத் திர்மானத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நேர்முகத் தேர்வில் சித்தி எய்தி 559 பேருக்கும் இன்றைய கூட்டத்தின் பின்னர் ஒரு திகதியில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும். ஏனையவர்கள் தொடர்பில் கூட்டத் தீர்மானத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குறித்த நேர்முகத் தேர்வில் பின்பற்றப்பட்ட நடைமுறைகள், அதில் உள்ள பாட முறைமைகள் தொடர்பிலும், அதற்கான பொருத்தப்பாடுகள் தொடர்பிலும் இன்றைய கல்விக் குழுக் கூட்டத்தில் விரிவாகத் தெரிவிக்கப்படும்.

தெரிவிக்கப்படும் கருத்துகள் தொடர்பில் குழு ஆராயும். அதன் நியாயப்பாடுகளையும் தரத்தையும் பரீட்சித்த பின்னர் அதற்கான அனுமதி கிடைக்கும். அத்தோடு நியமனம் வழங்கப்படும் 559 பேருடன் அண்மையில் வழங்கப்பட்ட சிங்கள பாட ஆசிரியர்களின் எண்ணிக்கையும் சேர்ந்து சுமார் 650 பேருக்கான நியமனம் வழங்கப்படுகிறது.

வட மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 1800 ஆசிரியர்களுக்கான அனுமதி கோரியிருந்த போதிலும் ஆயிரம் பேருக்கான அனுமதியே கிடைத்திருந்தது. இவ்வாறு கிடைத்த ஆயிரம் ஆசிரியர்களில் எஞ்சிய தொகையான 350 பேரின் நியமனம் தொடர்பிலும் கூட்டத்தில் தீர்மானிக்கப் படும். 2016 இல் மத்திய அரசு அனுமதித்த ஆயிரம் ஆசிரியர்களுக்கு நியமனத்தை வழங்கி நிறைவு செய்யும் பட்சத்தில் எஞ்சிய 800 ஆசிரியர்களின் நியமனத்துக்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்படும் - என்றார். (த-101)

# ஏழிசை மாலை நிகழ்வு சாவகச்சேரியில் இன்று

தென்மராட்சி, பெப். 28

தென்மராட்சி கல்வி வலய இசையாசிரியர்கள் மாணவர்கள் இணைந்து நடாத்தும் பெப்ரவரி மாத 'ஏழிசை மாலை 17' நிகழ்வு இன்று பி.ப. 2 மணி தொடக்கம் 5 மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்துகொள்வார்.

நிகழ்வின் இனிய விருந்தினர்களாக 'சங்கீத வித்துவான்' பொன்.ஸ்ரீவாமதேவன், சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் இசை ஆசிரியைகளான திருமதி சௌந்தவல்லி தர்மலிங்கம், திருமதி கமலேஸ்வரி குமாரசாமி திருமதி ரஞ்சனாதேவி சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்வர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி இசை ஆசிரியை திருமதி காயத்திரி சகிதனின் இசைக் கச்சேரியும் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவர்களின் கூட்டிசையும் பிரதேச தமிழ் மரபுக் கலாலய மாணவர்களின் மிருதங்க இசைக் கச்சேரியும் மட்டுவில் கமலாசனி வித்தியாலய இசை ஆசிரியை திருமதி நீலாம்பிகை ஜெயக்குமார், சாவகச்சேரி மகளிர் கல்லூரி இசை ஆசிரியை திருமதி சுபத்திராதேவி ஸ்ரீஸ்கந்தராசா, மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய இசை ஆசிரியை திருமதி ஜெயலட்சுமி முகிலிவண்ணன் ஆகியோரின் கூட்டிசையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் கூட்டிசையும் இடம்பெறும் நிகழ்வுக்கு அணிசேர் கலைஞர்களாக வயலின் சுருதிஜஞானதிலகம் அ.ஜெயராமன் மிருதங்கம் யாழ்.பல்கலைக்கழக இசைத் துறை விரிவுரையாளர் கலாநிதி சி.மகேந்திரன் ஆகியோர் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது யாழ்.பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் (J/77)

திரு.ஜோட்ஸ் மீற்றன் அவர்களின் தந்தை

**விசுவாசம் செல்வராஜ்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.**

---

இதயம் மறவாத

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் முத்தையா இராசரத்தினம் (பத்தர்)**



மலர்வு 10.08.1926 — உதிர்வு 01.03.2006

திதி: பூர்வபட்ச துதியை - (28.02.2017) செவ்வாய்க்கிழமை

சீராண்டு துர்முகி வருஷம் மாசித் திங்கள்
மலரும் 16ஆம் நாள் பூர்வபட்ச
துதியைத் திதியில்
அன்புத் தந்தையின் பாதம் பணிந்து
மோட்ச தீபம் ஏற்றி அஞ்சலி செய்கின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
'மலர் வாசம்', மகாஜனக் கல்லூரி வீதி,
தெல்லிப்பழை.

---

## 60ஆவது பிறந்ததின நினைவு



**திருமதி திருஞானசோதி குணேந்திரன்**

நல்வாழ்வு நாம் வாழ வரம் வேண்டி சிவகாமி அன்னையை
மனதார நினைத்து அனுதினமும் வலம் வருகையில்
கையில் கிடைத்த ஞானதீபம் உள்ளுக்குள் திரியாய் கருகி
அணைந்த போது செய்வதறியாது திகைத்து நின்றோம்.
பொன்னாடை போர்த்த புகழாரம் சூட, நீர்வை வடக்கு மகளிர்
வாழ்த்துப்பா வழங்க சமூக அபிவிருத்தி மன்றத்தினர்
சேவை நலம் பாராட்டு விழா நடத்த பூமாலைகள் தோளில் விழ
இன்று நடந்திருக்கும் 60ஆவது பிறந்தநாள் விழா.
இனி கற்பனையில் தான் சந்தோசம்
என்ற பின் நாம் என்ன செய்ய முடியும்.

நீர்வேலி வடக்கு — (AJA/CS 1477) (22.17) — என்றும் நினைவில் கணவர், பிள்ளைகள்

---

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சிவசம்பு மனோகரசீலன்**

(உரிமையாளர் சுரேக்கா ரெக்ஸ்)
முன்னாள் தலைவர் மானிப்பாய் வர்த்தகசங்கம்,
மானிப்பாய் வட்ட லயன்ஸ்கழக உறுப்பினர்.

மலர்வு 14.11.1941
உதிர்வு 19.02.2007

திதி: 28.02.2017

பத்து ஆண்டுகள் சென்றாலும் ஆறாது எம்துயரம்
உயிருக்கு உயிராக இருந்து எமைக்காத்த தலைவா
காலங்கள் பிரிவின் துயரை மாற்றினாலும்
என்றென்றும் எம் மனதில் நிலை கொள்ளும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

நாவலடி லேன், மானிப்பாய்.

உங்கள் நினைவுகளுடன் வாழும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

---

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**சந்திரசேகரம்** — மறைவு 26.11.1993
**சிவபாக்கியம்** — மறைவு 29.01.2017


எமது குடும்பத் தலைவி அமரர் சிவபாக்கியம் சந்திரசேகரம் அவர்கள் 29.01.2017 சிவபதமடைந்த செய்தி கேட்டு எம்மை நாடி வந்து உதவிகள் புரிந்த, கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்ட, மலர்வளையம் சாத்திய எமது உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின் றோம். அத்துடன் எமது குடும்பத்தலைவரையும் நினைவு கூருகின்றோம். 28.02.2017 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின் றோம்.

அன்பகம், இணுவில் மேற்கு, இணுவில் — குடும்பத்தினர்.

---

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

**அமரர் குமாரரத்தினம் ஸ்ரீதரன்**



பிறப்பு 01.08.1949
இறப்பு 29.01.2017

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (28.02.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் அமரத்துவம் அடைந்த நேரம் சகல வழிகளிலும் உறுதுணை புரிந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாலிபுலம்,
முதலாம் வட்டாரம், வேலணை கிழக்கு,
வேலணை.

(AJA CS)(1414) குடும்பத்தினர்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 10 . 09 . 1937
மறைவு 30 . 01 . 2017

**அமரர் நாதன் சின்னையா (J.P)**

(இ.போ.ச. ஓய்வுபெற்ற கணக்காளரும் யாழ். மாவட்டபாரவூர்திச் சங்க முன்னாள் தலைவரும் வடமராட்சி வடக்கு மத்தியஸ்தர் சபை முன்னாள் தவிசாளரும் தற்போதய உறுப்பினரும்)

கடந்த 30.01.2017 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் மறைவின் போது பங்குகொண்டு உதவி நல்கியவர்கள் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறியவர்கள் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்கள் மலர் வளையங்கள் செலுத்தியவர்கள் இரங்கலுரையாற்றி கௌரவப்படுத்தியவர்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (01.03.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அந்தியேட்டிக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

புலோலி வடகிழக்கு,
புலோலி.
021 226 0013

குடும்பத்தினர்.

# திருப்பாடுகளின் நாடகத்துக்கு பிரதி வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், பெப். 28
இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளான நாளை - புதன்கிழமை மாலை 5 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களும் பங்குபற்றுவர். எனினும் இந்த முறை புதிதாக இணைந்து பங்குபற்ற விருப்பமுடையவர்களும் கலந்து கொள்வார்கள்.

திருப்பாடுகளின் நாடகம் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படும்.

'கல்வாரி யாகம்' என்னும் பெயரில் 2002, 2009ஆம் ஆண்டுகளில் மேடையேற்றப்பட்டு மிகுந்த வரவேற்பைப் பெற்ற திருப்பாடுகளின் நாடகமே இந்த முறையும் மேடையேற்றப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை ம.வி.இ. இரவிச்சந்திரன் அடிகளார் கலந்து கொண்டு ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்கள் உட்பட ஏனைய துறை சார்ந்த பிரிவுகளுக்கான பிரதிகளை வழங்குவார் என்று திருமறைக் கலாமன்றத்தால் மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# டெங்கு நோய்த் தொற்று கோப்பாயில் அதிகரிப்பு

## சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களை உரியவாறு செயற்படுத்துமாறு கோரிக்கை

அச்சுவேலி,பெப்.28
'கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் டெங்கு நோய்த் தொற்று அதிகரித்துள்ளது. இந்த வருடத்தில் பெப்ரவரி நடுப்பகுதி வரையில் 70க்கு மேற்பட்டோர் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளாகி உள்ளனர். சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களை பொதுமக்கள் உரியவாறு செயற்படுத்தினால் மட்டுமே டெங்கு நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்'

இவ்வாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு குடித்தொகை கூடிய பிரதேசம். அத்துடன் விவசாயிகள் பெருமளவில் வசிக்கும் பிரதேசம். கோப்பாய் பிரிவில் டெங்கு நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான ஏதுநிலை காணப்பட்ட போதிலும் அதிகாரிகளின் ஆலோசனையை முழுமையாக ஏற்று பொதுமக்கள் நடக்காத நிலமை காணப்படுகின்றது. இதனால்தான் டெங்கு நோய்த் தொற்றின் தாக்கம் காணப்படுகிறது. ஜனவரி மாதத்தில் 53 பேரும் பெப்ரவரி 20ஆம் திகதி வரை 17 பேரும் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர். வீடுகளில் நிலமட்டத்தில் நிறுவப்பட்டுள்ள தொட்டிகளில் தேக்கிவைத்திருக்கும் தண்ணீரை தினசரி வெளியேற்றி தொட்டிகளைச் சுத்திகரித்துப்' பயன்படுத்தினால் டெங்கு நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

வாழைச் செய்கை பெருமளவில் நடைபெறும் பிரதேசமாக இருப்பதால், வாழைமடலில் தங்கி நிற்கும் தண்ணீரில் நுளம்பு பெருக்கமடைகின்றது. அத்துடன் குலை வெட்டிய வாழைகளின் குற்றிகளின் அடிப்பகுதியை மண்ணால் மூடினால் வெட்டிய வாழை அடியில் தண்ணீர் தங்கி நிற்பதை தவிர்க்கலாம்.

அதிகாரிகளின் ஆலோசனையை பொதுமக்கள் ஏற்று நடக்க முன்வர வேண்டும். அப்போதுதான் டெங்கு நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தலாம் என்றனர். (வ-11)

# ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி இன்று

யாழ்ப்பாணம், பெப்.28
ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு உரும்பிராய் இராமகிருஷ்ண நலன்புரி நிலைய பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-10)

# மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி

வரணி,பெப்.28



வரணி நாவற்காடு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் மாணவர்களுக்கான கணினிப் பயிற்சி வகுப்பு வடக்கு மாகாண சபை அமைச்சர் பா.டெனீஸ்வரனால் கடந்த செவ்வாய்க்கிழமை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.


நாவற்காடு கிராமத்தைச் சேர்ந்த கனடா வாழ் வே.பிரேம்குமார் தனது தந்தை காலஞ்சென்ற ஆசிரியர் சின்னத்தம்பி வேதாரணியத்தின் ஞாபகார்த்தமாக ஒருலட்சம் ரூபா நிதியை நாவற்காடு கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளிடம் வழங்கியிருந்தார். அந்த நிதியில் இருந்து 2 கணினிகளும் தளபாடங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் பயிற்சி நிலையத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். நிதியுதவியளித்த திருமதி சிவஞானம் வேதாரணியம் அமைச்சரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

நாவற்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் அழைப்பின் பேரில் வருகை தந்த அமைச்சரிடம் சுட்டிபுரம் நாவற்காடு, மிருசுவில் சாலை சீரமைப்புத் தொடர்பில் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (வ-122)

# மரண அறிவித்தல்கள்

## நாகர் அழகரத்தினம் (சோதிடர் அழகப்பன்)



வரணியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் அழகரத்தினம் (சோதிடர் அழகப்பன்) 27.02.2017 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகர் - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் தவமணியின் அன்புக் கணவரும் ஜெயராணியின் பாசமிகு தந்தையும் தவபாக்கியம், குலபாக்கியம் காலஞ்சென்ற சிவபாக்கியம் மனோராணி (ஆசிரியர் - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), நவரத்தினராஜா (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கீரிமலை வீதி,
பாடசாலை அருகில்,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

பிறப்பு
22 . 05 . 1934



இறப்பு
24 . 02 . 2017

## திருமதி கனகம்மா மரியாம்பிள்ளை

(மட்டுவில் மத்தி, சாவகச்சேரி)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் மத்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா மரியாம்பிள்ளை 24.02.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், இராசமணி, காலஞ்சென்ற முருகேசு, கந்தையா ஆகியோரின் அன்பு சகோதரியும், அருட்செல்வி, அருந்தவமலர், அருந்தவராஜன், அமிர்தா, அமலதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், பூலோகநாதன், துரைராசா, வத்சலா, வசந்தராசா, சந்திரகலா ஆகியோரின் அன்பு மாமியும், டேவிட், அருள்ராஜ், சேந்தன், கார்த்திக், கார்த்தீபன், கார்த்திகா, டெய்சி, ஜெரி, சலோமி, யூட், அபிநையா, ஆதவன், அஜேய், அனோஜன், துஷானி, நிதுஷன், பரீக்சித், காயத்திரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டெமற்றியாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


சிவன்கோயில் வீதி,
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

# யாழ்ப்பாணக் கல்வி வலய உடற்கல்வி ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், பெப். 28
யாழ்ப்பாணக் கல்வி வலய உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. பெரு விளையாட்டு விழாவுக்கான அட்டவணை தயாரித்தல், மெய்வன்மைப் போட்டி நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஆகியன இடம்பெறவுள்ளதனால் அனைத்து உடற்கல்வி ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணக் கல்வி வலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் சண். தயாளன் கேட்டுள்ளார். (வ-422)

# மரண அறிவித்தல்



## திருமதி ஞானேஸ்வரி கோபாலசிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பிரபல ஆங்கில ஆசிரியர் திருமதி ஞானேஸ்வரி கோபாலசிங்கம் 25.02.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அருணாசலம்- பொன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் கோபாலசிங்கம் (ஆசிரியர் ) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி சிவகுருநாதன், ராஜேஸ்வரி சரவணமுத்து, புவனேஸ்வரி கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆனந்தி கபிரல், ஜெயந்தி கலாரவி, பவன் சரவணமுத்து, வசந்தி பாலேந்திரா, விஜயகுமார் கந்தையா, ரஜி ராமச்சந்திரன், சுபா புரூடி ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2017) செவ்வாய்க்கிழமை மஹிந்த பார்லர், கல்கிசையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

# ஊரெழு விநாயகருக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், பெப். 28
ஊரெழு மடத்துவாசல் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்று ஆலய நிர்வாக சபையினர் அறிவித்தனர்.

மார்ச் மாதம் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு வசந்த மண்டப வழிபாட்டுடன் ஆரம்பமாகித் தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# கிராம அபிவிருத்தி கண்காட்சி இன்று

வரணி, பெப். 28
வடக்கு மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் கண்காட்சி கொடிகாமம் ஏ 9 சாலையில் உள்ள தையல் பயிற்சி நிலையத்தில் இன்று மு.ப.10 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.சதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி பாபு தேவநந்தினி , சிறப்பு விருந்தினர்களாக மாவட்டக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கம் மற்றும் கிராம அலுவலர் ஞ.பரமானந்தம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.ஜெயராசா கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அஞ்சல் அத்தியட்சகர் க.ஞானலிங்கம் மற்றும் கொடிகாமம் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-122)

# யாழ்ப்பாண மாநகரில் பராமரிப்பற்ற காணிகளுக்கு எச்சரிக்கை அறிவித்தல்

யாழ்ப்பாணம்,பெப். 28
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் கைவிடப்பட்ட நிலையில் பராமரிப்பு இன்றிய காணிகளில் சிவப்பு அறிவித்தல் கம்பங்கள் நடப்பட்டு வருகின்றன. பராமரிப்பு இன்றி காணிகளில் பற்றைகள் வளர்ந்து காடுபோல் காணப்படுகின்றன. அவற்றால் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார்.

'பராமரிப்பு இன்றி உள்ள தனியார் காணிகள் பற்றைகளால் மூடிக் காணப்படுகின்றன. சம்பந்தப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் அவற்றைத் துப்புரவு செய்ய வேண்டும். இல்லையேல் யாழ். மாநகர சபை காணிகளைப் பொறுப்பேற்றுத் துப்புரவு செய்யும். பின்னர் துப்புரவுப் பணிக்கான கட்டணம் உரியவர்களிடம் இருந்து அறவிடப்படும்.

மாநகராட்சி மன்றப் பகுதியில் இவ்வாறு பராமரிப்பு இன்றிய காணிகள் இனங்காணப்பட்டுச் சிவப்பு அறிவித்தல்கள் போடப்பட்டு வருகின்றன' என்று யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார். (வ-17)

## முல்லை. கட்டளைத் தளபதியை சந்தித்த பிரிட்டன் துணைத் தூதர்



கொழும்பு, பெப்.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என்று பொதுமக்கள் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். இந்தநிலையில் முல்லைத்தீவு படைத் தலைமையகக் கட்டளைத் தளபதியைச் சந்தித்து இலங்கைக்கான பிரிட்டன் துணைத் தூதுவர் லோறா டேவிஸ் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு முல்லைத்தீவு படைத் தலைமையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது. இந்தச் சந்திப்பில் பிரிட்டன் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் ஸ்ருவோர்ட் அன்ட்ரூ போர்லண்டும் கலந்து கொண்டார். சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக இரு தரப்புகளும் உத்தியோகபூர்வமாக எதுவும் கூறவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தப்படும் மக்கள் போராட்டங்கள் தொடர்பாகவே சந்திப்பு அமைந்தது என்று தகவல்கள் கூறுகின்றன.

பிலக்குடியிருப்பிலும், புதுக்குடியிருப்பிலும் மக்கள் இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று தொடர் போராட்டம் நடத்துகின்றனர். 29 நாள்களாக நடத்தப்பட்டுவரும் போராட்டம் தற்போது நாடு முழுவதும் பேசுபொருளாகியுள்ளது. மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாக வடக்கு, கிழக்கு, தெற்கு மாகாணங்களில் கவனவீர்ப்புப் போராட்டங்களும் நடத்தப்படுகின்றன.

(ற-5,10)

# கிளிநொச்சியை மிரட்டுகின்றது பன்றிக் காய்ச்சல்

### தொற்றுக்கான அறிகுறிகளுடன் இதுவரை 66 பேர் வைத்தியசாலையில்

கிளிநொச்சி, பெப்.28

பன்றிக் காய்ச்சல் எனப்படும் என்1எச்1 வைரஸ் தொற்றுக்கு உட்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் 66 பேர் இதுவரை கிளிநொச்சி மாவட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் இந்தத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. அவரது குருதி மாதிரி சோதனைக்காக மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது பன்றிக் காய்ச்சல் தொற்று அதிகரித்துள்ளது. தொற்றுக்குரிய அறிகுறியுடன் உள்ளவர்கள் நாளாந்தம் இனங்காணப்படுகின்றனர். தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கும் 66 பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களின் குருதி மாதிரிகள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டவர்களில் 17 பேருக்கு பன்றிக் காய்ச்சல் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நோய்த் தொற்றை சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும். தொற்றுக்கான அறிகுறிகள் காணப்படுமிடத்து உடனடியாக சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். எந்தவித அச்சமும் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்று சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

(ற-4,101)

## தாராபுர கட்டடங்களுக்கு வட. மாகாண சபையின் உறுப்பினர் ஒருவரின் தாய் உரிமை கோருகிறார்

மன்னார், பெப்.28

மன்னார், தாராபுரத்தில் சட்டவிரோதமான முறையில் சட்டவிரோதமாக அமைக்கப்படுகின்றது என்று கூறப்படும் கட்டடத் தொகுதிக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் தாய் உரிமை கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்படும் கட்டடத்தொகுதி தொடர்பில் நகர சபையினர் சட்ட நடவடிக்கை எடுக்க முற்பட்டபோது அந்த மாகாணசபை உறுப்பினரின் தாயார் பிரதேசசபையுடன் தொடர்பு கொண்டுள்ளார் என்று தெரியவருகின்றது.

மன்னார் நகரசபைக்கு உட்பட்ட தாராபுரம் கடற்கரையில் எதுவிதமான அனுமதிகளும் இன்றி சட்டவிரோதமான முறையில் 5 கட்டடங்கள் கட்டப்படுவது நகரசபையால் அவதானிக்கப்பட்டது. சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவதற்காக அதன் உரிமையாளர் தொடர்பில் நகர சபையினர் கேள்வி எழுப்பியுள்ளனர். கட்டடத்தை அமைக்கும் ஒப்பந்த நிறுவனத்தினரும் உரிமையாளர் தொடர்பில் தமக்கு தெரியாது என்றே கூறியுள்ளனர்.

எனினும் அந்தக் கட்டடங்கள் வடமாகாண சபையைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரால் அமைக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

கட்டடங்கள் தொடர்பாக எடுக்கப்படவுள்ள அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக ஆராயப்படுகின்றது என்று நகரசபையினர் தெரிவித்தனர்.

(ற-ய-101)

### புங்குடுதீவு மாணவி படுகொலை

## சாட்சியை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கைதான பெண் சார்பில் பிணை மனு

யாழ்ப்பாணம், பெப்.28

புங்குடுத்தீவு பாடசாலை மாணவி கொலை வழக்கில் சாட்சியை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிவநேசன் செல்வராணி சார்பாக நேற்றுப் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது.

மாணவி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 6ஆவது சந்தேக நபரான சிவனேசன் துசாந்தனின் தாயே சாட்சியை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

புங்குடுதீவு மாணவி 2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலைக் குற்றச்சாட்டில் 12 சந்தேகநபர்கள் வெவ்வேறு திகதிகளில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதுதொடர்பான சுருக்கமுறையற்ற விசாரணை ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நடைபெறுகின்றது. 2016ஆம் ஆண்டு மே 9ஆம் திகதி இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நடைபெற்றபோது, மன்றுக்கு வந்த 6ஆவது சந்தேகநபரின் தாயார் சிவதேவன் செல்வராணி, வழக்கின் சாட்சியான வித்தியாவின் தாயார் சிவலோகநாதன் சரஸ்வதியை அச்சுறுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது.

சாட்சியை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் 2016ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் திகதி மகாலிங்கம் தவநிதி மற்றும் சிவதேவன் செல்வராணி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். அன்றிலிருந்து சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். பொலிஸாரும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு எந்தவொரு மேலதிக அறிக்கையையும் மன்றில் முன்வைக்கவில்லை என்று பிணை விண்ணப்பத்தில் சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஆ.ரகுபதி தெரிவித்தார்.

பிணை விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், விசாரணையை எதிர்வரும் மார்ச் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(வ)

## சாவகச்சேரிப் பிரதேசத்தில் இரு சுற்றுலா மையங்கள்

### கச்சாய் துறைமுகம், எழுதுமட்டுவாழ் பகுதிகளில் விரைவில் அமையும்

தென்மராட்சி, பெப்.28

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கச்சாய் துறைமுகம், எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தைப் பகுதி என்பன சுற்றுலா மையங்களாக மாற்றப்படவுள்ளன. இதற்குரிய நிதியை நகர அபிவிருத்தித் திட்டமிடல் அமைச்சு வழங்கவுள்ளது.

கொடிகாமம் பொதுச் சந்தை விற்பனைப் பிரிவுகளை நவீன முறையில் அமைப்பதற்கு 50 மில்லியன் ரூபாவும், கச்சாய் துறைமுக அபிவிருத்திக்கு 8 மில்லியன் ரூபாவும், மாதிரிக் கிராமத் திட்டத்தின் கீழ் எழுதுமட்டுவாழ் சந்தை அமைந்துள்ள பகுதி அபிவிருத்திக்கு 5 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படவுள்ளது.

கச்சாய் துறைமுகத்தை இறங்குதுறையாக மாற்றி அதை அண்டியுள்ள 7 ஏக்கர்காணி சுற்றுலா மையமாக மாற்றப்படவுள்ளது. துறைமுகத்தில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் கடலுக்குள் காணப்படும் சாளம்மன்தீவு, காக்தை தீவு என்பவையும் சீரமைக்கப்பட்டு சுற்றுலா மையங்களாக மாற்றப்படவுள்ளன.

இந்தத் திட்டத்திக் கீழ் கச்சாயிலுள்ள இளவரசி குளமும், அதனுடன் இணைந்த கிணறு, சேதமடைந்துள்ள கோட்டை அமைந்துள்ள பகுதி என்பனவும் சுற்றுலா மையத்துக்குள் உள்வாங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எழுதுமட்டுவாழ் தெற்கில் மீள்குடியமர்ந்த மக்களின் வேண்டுகோளுக்கு அமைய 5 மில்லியன் ரூபா செலவில் பொதுச் சந்தை அமைக்கப்பட்டது. நவீன வடிவமைப்புடன் உருவாக்கப்பட்ட பொதுச் சந்தை தற்போது பாவனையற்று உள்ளது. அதை 5 மில்லியன் ரூபா செலவில் நவீனப்படுத்தி பண்டைய கால திண்ணைப் பாடசாலை உள்ளிட்ட பண்டைய கல்வி நடவடிக்கைகளை நினைவூட்டும் குடில்கள் அமைக்கப்படவுள்ளன. ஒன்றரை ஏக்கர் காணியில் சுற்றுலாப் பயணிகள் தங்கக் கூடியவாறு கட்டடங்களும் அமைக்கப்படவுள்ளன.

2000ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிறந்த பொதுச் சந்தையாக கொடிகாமம் பொதுச் சந்தை மாறியுள்ளது. அங்குள்ள விற்பனைப் பிரிவுகளை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. குடிதண்ணீர் வசதி, வடிகால் அமைப்புத் திட்டம் என்பவையும் மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்காக 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-9)

## கால்நடைகளின் மேய்ச்சலால் விவசாயிகளுக்கு பெரும் இடர்

### இரணைமடு விவசாயிகள் சம்மேளனம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப்.28

வன்னியில் தற்போது அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் கால்நடைகளால் விவசாயிகள் இடர்களை எதிர் கொள்கின்றனர் என்று கிளிநொச்சி, இரணைமடு விவசாயிகள் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

கால்நடை உரிமையாளர்கள் தமது கால்நடைகளை மேய்ச்சலுக்காக கட்டுப்பாடில்லாது விட்டுள்ளதால் வீணான அழிவுகள் ஏற்படுகின்றன. கால்நடைகள் கட்டுப்பாடில்லாது மேய்ச்சலுக்கு விடப்பட்டுள்ள பகுதியாக கிளிநொச்சி, வட்டக்கச்சி, இராமநாதபுரத்தை விவசாயிகள் இனங்கண்டுள்ளனர்.

இது தொடர்பாக கமநல சேவைத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், மாவட்டச் செயலர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு செல்லத் தீர்மானித்துள்ளோம். கால் நடைக் கட்டுப்பாட்டின் வரையறைக் காலம் மார்ச் 25ஆம் திகதிவரை உள்ளபோதும் தற்போது கால்நடைகள் மேய்ச்சலுக்காக விடப்பட்டுள்ளன.

வறட்சி காரணமாக பெரும் பயிரழிவுகள் ஏற்பட்டிருந்தன. எஞ்சிய விளை பொருள்களைப் பெரும் பொருளாதார செலவின் மத்தியில் விவசாயிகள் அறுவடை செய்கின்றனர். அவை வீணாக அழிவதைக் கட்டுப்படுத்த கால்நடை உரிமையாளர்கள் முன்வர வேண்டும்.

கால்நடை உரிமையாளர்களில் அதிகம் பேர் விவசாயிகளாகவும் உள்ளனர். இது தொடர்பில் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.- என்று சம்மேளத்தினர் தெரிவித்தனர்.

(ற-101)

## பெண்கள் மீதான வன்முறையை கண்டித்து பேரணி

பெண்கள் வன்முறைகளைக் கண்டித்து பெண்களின் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும் எனும் தொனிப் பொருளில் நாளை யாழ்ப்பாணத்தில் பேரணி நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அமைப்புகள் ஒன்றிணைந்து பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு இந்தப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளன.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் காலை 8 மணிக்கு அமைதியான முறையில் நடைபயணம் ஆரம்பித்து யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் வரை சென்று அங்கு 2017 ஆம் ஆண்டுக்கான மகளிர் தினக் கூட்டம் இடம்பெறும்.

கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர், யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர், யாழ்ப்பாண பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் உரையாற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-10,9)

யாழ். நகரில் குடும்பத்தலைவர் கொலை

# 2ஆவது சந்தேகநபரின் பிணை மனு நிராகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாண நகரில் இரவு வேளை இளம்குடும்பத்தலைவரை அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள 2ஆவது சந்தேகநபர் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று நேற்று நிராகரித்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டையே பெரும் அச்ச நிலைக்குத்தள்ளிய இந்தக்கொலைச் சம்பத்துடன் தொடர்புடைய வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களைப் பிணையில் விடுவிக்க முடியாது என்று யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தனது கட்டளையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாண நகர் மின்சார நிலைய சாலையில் 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21ஆம் திகதியன்று இரவு வேளை பேருந்துத் தரிப்பிடத்துக்கு அருகே நடந்து சென்று கொண்டிருந்த தம்பதிகள் மீது அந்தப் பகுதியில் நின்றிருந்த இளைஞர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் மாதவ மணிவண்ணனும் அவரது மனைவி தர்சினியும் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் குடும்பத்தலைவர் மாதவ மணிவண்ணன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இந்த நிலையில் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற பகுதி வியாபார நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவின் பதிவை அடிப் படையாகக் கொண்டு கொலைக் குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் யாழ்ப்பாண நீதிவான் மன்றின் உத்தரவில் 2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதியிலிருந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இரண்டாவது சந்தேகநபர் சார்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. இந்தமனுமீதானகட்டளையை யாழ்ப்பாணம்மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று வழங்கினார்.

'இந்த வழக்கு பாரதூரமான கொலைச் சம்பவம். யாழ்ப்பாணம் மின்சார நிலைய சாலையில் இரவு நேரத்தில் தம்பதியர்கள் மீது தாக்குதல் நடத்தி கணவர் உயிரிழந்தார். மனைவி படுகாயமடைந்தார். யாழ். குடாநாட்டு மக்கள் மத்தியில் அச்ச நிலையை இந்தக் கொலைச் சம்பவம் ஏற்படுத்தியது. கொலைச் சம்பவம் இடம் பெற்ற சூழல், யாழ். குடாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட அச்ச நிலை, அநியாயமான முறையில் ஓர் உயிர் பறிக்கப்பட்டமை, அவருடைய மனைவி தர்சினி தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு படுகாயமடைந்தார். இந்தக் குற்றச்சாட்டுக்களைக் கருத்தில் எடுத்து மன்று பிணை மனுவை நிராகரிக்கின்றது' என்று நீதிபதி கட்டளையிட்டார். (வ)

# வடக்கு வேலையற்ற பட்டதாரிகள் கால வரையறையற்ற போராட்டம்

## யாழ். மாவட்ட செயலகம் முன்பாக நேற்று ஆரம்பித்தனர்

யாழ்ப்பாணம், பெப். 28

நியமனம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் முன்பாக நேற்றுமுதல் காலவரையறையற்ற போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.




அவர்கள் தெரிவித்ததாவது-

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்று கொழும்பு, மாகாண அரசுகளுக்குக் கடந்த காலங்களில் பல வழிகளிலும் கோரிக்கை விடுக்கப்பட்டது. தற்போது வரை வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு எட்டாக் கனியாகவே உள்ளது.

2015 ஆம் ஆண்டு நாம் போராட்டம் நடத்தினோம். வடக்கு மாகாணஅமைச்சின் கீழ் 851 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான ஆளணி உருவாக்கப்பட்டு கொழும்பு அரசின் அனு மதிக்காக அனுப்பப்பட்டுள்ளதுஎன்றுவடக்குமாகாண அமைச்சர்களால் உறுதியளிக்கப்பட்டது.

அந்தவெற்றிடங்களுக்குவிண்ணப்பம் கோரப்பட்டு பரீட்சை அடிப்படையில் இதுவரை 50க்குக் குறைவான நியமனங்களே வழங்கப்பட்டதை நாம் அறிந்துள்ளோம். மிகுதிவெற்றிடங்களானசுமார் 800 வெற்றிடங்களை இழுத்தடிப்பின்றி வேலையற்றபட்டதாரிகளுக்குவழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக் கின்றோம்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் வடக்கு மாகாண சபையால் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று ஊடகங்கள் வாயிலாக செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த நியமனங்களுக்கான தெரிவு நபர்கள் பலர் பல்வேறு தரப்பினர்களின் செல்வாக்குகளின் ஊடாகவும் உரிய கால எல்லையில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றாதவர்களாகவும் உள்ளதை அறிந்துள்ளோம். உண்மையில் விசுவாசத்துடன் போர்க்காலத்தில் பணியாற்றிய பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதை நாம் ஆதரிக்கின்றோம். செல்வாக்காலும் குறிப்பிட்ட கால எல்லையில் கடமையாற்றாத தொண்டராசிரியர்களின் நியமனங்களை எதிர்கின்றோம்.

நாடளாவிய ரீதியில்8 ஆயிரம் தகவல் அறியும் சட்ட உத்தியோகத்தர் வெற்றிடங்கள் உள்ளன என்று அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது. வேலையற்ற பட்டதாரிகள் அந்த வெற்றிடங்களில் உள்வாங்கப்படுவர் என்று கூறப்பட்டபோதும் ஏற்கனவே பணியில் உள்ளஅரச பணியாளர்களுக்கே மேலதிக பணியாக இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன என்று அறியமுடிகிறது. முன்னர் குறிப்பிட்டதுபோல வேலையற்றிருக்கும் பட்டதாரிகளை தகவல் அறியும் உத்தியோகத்தர்களாக நியமிக்குமாறு வலியுறுத்துகின்றோம்.பட்டதாரிகளுக்கு ஆண்டுதோறும் நியமனங்கள் வழங்கும் வகையில் ஒருபொறிமுறையை வடக்கு மாகாண சபையும் கொழும்பு அரசும் உருவாக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் நியதிச் சட்டம் உருவாக்கப்பட்ட நிலையில் பட்டதாரிகளை இணைப்பதற்கான 200 வகையான வெற்றிடங்கள் உள்ளன என்று அறிந்துள்ளோம். அந்த வெற்றிடம் தொடர்பிலும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று வேண்டுகின்றோம். வடக்கு மாகாணகல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட தகவலின் படிஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான ஆயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த மாதம் விண்ணப்பம் கோரப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. அந்த வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை உடனடியாகக் கோரி வேலையற்ற பட்டதாரிகளை வெற்றிடங்களில் நிரப்புமாறு வலியுறுத்துகின்றோம்.

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 849 ஆளணி வெற்றிடங்களுக்கான போட்டிப்பரீட்சை அண்மையில் நடத்தப்பட்டது. அந்தப் பரீட்சை பெறுபேற்றில் சித்திப்புள்ளியின் அடிப்படையில் 779 பேர் ஆசிரியர் நியமனத்திற்குத் தகுதி பெற்றனர். தேவையாகவுள்ள 70 வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் விரைவில் கோரப்படவேண்டும். சித்தியடைந்த 779 பேரையும் முழுமையாக ஆசிரியர் சேவை நியமனத்திற்குள் உள்வாங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனால் முன்மொழியப்பட்டு 21.02.2017 அன்று வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட ஆ/85/2017/3 இலக்கப் பிரேரணையில் வடக்கு மாகாணத்தில் கிட்டத்தட்ட4 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளதால் அழகியல் பட்டதாரிகள் மற்றும் கலைப்பட்டதாரிகளை ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாக நிபந்தனைகளுடன் உள்ளீர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சிடம் இந்தச் சபை கோருகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சபையில் தீர்மானம் நிறைவேற்றுவதோடு நின்றுவிடாமல் அதனை உடனடியாக நடைமுறைக்குகொண்டு வர வேண்டும்.

இவற்றை வலியுறுத்தி கால வரையரையற்ற போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.- என்றனர். (ற- 4,106)

# தேசிய பாடசாலை ஆசிரியர் ஆளணிப் பரம்பல் சீராக்கம்

தேசிய பாடசாலைகளின் ஆசிரியர் ஆளணிப் பரம்பல் சீராக்கம் செய்யப்படவுள்ளது.ஒரே பாடசாலையில் தொடர்ந்து 10வருடங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலம் கடமைபுரிந்த ஆசிரியர்களும் குறித்த பாடசாலையின் ஆளணிக்கு மேலதிகமாகஉள்ளஆசிரியர்களும் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம்செய்யப்படவுள்ளனர்.

இது தொடர்பாக மத்தியகல்வி அமைச்சு விடுத்துள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண கல்விப்பணிப்பாளர் கள் குறித்த தேசியப் பாடசாலை ஆசிரியர் ஆளணி விவரங்களை திரட்டி ஆசிரியர் ஆளணியை சீராக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேசியப்பாடசாலைகள் மத்திய கல்வி அமைச்சின் கீழ் செயற்படுகின்றன. தேசிய பாடசாலைகளில் தேவையான ஆசிரியர் ஆளணிக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் இருக்கின்றனர் என்றும், பலர் ஒரே பாடசாலையில் தொடர்ந்து நீண்ட காலமாகப் பணி புரிகின்றனர் என்று முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. ஆசிரியர் ஆளணியை மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக சீராக்கம் செயவதற்கும் மத்திய கல்வி அமைச்சு ஏற்பாடுகளை செய்துள்ளது.

சுற்றறிக்கைக்கு அமைய மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் தேசியப்பாடசாலைகளின் அதிபர்கள் ஊடாக கடமையில் இருக்கும் ஆசிரியர் விவரங்களைத் திரட்டுகின்றனர். ஆசிரியர்களின் சேவைக்கால விவரம், அவர் கற்பிக்கும் பாடங்களின் விவரம், மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன. மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்கள் மற்றும் பத்துவருடங்களுக்கு மேல் கடமைபுரியும் ஆசிரியர்கள் வேறுபாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

தேசிய பாடசாலைகளில் இருந்து ஆசிரியர் ஆளணி சீராக்கத்தின் பிரகாரம் இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்கள் தமது சுயவிருப்பத்துக்கு அமைய வேறு தேசிய பாடசாலைக்கோ அல்லது மாகாண பாடசாலைக்கோ இடமாற்றம் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-11)

# திருமலையில் இரு மாதங்களில் 1000 பேருக்கு டெங்குத் தொற்று

## மூன்றுபேர் சாவு

*திருமலை, பெப்.28*

*திருகோணமலை மாவட்டத்தில் இந்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரு மாதங்களில் ஆயிரத்து 50 டெங்கு நோயாளர்கள் இனங்காணப் பட்டுள்ளனர். அதில் மூவர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பீ.கயல்விழி தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது;*

*திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 155 டெங்கு நோயாளர்களும், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 278 நோயாளர்களும், குறிஞ்சாங்கேணி பிரிவில் 68 நோயாளர்களும், மூதூரில் 318 பேருமாக மொத்தம் ஆயிரத்து 50 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.*

*கிண்ணியாவில் மாத்திரம் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*கிண்ணியா, மூதூர், திருகோணமலை போன்ற வைத்தியசாலைகளில் அதிகளவில் டெங்கு நோயாளர்கள் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறு கின்றனர். வைத்தியசாலைகளுக்கு அதிகளவான மருந்துகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன-என்றார். (ற-ய-45)*

# கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில மூவர் கைது

கஞ்சா வைத்திருந்தார்கள் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 13ஆம் திகதி வரை விளக்க மறியல் வைக்கப்பட்டனர்.

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச் சாட்டிலும், கஞ்சாவை சுருட்டு மாதிரிச் சுற்றி வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட் டிலும் யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு பகுதிகளில் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நேற்று யாழ்ப்பாண நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார்கள். நீதிபதி சதீஸ்தரன் குற்றவாளிகள் மூன்று பேரையும் எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். ஒருவர் 31 கிராம் 750 மில்லிக்கிராமும் உடைமையில் வைத்திருந்தார், இரண்டாமவர் 26 கிராம் 560 மில்லிகிராம் உடைமையில் வைத்திருந்தார், மூன்றாமவர் கஞ்சாவை சுருட்டு வடி வில் சுற்றி வைத்திருந்தார் என்ற குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (ற-ரி)

# விக்ஸ்காடு கிராம மக்களின் போராட்டம் கைவிடப்பட்டது

## பிரச்சினைக்கு விரைவில் தீர்வு தரப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டதையடுத்து

வவுனியா, பெப். 28
வவுனியா இராசேந்திரகுளம் விக்ஸ்காட்டுப் பகுதியிலுள்ள மக்கள் கடந்த 6 நாள்களாக முன்னெடுத்த போராட்டம் நேற்று முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் அரச தலைவருடன் பேசித் தீர்வு காணப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. அதையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

கடந்த 6வருடங்களாக அந்தப் பகுதியில் 47 குடும்பங்கள் வசிக்கின்றோம். எமக்கு அந்தப் பகுதியில் தான் காணியைத் தரவேண்டும். அதற்கான ஆவணங்களைத் தர வேண்டும் என்று கோரி வவுனியா மாவட்ட செயலகத்துக் முன்பாகக் கடந்த 6 நாள்களாக விக்ஸ்காடு மக்கள் போராட்டம் நடத்தினர்.

நேற்று அங்கு சென்ற சிறிரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா அந்தப் பகுதி மக்களின் நிலமைகளை கேட்டறிந்தார். வன வளத் திணைக்கள அதிகாரிகளுடன் நேற்றுப் பிற்பகல் 2 மணியிலிருந்து 4.30 மணிவரை கலந்துரையாடல் நடத்தப்பட்டது. வவுனியா மாவட்ட செயலகத்தால் வன வளத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் விக்ஸ்காட்டுப்பகுதியில் 47குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்களுக்கான காணியினை அந்த இடங்களிலே பெற்றுக் கொடுப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தைப் பெற்று அரச தலைவருடன் ஒரு சந்திப்பு நடத்தி அனுமதி பெற்றுத் தரப்படும் என்று தொடர் போராட்டம் மேற்கொண்ட வர்களிடம் குறித்த சிறிரெலோ கட்சி வாக்குறுதி யளித்தது. அதனையடுத் துப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.



தமக்கு ஆதரவு வழங்கிய அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகளுக்கும், பொது அமைப்பினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ற-4)

## சுமந்திரன் கொலை முயற்சி; ஐவருக்கும் மறியல் நீடிப்பு

கிளிநொச்சி,பெ. 28
நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட, 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சி, யாழ்ப் பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களை சேர்ந்த 5 சந்தேக நபர்கள் பயங்கரவாதக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சந்தேக நபர்களை நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றில் முன்னிலைப்படுத்திய பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினர் , விசாரணைகள் இடம்பெறுகின்றன. இன்னும் காலம் தேவை என்று நீதிமன்றில் கேட்டதற்கு இணங்க எதிர் வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் . (ஐ-6)

## பாவனைக்குதவாத அரிசி மூடைகள் மீட்பு

கொழும்பு,பெப்.28
அக்குரணை பிரதேசத்திலுள்ள இரு தனியார் வாத்தக நிலையங்களில்; பாவனைக்குதவாத காலாவதியான ஒரு தொகை அரிசி மூடைகளை கண்டி மரவட்ட நுகர்வோர் அதிகார சபையினர் நேற்று முன்தினம் மீட்டனர்.

இவ்வாறு அதிகாரிகளால் மீட்கப்பட்ட அரிசி மூடைகள் ஆயிரத்து 40 கிலோ கிராம் நிறை கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி அரிசி மூடைகளது தயாரிப்புத் திகதி 2016- ஜனவரி மாதம் 25ஆம் திகதி எனவும் அதன் காலாவதித் திகதியானது 2017-ஜனவரி மாதம் 25ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த இரு தனியார் வர்த்தக நிலையங்களில் அரிசி விற்பனையின் போது அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையிலும் விட, அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்து வருகின்றமை தொடாபாக பொது மக்கள் அதிகாரிகளுக்குதெரிவித்துள்ள இரகசிய முறைப்பட்டையடுத்து, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது இவ்வாறான காலாவதியான ஒரு தொகை அரிசி மூடைகள் மீட்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

காலாவதியான பாவனைக்குதவாத அரிசியை நுகர்வோருக்கு விற்பனை செய்ய முயற்சி செய்தமை தொடர்பான குற்றச்சாட்டில், மேற்படி வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் இருவருக்கு எதிராகவும் வழக்குத் தொடர கண்டி நுகர்வோர் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஐ)

## வன வளத் திணைக்களத்தினருக்கு மாவட்டச் செயலரால் மீண்டும் கடிதம்

வவுனியா,பெப். 28
வவுனியா மாவட்டத்தின் விக்ஸ் காட்டுப் பகுதியில் உள்ள மக்களின் வாழ்விடங்களை அபகரித்துள்ள வன வளத்திணைக்களத்தினர், குறித்த பிரதேசத்தை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கோரி வவுனியா மாவட்டச்செயலர், வன வளத்திணைக் களத்தினருக்கு மீண்டும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் எனத் தெரியவருகிறது.

இது தொர்பில் மேலும் தெரியவருவதாவது

வவுனியா மாவட்டத்தின் விக்ஸ் காட்டுப்பகுதியில் உள்ள காணிகள், நீண்ட காலம் மக்கள் வசம் இருந்தன. கடந்த காலங்களில் போர் காரணமாக அச்சத் தில் மக்கள் அங்கு குடியிருக்கச் செல்லவில்லை.

அதன் காரணமாகவே குறித்த பகுதியில் மரம் வளர்ந்ததைக் காரணம் காட்டியே, வனவளத் திணைக்களத்தினர் தற்போது அந்தப் பகுதிகளைச் சொந்தம் கொண்டாடுகின்றனர்.

எனவே மக்களின் வாழ்விடங்களை அபகரித்துள்ள வனவளத்திணைக் களத்தினர், குறித்த பிரதேசத்தை விடுவிக்க வேண்டும் என்று வன வளத்திணைக்களத்தினருக்கு ஏற்கனவே மாவட்டச் செயல்ரால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. இவ்வாறு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு வனவளத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த நிலையில் காணியின் உரிமையாளர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் தற்போது மீண்டும் ஒரு கடிதத்தை மாவட்டச்செயலர், வனவளத் திணைக்களத்தினருக்கு அனுப்பியுள்ளார் எனத் தெரியவருகிறது. (ஐ-101)

## விமல்ராஜ் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை கண்டித்து யாழில் அரச அதிகாரிகள் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 28
மட்டக்களப்பு மாவட்டக் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நேசதுரை விமல்ராஜ் மீதான துப்பாக்கி சூட்டுப்பிரயோகத்தைக் கண்டித்து, யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக அரச அதிகாரிகள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்ட மேலதிக செயலர் தெய்வேந்திரம் தலைமையில் நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணி முதல் சுமார் ஒரு மணித்தியாலம் நடை பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் உதவிச் செயலர், சமுர்த்தி ஆணையாளர், நிர் வாக அதிகாரி மற்றும் துறைசார்ந்த அனைத்து அரச அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு களுதாவளை கடற்கரை வீதியில் வைத்து, மட்டக்களப்பு மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நேசகுமார் விமல்ராஜ் மீது, கடந்த புதன்கிழமை இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.





இனம் தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் துப்பாக்கிச் சூட்டில் கை, மற்றும் வயிற்றுப் பகுதியில் காயமடைந்த பணிப்பாளர் விமல்ராஜ் , களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், அரச அதிகாரிகள் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் ஏனைய அதிகாரிகளும் பயத்தில் ஆழ்ந்துள்ளனர்.

அந்த வகையில், குற்றவாளிகள் தண்டிக்கப்படல் வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அரச அதிகாரிகளை சுதந்திரமாக செயற்பட விடுங்கள் போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் அரச அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.(ஐ-106)

# விமல்ராஜ் மீதான துப்பாக்கிச்சூடு; 30 பேரிடம் விசாரணை

மட்டக்களப்பு, பெப்.28
காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் விமல்ராஜ் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் இதுவரை சுமார் 30 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி ஐ.பி. அபூபக்கர், தெரிவித்தார்.
ஏறாவூர் முதல் கல்முனை வரையான பகுதிகளில் பிரதான வீதிகளில் உள்ள வீடுகள், கட்டடங்கள் மற்றும் ஏனைய வியாபார நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி கமராக்களில் குறித்த சம்பவதினத்தன்று பதியப்பட்டுள்ள காட்சிகளின் அடிப்படையிலும், வேறு வழிகளிலும் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
விசேட பொலிஸ் பிரிவினருடன் இணைந்து களுவாஞ்சிக்குடிப் பொலிஸாரும் விசாரணைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.
இவை தவிர, காத்தான்குடி, ஏறாவூர், வெல்லாவெளி, கொக்கடிச்சோலை பொலிஸாரும் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
இதேவேளை, துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த விமல்ராஜ் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.
கடந்த புதன்கிழமை இரவு 7 மணியளவில் விமல்ராஜ் தனது வீட்டு வாசலில் நின்று அலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்திருந்த இனந்தெரியாத நபர்கள் இருவர், அவர் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-ய-46)

## பிணைமுறி விவகாரத்தில் கூட்டு அரசு தப்பிக்க முயற்சி

### மகிந்த குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 28
திறைசேரிப் பிணைமுறி விவகாரத்திலிருந்து தப்பித்துக் கொள்ள கூட்டு அரசு முயற்சிக்கிறது. அதற்காகவே அந்த விவகாரத்தை எனது தலையில் சுமத்துவதற்கு கூட்டு அரசு முயல்கிறது -இவ்வாறு முன்னாள் அரச தலைவா மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
இந்த விவகாரம் தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது
இந்த விவகாரத்தை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமையாகும். அரசின் நிதி நிர்வாகத்தின் சாதாரண செயற்பாடானது, ஒவ்வொரு மாதமும், இறுதி க்கிழமைக்கு முன்னதாக இடம்பெறும். இறுதிக் கிழமையில், திறைசேரியால் அடுத்த மாதத்துக்கு தேவையான நிதிவிவரங்களைக் கையளித்து, குறிப்பிட்ட திகதிக்கு முன்னர், குறிப்பிட்டளவு தொகை பணம் தேவை என்பதை மத்திய வங்கியின் கீழ் செயற்படும் அரச கடன் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறான அறிவிப்பு கிடைத்ததன் பின்னர், திறைசேரி பிணைமுறி, திறைசேரி உண்டியல் ஆகியனவற்றின் ஊடாக, அந்த நிதியைச் சந்தையில் திரட்டிக்கொள்வதற்கு அரச கடன் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும். அந்தக் கொடுக்கல் வாங்கல்கள் முழுயாக நிறைவடைந்ததன் பின்னரே, அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும். அந்தக் கொடுக்கல் வாங்கல்கள் நிறைவடையும் வரையிலும் அவை தொடர்பில் அறிந்துகொள்ள முடியாது என்றுள்ளது. (ஐ-10)

## சிறுதானியப் பயிர்ச் செய்கை கண்டாவளையில் வீழ்ச்சி

### அதிகரிக்கும் செலவினமே காரணம்

யாழ்ப்பாணம், பெப். 28
கண்டாவளைப்பிரதேசத்தில் சிறுதானிய பயிர்ச் செய்கையில் ஏற்படும் அதிக செலவினத்தால், அதிக விவசாயிகள் தெங்குப் பயிர்ச் செய்கையிலேயே தற்போது கவனம் செலுத்துகின்றனர் என்று நேற்று இடம்பெற்ற கண்டாவளைப் பிரதேச விவசாயக் குழுக்கூட்டத்தில் விசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.
கண்டாவளைப் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் நேற்றைய தினம் பிரதேச செயலாளர் முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் விவசாயிகளால் மேற்படி கருத்து முன் வைக்கப்பட்டது.
அங்கு விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது
பிரமந்தனாறுப் பகுதியில் ஏற்று நீர்ப்பாசன வசதி கொண்ட சுமார் 400 ஏக்கர் காணி உள்ளது. இதில் முன்னைய காலங்களில் சிறு தானியப்பயிர்களேசெய்கைப் பண்ணப்பட்டன. அதனைத் தற்போதும் தொடர, அதிக பொருள்செலவு, நீண்ட அலைச்சல், போதிய வருமானம் இன்மை உள்ளிட்ட பல சவால்கள் எதிர்கொள்ளப்படுகின்றன.
அதன் காரணத்தால் தற்போது இந்தப் பிரதேசத்தில் தென்னைப் பயிர்ச் செய்கை அதிகரித்துள்ளது. இதே நிலமை நீடிக்குமானால், இந்தக் கிராமத்தில் இன்னும் மூன்று ஆண்டுகளில் சிறு தானியச் செய்கைக்கே காணியற்ற நிலமை காணப்படும் . ஏனெனில் இன்று வரையான நிலவரப்படி 200 ஏக்கரை அண்மித்த நிலப் பரப்பில் தென்னை பயிரிட்டு வேலிகள் அமைக்கப் படுகின்றன.
இன்றைய நிலையில் சிறு தானியச் செய்கைக்கு அதிக செலவும், நீண்ட பராமரிப்பும் ஏற்படுகின்ற போதிலும், போதிய வருமானம் இல்லாத நிலமையே காணப்படுகின்றது. ஆனால் தென்னைச் செய்கையில் 5 ஆண்டுகள் காத்திருக்க அதன் பின்னர் போதிய வருமானம் கிட்டுகின்றது. எனவே நாம் விரும்பியே அதனைப் பயிரிடுகின்றோம்-என்றனர்.
குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து பதிலளித்த பிரதேச செயலர், அடுத்த மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்துக்கு குறித்த விடயம் கொண்டு செல்லப்படும் எனத் தெரிவித்தார். (ஐ-10)

## காணி ஆக்கிரமிப்புக்கு எதிராக மலையகத்தில் நேற்று போராட்டம்

நுவரெலியா, பெப்.28
பொகவந்தலாவை பிளான்டேசனுக்கு சொந்தமான 4 ஏக்கர் மேய்ச் சல் தரைக் காணியைத் தனியார் ஒருவர் ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொகவந்தலாவை பகுதியில் தோட்ட தொழிலாளர்கள் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கண்டியிலுள்ள நபரொருவர் சில தினங்களுக்கு முன்னர் போலி ஆவணங்களைக் காட்டி, மேற்படி கால்நடை மேய்ச்சல் தரைக் காணி தனக்கு சொந்தமானதெனக் கூறி, அதில் சுயதொழில் ஆரம்பிக்க முற்பட்டுள்ளார்.
அதற்கு மறுப்புத் தெரிவித்து. தோட்ட நிர்வாகம் பொகவந்தலாவைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை மேற்கொண்டனர். அதனைத்தொடர்ந்து நேற்று தொழி லாளர்களால் ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது. (ஐ-ய-43)

## தடுப்புக்காவலிலிருந்த சந்தேக நபர் சாவு

### பேலியகொட பொலிஸ் அதிகாரிகள் கைது

கொழும்பு, பெப். 28
பேலியகொட பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் திடீரென உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைக்கு உதவிப் பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் மா அதிபரின் பணிப்பின் பேரில் சிறப்பு விசாரணையும் மேற்கொள் ளப்படவுள்ளது.
கடந்த 15 ஆம் திகதி மோட் டார் வாகனத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், சந்தேகநபர் ஒருவர் பேலியகொட பொலி ஸாரால் கைது செய்யப் பட்டிருந்தார்.
மல்வானைப் பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய குறித்த சந்தேகநபர் பொலிஸ் தடுப் புக் காவலில் வைக்கப்பட்டி ருந்த போது உயிரிழந்துள்ளார். அவர் பொலிஸாரால் அதிகமாகத் தாக்கப்பட்டதால் உயிரிழந்தார் என்று நீதிமன்ற மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதனடிப்படையில் போலிய கொட பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் உயிரிழந்த நாளில் கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் விசார ணைகளுக்காகக் கைதுசெய்யப் பட்டுள்ளனர் என வும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ-10)

## உயர் நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 28
உயர் நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.
அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
"கூட்டு அரசு நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்துள்ளது. அதற்கமைவாக உயர் நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டவுடன் நீதியரசர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்''-என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

## அம்பாந்தோட்டை நீதி நகரத் திட்டத்தில் 35 வீதப்பகுதியில் மட்டுமே கட்டடங்கள்

கொழும்பு, பெப். 28
அம்பாந்தோட்டைத் துறைமுக நகர மற்றும் நிதி நகரத் திட்டத்தில் , கடலில் உருவாக்கப்படும் புதிய நிலப்பரப்பில் 35 வீதமான பகுதியில் மட்டுமே கட்டடங்கள் அமைக்கப்படும் எனத் தெரிய வருகிறது.
கொழும்பு அரசுக்கும் சீனாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட துறைமுக நகர மற்றும் நிதி நகர உடன்பாடு தொடர்பாக அண்மையில் மீண்டும் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. அந்தப் பேச்சுக்களின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.
புதிய துறைமுக நகர உடன்பாட்டுக்கு அமைய, காலி முகத்திடலை விடவும் எட்டு மடங்கு பெரிய பூங்கா ஒன்று அமைக்கப்படும். அதன் ஒரு பகுதியாக 3 கிலோ மீற்றர் நீளமுள்ள கடற்கரை பொதுமக்களின் பயன்பாட்டுக்காக உருவாக்கப்படும்.
அத்துடன் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக வீதிகள், பூங்காக்கள், நடைபாதைகளும் அமைக்கப்படும். 269 ஹெக்ரேயர் நிலப் பரப்பில், 91 ஹெக்ரேயர் பொதுமக்களின் பயன்பாட்டுக்கும், 62 ஹெக்ரேயர் கொழும்பு அரசின் அபிவிருத்தித் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.
புதிய உடன்பாட்டுக்கு அமைய இந்த நிலப்பகுதியில் 57 வீதமான பகுதி கொழும்பு அரசு மற்றும் பொதுமக்களின் பயன் பாட்டுக்காகப் பெறப்படவுள்ளது.
இதன் உட்கட்டுமானப் பணியின் முழுப்பொறுப் பையும் சீன நிறுவனமே மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

# முல்லைத்தீவு போராட்டங்களுக்கு அம்பாறை ஊடகவியலாளர்களும் ஆதரவு

அம்பாறை, பெப்.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஊடகவியலாளர்கள் நேரில் சென்று ஆதரவு தெரிவித்தனர்.



அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் கேப்பாபிலவு மற்றும் புதுக்குடியிருப்பு போராட்டக் களத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்றனர். போராட்டத்துக்கான தமது ஆதரவை மக்களிடம் வெளிப்படுத்தினர்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத் தலைவரும் மூத்த ஊடகவியலாளருமான கலாபூசணம் மீரா எஸ். இஸடீன் தலைமையில் இருபதுக்கு மேற் பட்ட பிராந்திய ஊடகவியலாளர்கள் பிரசன்னமாகியிருந்தனர்.

அறவழிப் போராட்டம் இடம் பெற்று வரும் கேப்பாபிலவு புதுக்குடியிருப்பு பகுதிகளில் ஊடகவியலாளர்கள் மேற்கொண்ட மக்கள் சந்திப்பின்போது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் எஸ். சிவமோகன், முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் அணித்தலைவர் இளஞ்செழியன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். அறவழிப் போராட்டம் குறித்த விளக்கங்களையும் அளித்தனர்.

கேப்பாபிலவு புதுக்குடியிருப்பு மக்களின் உணர்வுபூர்வமான போராட்டத்துக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம்களும் வெளிப்படுத்திவரும் ஆதரவை ஊடகவியலாளர்கள் இந்தச் சந்திப்புக்களின் போது எடுத்துக் கூறினர்.

இந்த விடயத்தில் எத்தகைய விட்டுக்கொடுப்புக்கும் இனி இடமில்லையென் றும் தமது கோரிக்கைக்கு உருப்படியான பயன் கிடைக்காவிட்டால் சில தினங்களில் போராட்ட வடிவம் மாறும்.

நூறு வீதம் அறவழிப்போராட்டமாக அது வலுவுடன் அமையுமென்றும் போராட்டக்கள மக்கள் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தனர்.

தமது நியாயமான போராட்டத்துக்கு அம்பாறை மாவட்டத்திலிருந்து நேரில் வந்து ஆதரவு தெரிவித்த அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சிவமோகன் மக்கள் சார்பில் நன்றி தெரிவித்தார். (ற-30)

# பிலக்குடியிருப்புப் போராட்டத்துக்கு ஆதரவாக முருங்கனில் போராட்டம்

மன்னார், பெப்.28



பிலக்குடியிருப்பு காணிமீட்புப்போராட்டத்துக்கு ஆதரவு தெரி விக்கும் வகையிலும், மன்னார் முள்ளிக்குளத்தில் காணிஅபகரிப்புக்கு எதிராகவும் நேற்று முருங்கள் பேருந்து நிலையத்தில் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

மன்னார், மதவாச்சி வீதியில் உள்ள முருங்கன் பேருந்து நிலையத்தில் மு.ப. 9 மணிக்கு ஆரம்பித்த கண்டனப் பேரணி பி.ப.2மணிவரைநடைபெற்றது.

நல்லாட்சி அரசே நாங்களும் இலங்கையரே நாசம் செய்யாதே, ஆக்கிரமிப்பாளர்களே எமது மண்ணை எம்மிடம் தாருங்கள், எம் உறவுகளின் நியாயமான கோரிக்கை நிறைவேறும் வரை உறக்கம் கொள்ளமாட்டோம் - போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கண்டனப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

அருட் தந்தையர்கள், இந்து மத குருக்கள்,வடமாகாண சபை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பீ.ஏ.அந்தோனிமார்க் உட்படப் பலர் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதிக்கான மனு ஒன்றும் உரிய அதிகாரிகளிடம் ஒப் படைக்கப்பட்டது. (ற-56)

# தேசிய பக்கவாத தின நடைபயணம் நேற்று

கொழும்பு, பெப்.28

"இருளடைந்த வாழ்வுக்கு ஒளி" என்ற தொனிப்பொருளில் தேசிய பக்கவாத தின நடைப்பயணம் நேற்று அரச தலைவர் தலைமையில் விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்றது.

பக்கவாத நோய் தொடர்பாக மக்களுக்கு தெளிவூட்டி பக்கவாத நோயைத் தவிர்க்கும் நோக்குடன் இலங்கை தேசிய பக்கவாத சங்கத்தால் இந்த நடைபயணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கை தேசிய பக்கவாத சங்கம்மேற்கொள்ளும்சேவைகளுக்கு அரச தலைவர் பாராட்டுத் தெரிவித்தார். சங்கத்தின் தலைவர் எம்.டி.எம்.ரிப்ஷி அரச தலைவருக்கு நன்றி தெரிவித்தார்.

நிகழ்வில் இலங்கை தேசிய பக்கவாத சங்கத்தின் போசகர் மருத்துவ கலாநிதி ஜே.பீ.பீரிஸ், நரம்பியல் நிபுணர் மருத்து கலாநிதி பத்மா குணரத்ன உட்பட சுகாதார துறை அலுவர்களும், கலைஞர்களும் பங்கு கொண்டனர்.

மூளைக்கான குருதி வழங்கலில் சடுதியாக ஏற்படும் தடை காரணமாக பக்கவாதம் ஏற்படுகின்றது. உலகில் உயிரிழப்பை ஏற்படுத்தும் நோய்களில் பக்கவாதம் இரண்டாவது இடத்தைப் பிடிக்கின்றது. முதியவர்களை அங்கவீனர்களாக்கும் பிரதான காரணியாகவும் பக்கவாதம் காணப்படுகின்றது. (ற)

# முள்ளிச்சந்தியில் பொலிஸ் பிரிவு கட்டடம்

யாழ்ப்பாணம், பெப். 28

துன்னாலை முள்ளிச்சந்தியில் நிறுவப்பட்டுள்ள பொலிஸ் பிரிவுக் கட்டடம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 11மணிக்கு திறக்கப்படவுள்ளது.

ஓய்வுநிலை கிராம சேவையாளர் நா.குருபரன்தலைமையில்நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் அதிபர் சஞ்சீவ் தர்மரட்ண புதிய கட்டடத்தைத் திறப்பார்.

நிகழ்வுக்கு கௌரவ விருந்தினராக காங்கேசன்துறை பிராந்திய உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் பியந்தவும், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் ஜெயலத், நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.த. பியந்த, வல்வெட்டித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி தி. ராஜ்குமார் ஆகியோரும் கலந்து கொள்வர். (ற-173)

# பிலக்குடியிருப்பு ஆர்ப்பாட்டத்துக்கு கூட்டுறவு சபை ஆதரவு

பிலக்குடியிருப்பு மக்களின் அறவழிப் போராட்டத்துக்கு யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை முழுமையான ஆதரவையும், பங்களிப்பையும் வழங்கும்.

சபையின் இயக்குநர் சபைக் கூட்டம் கடந்த வாரம் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு மக்களின் அறவழிப் போராட்டத்துக்கு சபை முழுமையான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்குவது என தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

கூட்டுறவாளர்கள் அனைவரையும் ஒன்றுசேர்த்து இந்த மக்களின் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூட்டுறவுச் சபை தெரிவித்தது. (ற-17)

# புதிய தேர்தல் முறைமை இனவாதத்தைத் தூண்டும்

### மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப்.28

உள்ளூராட்சி சபைத் தேர்தலை தற்போதைய தேர்தல் முறைமையின் கீழ் நடத்திவிட்டு அடுத்த தேர்தலை புதிய முறைமையின் கீழ் நடத்த வேண்டும்.



இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி, அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

முன்னாள் அமைச்சர் அதாவுல்லாவால் நிறைவேற்றப்பட்ட புதிய முறைமையின் கீழ் தேர்தலை நடத்தினால் அது இனவாதத்தைத் தூண் டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை இனியும் ஒத்திப்போடாமல் உடனடியாக நடத்துவதன் மூலமே மக்களின் வாக்குரிமை பாதுகாக்கப்படும்.காரணங்களைக் கூறி அரசு தேர்தலை பிற்போடுவதை எம்மால் ஏற்கமுடியாது.

அதாவுல்லா மாகாண மற்றும் உள் ளூராட்சி சபை அமைச்சராக இருந்தபோது புதிதாக நிறைவேற்றப்பட்ட தேர்தல் முறைமைதான் தேர்தலை நடத்துவதற்குத் தடையாக இருக்கின்றது என்று காரணம் சொல்லப்படுகின்றது.அது உண்மை.இந்தத் தேர்தல் சட்ட மூலத்தில் இருக்கின்ற குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் தான் அந்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டது.

அப்போதைய மாகாண மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சராக இருந்த அதாவுல்லா இந்த வாக்குறுதியுடன் அந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றினார்.அப்போது மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயம் இனவாதத்தையும், சாதிப் பாகுபாட்டையும் தூண்டுவதாக இருந்தது.அதனாலே மீண்டும் எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதற்கு நீண்ட காலம் சென்றாலும்கூட ,இப்போது அந்தப் பணி நிறைவடைந்துள்ளது. எனினும் அதாவுல்லா காலத்தில் நிறைவேற்றப்பட்ட தேர்தல் முறைமையின்கீழ் தேர்தலை நடத்தப் போனால் பல பிரச்சினைகள் உருவாகும்.

58 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் கூறுகின்றார்.மறுபுறம் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை சரியாகத் தீர்மானிக்கப்படவில்லை. பெண்களின் பிரதிநித்துவம் 25 வீதம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதை எப்படி உள்வாங்குவது என்று குறிப்பிடப்படவில்லை.

அதிகமான பிரச்சினைகள்அதில் உள்ளன.அதற்கு ஒரே தீர்வு அந்தச் சட்டத்தைத் திருத்துவது தான். அதற்கு அதிக காலம் தேவைப்படும்.இப்போதே இரண்டு வருடங்களைத் தாண்டிவிட்டோம். இனியும் காலம் கடத்த முடியாது - என்றார். (ற-3)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 16 . 06 . 1924

இறப்பு 03 . 03 . 2014

திருமதி அருளம்மா சண்முகநாதன்

திதி: துதியை (28.02.2017)

அம்மா இல்லையேல் அரண்மனைகூட அநாதைதான்
இழப்புக்கள் இயற்கையானவைதான்
அம்மா, மாமி, அம்மம்மா, அப்பம்மா, பூட்டியாக வாழ்ந்த
உங்கள் நினைவுகளை மறக்க முடியவில்லையே !
நாள்கள் சென்றாலும் வருடங்கள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் எங்களுடன் வாழும்

39, நல்லூர் குறுக்குத்தெரு.
நல்லூர்.

சிறீ
077 077 5530



## ஓ.பி.எஸ். பிரணாப் முகர்ஜி இன்று சந்திப்பு


சென்னை, பெப். 28
தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்துக்கும் இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜிக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று இடம்பெறவுள்ளது. தமிழத்தில் அ.தி.மு. கழகத்தின் உட்கட்சி விவகாரம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. சசிகலா, பன்னீர்செல்வம், தீபா ஆகிய மூன்று தரப்பினரும் தனித்தனியாக தங்களது அணியை பலப்படுத்தும் முனைப்பில் ஈடுபட்டு வருகின்றனர். வார்த்தை மோதல்களிலும் ஈடுபடுகின்றனர். இந்த நிலையில், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வமும் அவருக்கு ஆதரவான சட்டமன்ற உறுப்பினர்களும் இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியை இன்று சந்திக்கவுள்ளனர். தமிழகத்தின் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அமைச்சரவை மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு அண்மையில் நடைபெற்றது. இந்த வாக்கெடுப்பில் சட்டசபையில் கைக்கலப்புக்களும் இடம்பெற்றன. எதிர்க் கட்சிகள் இல்லாமல் வாக்கெடுப்பு நடந்து முடிந்தது. இது தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## ஈராக் அரசு முன்னேற்றம்

பக்தாத். பெப். 28
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில்உள்ளமேற்கு மோசூலை மீட்கும் போர் ஆரம்பித்துள்ள நிலையில், அங்குள்ள இரண்டு மாவட்டங்கள் மீட்கப்பட்டன என்று ஈராக் இராணுவம் அறிவித்தது.
மமூன், தெய்ரான் ஆகிய மாவட்டங்களே அவ்வாறு கைப்பற்றப்பட்டன. இந்த மீட்புப் போரில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் தற்கொலை, கார்குண்டுத் தாக்குதல்களை அதிகம் மேற்கொண்டனர் என்றும்-ஈராக் இராணுவத் தரப்பில் குறிப்பிடப்பட்டது. பொதுமக்கள், சிப்பாய்கள், ஆயுததாரிகள் தரப்பின் உயிரிழப்புக்கள் தொடர்பில் நேற்று மதியம் வரை தகவல்கள் வெளியாகவில்லை. (ம)



இஸ்ரேல் - பலஸ்தீனம் ஆகிய நாடுகள் பரம எதிரி நாடுகளாக உள்ளன. பலஸ்தீனத்திடம் இ
உள்ளிட்ட சில பகுதிகளை இஸ்ரேல் அரசு கைப்பற்றி வைத்துள்ளது மட்டுமல்லாமல், இஸ்
மிக நெருக்கமாகவும், அதன் சுய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும், 4 ஆயிரம் வீடுகள் கொ
யையும் அமைத்து வருகிறது. அதன் ஒளிப்படமே இது. ஐக்கிய நாடுகள் சபை இஸ்ரேலின்
கண்டனத்தைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



## ஈராக் குண்டுவெடிப்பில் பெண் செய்தியாளர் சாவு

பாக்தாத், பெப். 28
ஈராக் - மேற்கு மோசூலில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் பெண் செய்தியாளர் ஒருவர் உடல் சிதறிச் சாவடைந்தார். ஈராக், சிரிய நாடுகளைக் கைப்பற்றி, அவற்றை ஓர் தனி நாடு என்று அறிவித்துள்ளது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் சிக்கியிருந்தது. அந்த நகரின் கிழக்குப் பகுதி ஏற்கனவே மீட்கப்பட்டுவிட்டது. மேற்குப் பகுதியை மீட்கும் போர் தற்போது நடைபெற்று வருகிறது. இது தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்காக தனியார் தொலைக்காட்சி நிறுவனமான ரூடாவின் செய்தியாளர் சிபா கார்ட்டி சென்ற வேளையில், சாலை ஓரத்தில் கிடந்த குண்டு வெடித்ததில், அவர் உடல்சிதறி சம்பவ இடத்திலேயே சாவடைந்தார். சிபாவுடன் சென்ற காணொலிப் பதிவாளர் யூனிஸ் முஸ்தபா படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் தெரிவித்தன.
எங்களின் துணிச்சல் மிகுந்த செய்தியாளர் சிபாவின் இழப்பு வார்த்தைகளால் சொல்லிவிட முடியாதது என்று ருடா செய்தி நிறுவனம் தெரிவித்தது. (ம)

## 500 மதுக் கடைகள் மூடப்பட்டன

சென்னை, பெப். 28
தமிழக அரசின் உத்தரவை அடுத்து 500 மதுக் கடைகள் அங்கு மூடப்பட்டன.
தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள எடப்பாடி பழனிச்சாமி தனது முதலாவது கையெழுத்தை 500 மதுக் கடைகளை மூடல் எனும் திட்டத்தில் வைத்தார். இதற்கு சிலர் ஆதரவாக கருத்துத் தெரிவித்தனர். தி.மு. கழகத்தின் தலைவரும், தமிழக சட்டசபையின் எதிர்க் கட்சித் தலைவருமான மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட ஓர் சில முக்கியப் புள்ளிகள் இந்தத் திட்டம் ஒருபோதும் நடைமுறைப்படுத்தப்படாது என்று குறிப்பிட்டனர். இது அ.தி.மு. கழகத்தின் மீது




மக்களிடம் ஏற்பட்டுள்ள அவப்பெயரை இல்லாது செய்ய மேற்கொள்ளப் பட்டுள்ள அறிவிப்பு மட்டுமே என்பது ஸ்டாலினின் கருத்தாக அமைந்தது. இந்த நிலையில்தான், அறிவித்ததைப் போல் 500 மதுக் கடைகளை மூடியுள்ளார் எடப்பாடி பழனிச்சாமி. அங்கு பணியாற்றிய ஆயிரத்து 700 ஊழியர்கள் வேறு கடைகளுக்கு மாற்றப்பட்டனர். (ம)

## அகதிகள்
## ஜேர்மனியி
### சிறுவருக்கு எ



பெர்லின், பெப். 28
ஜேர்மனியில் தஞ்சம் அடைந்துள்ள அகதிகளுக்கு எதிராக கடந்த வருடத்தில்மட்டும் 3 ஆயிரத்து 500 தாக்குதல்கள் பதிவாகியுள்ளன என்று ஜேர்மனியப் பொலிஸார் தெரிவித்தனர். ஈராக், சிரியா, லிபியா, ஆப்கானிஸ்தான், ஏமன், நைஜீரியா போன்ற நாடுகளில் நிலவும் போர் சூழ்நிலை காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் லிபியா வழியாக இத்தாலிக்குச் சென்றடைந்து பின்னர் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். அவ்வாறு செல்பவர்களின் பெரும்பாலான தெரிவாக ஜேர்மனி உள்ளது. அதிகளவு அகதிகளை ஆதரித்த நாடும்

## இயற்கை எரிவாயுத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தொடர்கிறது தமிழகத்தில்

சென்னை, பெப். 28
தமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில் இயற்கை எரிவாயு பெறுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த முடிவுக்கு தற்போது தமிழகமெங்கும் பெரும் எதிர்ப்பலை ஏற்பட்டுள்ளது. மத்திய அரசைக் கண்டித்து புதுக்கோட்டையில் போராட்டத்தில் ஈடுபட்ட 28 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.
இயற்கை எரிவாயு பெறும் திட்டத்தைச் செயற்படுத்தினால் விவசாய நிலங்கள் அழியும், நெடுவாசல் கிராமத்தையொட்டிய சுமார் 50 கி.மீ. தூரத்துக்கு நிலத்தடி நீர்மட்டம் பாழாகும் என்ற அச்சம் இருப்பதால் இந்தத் திட்டத்தைக் கைவிடவேண்டும் என்று அரசியல் கட்சிகள் முதல் பல்வேறு அமைப்புக்கள் சார்பில் தற்போது போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நெடுவாசல் கிராம மக்கள், இயற்கை எரிபொருள் நிலையம் அமையப்போகும் இடத்துக்கு அருகில் பந்தல் அமைத்து



கடந்த சில தினங்களாக சுழற்சி முறையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இயற்கை எரிவாயுத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜல்லிக்கட்டு ஆதரவுப் போராட்டத்தைப் போன்று மிகப் பெரும் போராட்டம் நடத்தப்படலாம் என்று இந்திய ஊடகங்கள் சில குறிப்பிட்டன. (ம)

## நினைத்ததை

ஈராக் அரசால் பேணிப் பாதுகாக்கப்பட்
கலாசார சின்னங்கள் பலவற்றை,
நினைத்ததை விட அதிகளவில் ஐ
ஐ.எஸ். அமைப்பு அழித்தது



...ந்திடம் இருந்து கிழக்கு ஜெருசலேம் ...ல், இஸ்ரேல் அரசு பலஸ்தீனத்துக்கு ...ள் கொண்ட குடியிருப்புத் தொகுதி ...ரேலின் இந்தத் திட்டத்துக்கு தனது (ம)

# மரங்களை அதிகம் நடுங்கள் தலிபான் குழுவின் அழைப்பு



தலிபான் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்று அல்லது பல பழம் தரும் மரங்களை அல்லது பழம் தராத மரங்களை பூமியை அழகுபடுத்தும் நோக்கிலும், அல்லாவின் படைப்புகளின் நலனுக்காகவும் நடவேண்டும் என தலிபான் அமைப்பின்தலைவர் ஹிபத்துல்லா அகுந்ஸதா அழைப்பு விடுத்தார். குறிப்பாக ஆப்கானிஸ்தான் மக்களுக்கு இந்த அழைப்பை அவர் விடுத்தார்.

காடுகள் அழிப்பு நடவடிக்கையால் ஆப்கானிஸ்தான் கடும்பிரச்சினையை எதிர்கொண்டு வருகிறது. எரிப்பதற்கும், சட்டவிரோத விற்பனைக்கும் மரங்கள் வெட்டி சாய்க்கப்படுகின்றன. இத்தகைய பின்னணியிலேயே ஹிபத்துல்லா இவ்வாறான ஓர் அழைப்பை விடுத்தார். சுற்றுச்சூழல் குறித்து தலிபான் போன்ற ஆயுத அமைப்பிடமிருந்து அறிக்கைகள் வருவது மிகவும் அரிதான ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# கோலாலம்பூர் விமான நிலை... பயணத்துக்கு பாதுகாப்பான...

## உறுதிப்படுத்தியது மலேசியா

கோலாலம்பூர், பெப். 28
மலேசியாவின் கோலாலம்பூர் விமான நிலையத்தில் இரசாயன கதிர் வீச்சு இல்லை. பயணத்துக்குப் பாதுகாப்பான இடமாகவே அது உள்ளது என்று மலேசியா அறிக்கை வழங்கியது.
மலேசியாவின் கோலாலம்பூர் விமான நிலையத்தில், கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை கிம் ஜோங் நாம் சடலமாக மீட்கப்பட்டார். இந்தக் கொலையின் பின்னணியில் இந்தோனேசியப் பெண் சிட்டி ஆய்சா, அவரது மலேசியக் காதலர், வியட்நாம் பெண்பொன்திஹுவாங், வடகொரியாவைச் சேர்ந்த ரி ஜாங் சோல் நால்வரும் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டனர்.
மலேசியப் பொலிஸார் நடத்திய விசாரணையின் அடிப்படையில் வி.எக்ஸ் எனும் இரசாயனத்தைப் பயன்படுத்தியே கிம் ஜோங் நாம் கொல்லப்பட்டார் என்பது தெரியவந்தது.
இந்த இரசாயனத்தில் ஒரு துளிபோதும் ஒரு மனிதனைக் கொன்றுவிட. இதனால் இதை ஐக்கிய நாடுகள் [illegible] தடைசெய்துள்ள[illegible] எனவே, கிம் [illegible] நாமைக் கொல்[illegible] காக அவரது முக[illegible] விசிறப்பட்ட இரசா[illegible]ணம் விமான நிலையத்தில் சிதறிக் கிடக்கலாம். அல்லது பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. இதனால் மலேசியா, விமான நிலையம் முழுவதையும் முழுமையாக ஆய்வுசெய்து வி.எக்ஸின் தடயங்கள் எங்கும் இல்லை என்று அறிக்கை வழங்கியது. (ம)

# ...ள் மீது கடந்தாண்டு ...யில் தாக்குதல் தீவிரம்

## ...கு எதிராகவும் நடந்தன




அதுவே. அந்தவகையில் இதுவரை கிட்டத்தட்ட 15 லட்சம் அகதிகளுக்கு ஜேர்மனி தஞ்சம் வழங்கியுள்ளது.
ஜேர்மனின் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் மற்றும் தஞ்சமடைந்தவர்களுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்கள் தற்போது அதிகரித்து வருகின்றன என்று பொலிஸாரின் புள்ளிவிவரம் சுட்டி நிற்கிறது.
கடந்த வருடம் மட்டும் 3 ஆயிரத்து 500 தாக்குதல்கள் அகதிகளுக்கு எதிராக பதிவாகியுள்ளது. அவற்றில் 43 தாக்குதல்கள் சிறுவர்களுக்கு எதிரானவையாக உள்ளன. தாக்குதல்கள் நடத்தப்பட்டு, அவை முறையிடப்படாமலும் இருக்கலாம் என்றும் பொலிஸார் அச்சம் வெளியிட்டனர். 2015 ஆம் ஆண்டு பதிவான தாக்குதல்களைவிட, இது அதிகம் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.
ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகள் போல் செல்லும் ஆயுததாரிகளால் பெரும் அச்சுறுத்தல் உள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளதால் ஒவ்வொரு நாடும் தமது எல்லைகளை இறுக்கமாகப் பாதுகாத்து வருகின்றன. ஜேர்மனியும் வழக்கமாக தான் காட்டிவந்த அனுசரிப்புப் போக்கை படிப்படியாக இறுக்கி வருகிறது. அகதிகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் ஜேர்மனியில் அண்மைக்காலமாக நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## திருச்செந்தூரில் படகு கவிழ்ந்தது

### 9 பேர் சாவு

தமிழகத்தில் திருச்செந்தூர் அருகே மணப்பாடு பகுதியில் சுற்றுலா பயணிகளின் படகு கவிழ்ந்ததில் 9 பேர் உயிரிழந்தனர்.
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றது. கடல் சீற்றம் கடுமையாக இருந்த காரணத்தால் படகு புறப்பட்ட சிறிது நேரத்திலேயே படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

# சிலியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு 40 லட்சம் மக்கள் கடும் தவிப்பு

சான்தியாகோ, பெப். 28
கடும் மழை மற்றும் நிலச்சரிவால் சிலியின் தலைநகர் சான்தியாகோவில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
தென்னமரிக்க நாடான சிலியில் சமீபத்தில் பலத்த மழை பெய்தது. இதனால் பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டது. மைபோ ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, கரைகள் உடைந்தன. இதனால் அதில் இருந்த தண்ணீர் முழுவதும் வெளியேறி ஊருக்குள் புகுந்தது.
மைபோ ஆற்றில் இருந்துதான் சிலி தலைநகர் சான்தியாகோவுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. தற்போது ஆற்றில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக குடிதண்ணீர் முழுவதும் வெளியேறிவிட்டது. இதனால் சான்தியாகோவில் வசிக்கும் 40 லட்சம் மக்கள் குடிதண்ணீருக்கு அல்லாடும் நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலைகள், சில அரசநிறுவனங்கள் ஆகியனவும் மூடப்பட்டுள்ளன. (ம)



# ...தை விட அதிக கலாசார சின்னங்களை அழித்து முடித்தது ஐ.எஸ்.ஐ.எஸ்.

...ாக்கப்பட்டுவந்த ...வற்றை, தான் ...ாவில் ஐ.எஸ். ...த்தது என்று யுனெஸ்கோ அமைப்பு குறிப்பிட்டது.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. ஈராக்கில் உள்ள பழைமைகளை உள்ளடக்கிய நிம்ரூட் கிராமம், தைகிரிஸ்ட் நதிக்கரை ஆகியன ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியிலேயே இருந்தன. இவை சில வாரங்களுக்கு [illegible] அந்த அமைப்பிடம் [illegible] மீண்டும் கைப்பற்றப்பட்டது. சேத விவ[illegible] கணக்கிடப்பட்டு [illegible]கின்றன. இந்த [illegible] தாம் ஏற்கனவே அறிவித்த மற்றும் கணக்கிட்டதை விட அதிகளவான தொல்பொருள் சின்னங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் அழிக்கப்பட்டது என்று யுனெஸ்கோவின் அறிக்கை ஒன்று குறிப்பிடுகிறது. (ம)

# பொருளாதார முன்னேற்றத்தை துரிதமாக்குவதே அரசின் கொள்கை

## அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



அனைத்து நாடுகளுடனான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை கட்டியெழுப்புவதன் ஊடே பொருளாதார முன்னேற்றத்தை துரிதமாக்கிக் கொள்வதே அரசின் தற்போதைய கொள்கை என்பதான கருத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
இலங்கைக்கு வருகை தந்துள்ள அமெரிக்க காங்கிரஸின் நீதிச் செயற் பாட்டு மேற்பார்வைக் குழுவின் தலைவர் போப் குட் லட்டி உள்ளிட்ட அமெரிக்க உயர் பிரதிநிதிகள் குழுவை தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தபோதே அரச தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.
மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, "நாட்டில் மீண்டுமொரு போர்ச் சூழல் ஏற்படுவதனைத் தவிர்க்கும் விதமாக நாட்டில் நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம். குறிப்பாக நாட்டில் நல்லிணக்கத்தை பலப்படுத்துதல், மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் பொருளாதார உறுதிநிலையை ஏற்படுத்தி அனைத்து மக்களதும் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத் துவதே அரசின் தற்போதையதான குறிக்கோள்.
புவியியல் ரீதியிலே இலங்கை முக்கிய அமைவிடத்தில் உள்ளது. கப்பல் போக்குவரத்தில் மட்டுமன்றி இந்து சமுத்திர பிராந்தியத்தின் பாதுகாப்பு தொடர்பிலும் பங்களிப்பினை செய்துவருகிறோம்.
இலங்கை பாரிய வெளிநாட்டு முதலீட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பிலும் கவனமெடுக்க வேண்டியுள்ளது"- என்றார்.
மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் கூட்டு அரசாங்கத்தின் செயற்பாடுகள் பிரதானமாக மேற்கொண்டு வரும் நல்லிணக்க செயற்பாடுகள், ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார கொள்கைகளுக்கும் ஆதரவு கிடைத்துள்ளதான தகவல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையேயான இருதரப்பு ரீதியிலான உறவுகளை பலப்படுத்தவும் இலங்கையின் புதிய அபிவிருத்தி திட்டங்களுக்காக அமெரிக்காவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவும் இலங்கை அரசு எதிர்பார்த்துள்ளது."

# அதிக விலை நிர்ணயங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை



அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்வோருக்கெதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதான தகவல் தரல் வர்த்தக மற்றும் கைத்தொழிற்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீனால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
இதன்படி அரசு அறிவித்த கட்டுப்பாட்டு விலை நிர்ணயத்திலிருந்து அதிகரித்த விலைக்கு அரிசியை நுகர்வோருக்கு விநியோகம் செய்த ஆயிரத்து 900 வர்த்தகர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ஆயிரத்து 300 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.
அண்மையில் வவுனியாவில் இடம்பெற்றிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்ட கருத்துகள் அமைச்சரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
மேலும், நுகர்வோர் விவகார அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் நாடு முழுமையுமாக சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளதாகவும் அதிக விலைக்கு அரிசி விற்பனைச் செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கெதிராக பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.





# 'டொட் பிரெயில்' அதிதிறன் கடிகாரம் அறிமுகம்

## பார்வையற்றோருக்கான அதிதிறன் உணரியாக வெளிவரவுள்ளது.

தொழில்நுட்ப வளர்ச்சியின் வழியே பலவித கண்டுகொள்ளல்கள் மனிதப் பயன்பாட்டு ரீதியிலே வெளிவந்துகொண்டுள்ளன. உலக மயமாதலின் சுருக்கம் என்பது அனைத்து விடயங்களையும் கைகளுக்கள் அறிவுபூர்வமாக விரிவாக்கித்தந்துள்ளது.
அந்தவகையிலே கடந்த மூன்று ஆண்டுகளாக ஆய்வுநிலையில் இருந்து வந்ததான பார்வையற்றவர்களுக்கான 'டொட் பிரெயில்' அதிதிறன் கடிகாரம் தென்கொரியா நிறுவனத்தின் தயாரிப்பாக எதிர்வருகின்ற மார்ச் மாதம் சந்தைக்கு வரவுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவை பார்வையற்றவர்கள் படிக்க உதவக் கூடியதான பிரெயில் எழுத்துமுறையை பயன்படுத்தியதாக மென்மையாக வடிவமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.
முன்பதாக 1842 ஆம் ஆண்டு லூயிஸ் பிரேயில் என்பவர் பிரெயில் எனப்படும் குறியீட்டு முறையினை கண்டுபிடித்தார். இதன் மூலம், எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்களை பார்வையற்றவர்கள் தங்களின் விரல்களின் மூலம் அறிந்து கற்றுக்கொண்டார்கள்.
தவிர, பார்வையாற்றவர்கள் பிரேயில் முறைப்படி உபயோகிப்பதான உலகின் முதல் அதிதிறன் கடிகாரமாக இவை அமைந்துள்ளமை நோக்கத்தக்கது.


# 'போயிங்' நிறுவனத்தின் முதலாவது ஐரோப்பிய வணிக தொழிற்சாலை பிரித்தானியாவில் அமையவுள்ளது



அமெரிக்க நிறுவனமான 'போயிங்' தனது முதலாவது ஐரோப்பிய வணிக தொழிற்சாலையை பிரித்தானியாவின் தெற்கு யோக்சயரில் ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.
இதன்படி மேற்படி தொழிற்சாலையை அமைப்பதற்கான அனுமதி வழங்கப்படும் பட்சத்தில் 'போயிங்' நிறுவனத்தினால் கடந்த 2001 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதான ஆராய்ச்சி மையம் மற்றும் செபீல்ட் பல்கலைக்கழகம் என்பன அமைந்துள்ளபகுதியில் குறித்த தொழிற்சாலையும் நிறவப்படும் என தெரிவிக்கப்படுகிறது.
அண்ணளவாக 20 மில்லியன் பவுண்ட் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளதான குறித்த தொழிற்சாலையின் உருவாக்கம் மூலமாக அதிக வேலைவாய்ப்புகள் தோற்றுவிக்கப்படும் என்ற தகவல் கூறப்படுகிறது.
மேலும் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய விமானப் பாகங்களை உற்பத்தி செய்யும் வகையிலேயே இந்த தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தபால் முத்திரைகளின் விலை அதிகரிப்பு



முதல் மற்றும் இரண்டாம் தர தபால் முத்திரைகளின் விலை நிர்ணயங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் ஒரு பவுண்டினால் அதிகரிக்கப்பட உள்ளதாக பிரித்தானியாவின் தபால் சேவை நிறுவனமான றோயல் மெயில் அறிவித்துள்ளது.
இதன்படி முதல்தர தபால் முத்திரைகளின் விலை நிர்ணயமானது 65 பவுண்ட்ஸ் ஆகவும் இரண்டாம் தர தபால் முத்திரைகளின் விலை நிர்ணயமானது 56 பவுண்ட்ஸ் ஆகவும் அதிகரிக்கப்படவுள்ளது.
உலகளாவிய ரீதியிலே தபால் சேவையை சிறப்பான முறையிலே பராமரிப்பதற்கு இந்த விலை உயர்வை மேற்கொள்வதற்கான தேவை தற்போது ஏற்பட்டுள்ளதென றோயல் மெயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.
தவிர, தற்போதைய பொருளாதார சூழலில் இவ்வாறான விலை நிர்ணய மதிப்பீடுகளின் அதிகரிப்பு என்பது நிறுவனங்களுக்கும், தனிநபர்களுக்கும் அதிகரித்த செலவினங்களை ஏற்படுத்துமெனவும் அந்தவிடயங்களை உணரக்கூடியதாக உள்ளதாகவும் நிறுவன அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இரா தனம்

# வன்னிப் பிரதேச குளத்து மீன் வளத்தால் பயன்கள் கிடைக்கின்றனவா?

வன்னிப்பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான ஊர்கள், நீர் நிலைகளின் பெயர்களைக் கொண்டு அமைந்துள்ளதை அவற்றின் பெயர்களிலே இருந்து அறியக் கூடியதாக உள்ளது. குறிப்பாக மடு, மோட்டை, குளம் என்ற வகையிலும், நீரோடு சம்பந்தப்பட்ட முறிப்பு, வாய்க்கால், கட்டு என்ற வகையிலுமே பெரும்பாலான ஊர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. கற்சிலைமடு, சேமமடு, நயினாமடு, இத்திமடு, மதியாமடு, கல்மடு, கெருடமடு போன்றவையுடன், புல்மோட்டை, காஞ்சூரமோட்டை, சாளம்பைமோட்டை, நொச்சிமோட்டை, கற்குளம், சமளங்குளம், கனராயன்குளம், மாங்குளம், மன்னகுளம், புளியங்குளம், கள்ளிக்குளம், மூன்றுமுறிப்பு பெருங்கரு வேப்ப முறிப்பு, கூழாமுறிப்பு, கரிப்பட்ட முறிப்பு என மடு, மோட்டை, குளம், முறிப்பு சார்ந்த பெயர்கள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்தின் பெயர்களிலும் ஒவ்வொரு வரலாறு ஒளிந்து காணப்படுகின்றது. இன்றும் கூட, பாடசாலை மாணவர்களிடையே இத்தகைய பெயர்கள் எவற்றை குறிக்கின்றன என்பது அவர்களுக்கே தெரியாத ஒன்றாகும்.

**குளங்களை அண்டிய குடிமனைகள்**

முன்னைய காலகட்டத்தில், குளங்களை அண்டியே குடிமனைகள் காணப்பட்டன. நீர்த்தேவைகள் யாவற்றையும் குளங்களே பெரும்பாலும் நிறைவுசெய்து வந்தன. குளிக்க, குடிக்க, ஆடைகளைச் சுத்தம் செய்ய, சமைக்க என எல்லாவற்றுக்கும் குளங்களே பொதுமக்களுக்குக் கைகொடுத்தன. கிணறுகள் அரிதாகவே காணப்பட்டன. மனிதர்களுக்கு மட்டுமன்றி அவர்களால் வளர்க்கப்பட்ட எருமை மாடுகள், பசுமாடு கள், ஆடுகள் என்பவற்றின் தாகத்தைத் தீர்க்க குளங்கள் தண்ணீர் கொடுத்தன. குளங்கள் விவசாயத் தேவைக்குப் பெரிதும் பயன்பட்டதுடன் விவசாயத்தின் மூலம் உணவுத் தேவைக்கும் பெரிதும் பயன்பட்டன.

கிராமத்து மக்களுக்கு காட்டுமிருகங்களதும், வளர்ப்பு மிருகங்களதும் இறைச்சியும், மீனும், முக்கிய உணவுகளாக இருந்தன. குறிப்பாக வவுனியா மாவட்டத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல்சார்ந்த இடங்களைத் தவிர ஏனைய உள்ளூர் கிராமங்களிலும் குளத்து மீன்கள் முக்கிய கறித்தேவைக்கு உதவின. மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு கடல் மீன் அதிகம் பயன்பட்டது. இதனால் அந்த மாவட்ட மக்கள் கடல் மீன்பிடித்தொழிலையும் விவசாயத்தோடு தமது உபதொழிலாகச் செய்து வந்தனர்.

குளங்களிலே விரால், யப்பான், கெளிறு, குறவை, பொட்டியன், ஒட்டி, மண்விரால், உழுவை, மாங்கன், கச்சல், அயிரைக்கச்சல் ஆகிய இனங்களைச் சேர்ந்த மீன்கள் காணப்பட்டன. இவையாவும் உணவுத் தேவைக்காக குளங்களில் இருந்து பிடிக்கப்பட்டன. ஒவ்வொரு வகை மீனும் ஒவ்வொரு வகையான சுவையுடையது. இந்த விதம் பிடிக்கப்படும் பலதரப்பட்ட மீன்கள் தீய்த்தல், பொரித்தல், சுண்டுதல், குழம்புவைத்தல் என வெவ்வேறு விதத்தில் சமைத்து உண்ணப்பட்டன. கெளிறு, விறால், அயிரை முதலான சில மீன்கள் மிகப் பழைமையானவை. இற்றைக்கு 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்து புறநானூறு என்ற நூலிலும் வேறு பண்டைய நூல்களிலும் அந்தக் காலத்து மீன் வகைகள் குறித்த விவரங்கள் காணப்படுகின்றன. விலாங்கு என்ற மீன், பாம்பு போன்றது. தலை பாம்பின் தலைபோலவும் வால் மீனின் வால் போலவும் தோற்றம் கொண்ட இந்த மீனினம் தனக்கு ஆபத்துவரும் வேளைகளில் மீனுக்கு வாலையும் பாம்புக்கு தலையையும் காட்டி தப்பித்துக் கொள்கிறது. இதனை வைத்து இரட்டைவேடம் போடும் மனிதர்களை விலாங்கு போன்றவர்கள் எனக் கூறுவர். குளத்திலே காணப்படும் வெள்ளை நிற ஆமையைச் சிலர் உண்பர். இதனைப் பாலாமை என்பர். கறுப்பு நிற ஆமையைப் பெரும்பாலும் எவரும் உண்பதில்லை.



**தூண்டில் போட்டு மீன்பிடித்தல்**

பெரும்பாலும் தூண்டில் போட்டு மீன் பிடித்தலே குளத்தில் எந்தக் காலத்திலும் செய்யக் கூடிய மீன் பிடித்தல் முறைமை ஆகும். நீண்ட வரிச்சுத் தடி ஒன்றிலே மூன்று பாகம் வரையிலான நூல் அல்லது தங்கூசி எனப்படும் நைலோன் இளையைக் கட்டி அதிலே மிதப்பு ஒன்றையும் கட்டி அப்பால் வளைந்த கொழுக்கி உள்ள ஊசியைக் கட்டி நீருக்குள் மண்புழுக்களைக் குத்தித் தொங்க விடுவர். நீருக்குள் புழுவைக் காணும் மீன் அதனை லபக் என விழுங்கிச் செல்ல முயலும் போது கட்டப்பட்ட மிதப்பும் தாழ தூண்டில் தடியை கையில் பிடித்திருப்பவர் அந்தத் தடியை மேல் நோக்கி இழுக்க தூண்டிலில் சிக்கிக் கொண்ட மீன் வெளியே வரும்.

சாதாரணமாக வன்னி மாவட் டக் குளங்களில் மீன்பிடித்தல், இந்த வகையில் தூண்டில் போட்டு மீன் பிடிக்கும் முறையிலேயே இடம்பெற்று வந்தது.

கொக்கச்சான் என்ற ஒருவகை மீனினம் சில குளங்களில் இருந்தது. இது வாளை மீனைப் போன்றது. சுமார் ஓரடிவரை நீளம் கொண்டது. இந்த இன மீனை நிறைகுளத்தில், நிலாக் காலத்தில் தூண்டில் மூலமாகவே பிடிப்பார்கள். மார்கழி, தை, மாசி, பங்குனி முற்பகுதி வரை பெரும்பாலும் பனிக்காலமாக கால நிலை இருக்கும். குளத்திலிருந்து வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக அமைக்கப்பட்ட துருசு கூடிய வாய்க்காலில் அயிரைமீன்கள், கச்சல் மீன்கள், திரள் திரளாகக் குவியும். இவைகளைப் பெண்கள் இருவர் சேர்ந்து சேலைமூலம் வாரி அள்ளுவர். தனி ஒரு பெண் கூட தனது சேலையின் முந்தானைப் பகுதிசேலையால் இருகைகளாலும் அயிரை மீன்களை அள்ளுவார். பெண்கள் காலையில் உலையில் அரிசி போட்டு சோறு சமைத்துவிட்டு, குளத்துக்குச் சென்று குளித்துவிட்டு அயிரை மீன், கச்சல்மீன் என்பவற்றோடு வீடு திரும்புவது அந்த நாளை வழக்கம். மதியம் மற்றும் இரவுச் சாப்பாட்டுக்கு இந்த மீன்களை தீயல், குழம்பு, பொரி யல் எனப் பல வகையறாக்களில் சமைப்பார்கள். இந்த மீன் கறிகளின் மணமும் சுவையும் அற்புதமானவை.

அந்தக் காலப்பகுதியில் இந்த வகையான மீன்கள், இறைச்சி, தேன், கிழங்கு வகை ஒடியல், பனங்கிழங்கு, குரக்கன், சாமை, சோளம் போன்றவற்றை உணவாகக் கொண்டு 100 வயதுக்கு மேற்பட்ட காலம் வாழ்ந்ததுடன், நோய்களின்றி திடகாத்திரமானவர்களாகவும் செயற்பட்டு வந்துள்ளனர்.

**மீன்களைப் பிடிக்கும் முறைகள்**

இப்படியாக சாக்குப்பிடித்தல், மீன் அடித்தல், கரப்புக்குத்துதல் கலக்கிப்பிடித்தல், வலை போடுதல் போன்ற வகையான செயற்பாடுகளால் மீன்களை இலகுவாகப் பிடித்துக் கொள்வர். சில பெரிய குளங்கள் மூன்று நான்கு ஆண்டுகளுக்கொருமுறை தான் கடும் வறட்சிக்காலங்களில் வற்றிக்காணப்படும். தண்ணீரில் மீன்கள் மிகுதியாகப் பெருகி வருவதால் நீர் வற்றத் தொடங்க மீன்கள் இறக்கத் தொடங்கிவிடும். முள்ளு மீன்களின் முள்ளுக் குத்தி மீன்கள் இறந்து கரை ஒதுங்கும். பெரியகுளங்களில் மீன் பெருகும் வீதம் அதிகரித்து பிடிக்கும் விகிதம் குறைவதால் குளங்களை மன்னார் வியாபாரிகளுக்கு குத்தகைக்கு கொடுத்துப்பெறும் குத்தகைப்பணத்தை ஏதாவது பொதுப்பணிகளுக்குச் செலவிடுவர். வியாபாரிகள் குறித்த கால வேளைகளில் மீன்பிடித் தொழிலாளர்களைக் கொண்டு வலை போட்டு மீன்களைப் பிடிப்பர். இதற்காக குளங்களின் அருகே வாடிகளை அமைத்து, அங்கு தங்கி, மீன்களைப் பிடித்து அவற்றைச் கருவாடாக்கி உப்புப் போட்டு, வெயிலில் காய வைத்து வியாபாரத்துக்காக லொறிகளில் ஏற்றிச் செல்வர். ஆனால் மீன் பிடிகாரர்கள், அதாவது ஒப்பந்த அடிப்படையில் குளங்களைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் ஊரவர்களுக்கு அன்றாட உணவுக்கு ஒரு தொகை மீன்களை இலவச மாகக் கொடுக்க வேண்டும் என ஒப்பந்தம் செய்தே குளங்களைக் குத்தகைக்கு விடுவர்.

இவை தவிர குளத்திலே வளரும் கொட்டிக் கிழங்கு, தாமரைக்கிழங்கு என்பவற்றையும். குறித்த பிரதேச மக்கள் உணவாகப் பயன்படுத்தினர். வறிய நிலையில் உள்ள குடும்பங்கள் குறித்த கிழங்கு வகைகளை அதிக அளவில் பயன்படுத்தினர்.

**நீடித்த ஆயுள் தந்த உணவுகள்**

அந்தக் காலப்பகுதியில் இந்த வகையான மீன்கள், இறைச்சி, தேன், கிழங்குவகை ஒடியல், பனங்கிழங்கு, குரக்கன், சாமை, சோளம் போன்றவற்றை உணவாகக் கொண்டு 100 வயதுக்கு மேற்பட்ட காலம் வாழ்ந்ததுடன், நோய்களின்றி திடகாத்திரமானவர்களாகவும், இயங்கிவந்துள்ளனர். இன்று அந்த நிலை மாறி கடல் மீன்களையும், மாட்டு இறைச்சியையும் இரசாயனம் கலந்த மரக்கறிகளையும் உண்பதுடன், கசிப்பு, சாராயம் என்பவற்றையும் குடித்து இளமையிலே முதுமையடைந்து இறந்துவிடுவதுடன், அவர்களின் குடும்பங்களையும் நிர்க்கதியாக்கிவிடுகின்றனர் என்பது குறிப்பிடக் கூடிய அம்சமாகும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கையாலாகாத்தனம்

வடக்கு மாகாணத்தில் பன்றிக் காய்ச்சல் எனப்படும் எச் 1 என் 1 இன்புளுவென்சா காய்ச்சல் தீவிரமடைந்து வருகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் என்று அஞ்சப்படுவோரின் எண்ணிக்கை நூற்றைத்தாண்டிவிட்டபோதிலும் அது பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் மாகாண சுகாதார அமைச்சால் எடுக்கப்படவில்லை. கொழும்பு அரசு காட்டும் குறைந்தபட்ச அக்கறையைக்கூட மாகாண அமைச்சு இது விடயத்தில் காட்டுவதாகத் தெரியவில்லை.

பன்றிக்காய்ச்சல் மாகாணத்தைத் தாக்கிய ஆரம்பத்திலேயே உதயன் அதனைச் சுட்டிக்காட்டி மக்களை விழிப்படையச் செய்யவேண்டும் என்பதையும் கோடிட்டுக்காட்டி இருந்தது. ஆனால், எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதற்கான அறிகுறிகள் எவையும் இதுவரை இல்லை.

எமது அயலகமான தமிழகத்தில் பன்றிக் காய்ச்சலின் தாக்கம் தீவிரமாக இருப்பதும் இந்த நோயைக் கட்டுப்படுத்துவதில் அவர்களுக்கு இருக்கும் அனுபவமும்கூட அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எல்லாமே செவிடன் காதில் ஊதிய சங்காகவே போய்விட்டிருக்கிறது.

பன்றிக் காய்ச்சலோ, வேகமாகப் பரவ ஆரம்பித்திருக்கிறது. இதுவரையில் 125க்கும் மேற்பட்டவர்களுக்கு இந்தக் காய்ச்சல் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. அவர்களில் 40 பேர் வரையிலானோருக்கு நோய் இருப்பது அநேகமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. கர்ப்பிணிகள் 11 பேரும் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கர்ப்பிணிகளுக்கு ஒரேயொருநாள் காய்ச்சல் ஏற்பட்டாலும், உடனடியாக வைத்தியசாலையில் அவர்களைச் சேர்ப்பிக்க அறிவுறுத்துமாறு கொழும்பு சுகாதார அமைச்சு அறிவுறுத்தல் சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாக அறிய முடிகிறது. ஆனால் இது பற்றியெல்லாம் எந்தத் தகவல்களும் மக்களுக்கு வழங்கப்படவில்லை.

தற்போதைய காலநிலை காரணமாக வடக்கில் வைரஸ் காய்ச்சலின் தாக்கம் படுமோசமாக உள்ளது. வைத்தியசாலைகள் எல்லாம் இந்த நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன. இதற்கு மத்தியிலேயே பன்றிக் காய்ச்சலின் தாக்கமும் விரைவாகப் பரவி வருகின்றது. ஏற்கனவே டெங்குக் காய்ச்சல் கட்டுப்படுத்த முடியாத நிலையில் ஆண்டு முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. அது போதாது என்று இப்போது பன்றிக் காய்ச்சலும் வேறு.

பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாக வன்னியில் வாழும் மக்களே பன்றிக் காய்ச்சல் நோய்க்கும் அதிகம் இலக்காகியுள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. காய்ச்சலால் பாதிக்கப்படும் மக்கள் உடனடியாக தமக்கு அருகில் உள்ள வைத்தியசாலைகளையே நாடுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட பிராந்திய, ஆதார வைத்தியசாலைகளில் நோயாளியைக் கையாள்வதற்குத் தேவையான வசதிகளோ, பயிற்சிகளோ, உபகரணங்களோ மருத்துவர்களுக்கும் பணியாளர்களுக்கும் வழங்கப்படவில்லை.

எந்தத் தயார்ப்படுத்தலும் இல்லாததால், காய்ச்சல் என்று வருபவர்களை எல்லாம் உடனடியாக மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவிடும் போக்கே எங்கும் விரவிக்கிடக்கிறது. வருமுன் காப்பதே சிறந்தது என்று மருத்துவ உலகு எடுத்துச் சொன்னாலும், பன்றிக் காய்ச்சல் வராமல் காப்பது எப்படி என்பதைச் சுகாதார அமைச்சு ஏனோ மக்களுக்குச் சொல்லாமலே மறைத்து வருகிறது.

வடக்கு மக்களைக் காக்கவென ஒரு சுகாதார அமைச்சும் அமைச்சரும் இருக்கின்றபோதிலும், மக்களின் நிலைமை இப்படி இருப்பதை எண்ணும்போது கவலை ஏற்படுகிறது. வடக்கு சுகாதார அமைச்சின் கையாலாகத்தனம் மீது கோபமும் ஏற்படுகிறது.

# சுமந்திரன் கொலை முயற்சி வழக்கில் மர்ம முடிச்சு அவிழ்வது எப்போது?

ந.லோகதயாளன்

சுமந்திரன் கொலை முயற்சி வழக்கில் புதிய புதிய தகவல்கள் வெளிவருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்ய முயற்சிக்கின்றனர் என்ற தகவலின் பிரகாரம் இலங்கை பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினரால் கடந்த ஜனவரி 14ஆம் திகதிக்கும் 19ஆம் திகதிக்கும் இடைப்பட்ட நாள்களில் வடக்கின் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த, விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் ஐவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் ஐவரும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர்கள் என்றவுடன் வரிந்து கட்டி வேகமாகச் செயற்பட்ட பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார், அவர்களைக் கைது செய்ததோடு சட்டத்தின் முன்னால் நிறுத்தவும் செய்தனர்.

புலிகளுக்கு மீள உயிர்கொடுக்க முயல்கின்றனர் என்ற சந்தேகம் உறுதிப்படுத்தப்படுமானால், தமது தரப்பில் பல முன்னேற்றங்கள் அல்லது குறைந்தபட்சம் பதவி உயர்வாவது ஏற்படும் என எண்ணியே மிகத் துரிதமாகச் செயற்பட்டனர் பயங்கரவாத தடுப்புப் பொலிஸார்.

இந்த நிலையில் இவ்வாறு கைது செய்தவர்களிடமிருந்த கைத்தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டதோடு, வெளிநாடுகளில் உள்ளவர்களுடனான அவர்களது தொடர்புகள் ஆராயப்பட்டதுடன், அவர்களின் உரையாடல்களும் செவிமடுக்கப்பட்டன. அதன் பிரகாரம் பொலிஸார் தாம் அந்த விடயத்தில் முக்கிய கட்டத்தை அடைந்து விட்டதாகவே கருதினர். இவ்வாறு செவிமடுக்கப்பட்ட குரல்களில் தமது சந்தேகம் உறுதியாகும் விதத்தில் போதிய தரவுகள் அனைத்தும் உள்ளபோதிலும், அதனைப் பகிரங்கப்படுத்துவதில் பொலிஸார் தற்போது புதிய நெருக்கடிகளை எதிர்கொள்வதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. கைது செய்யப்பட்ட ஐவரையும் வெளிநாட்டில் உள்ள ஒருவரே வழி நடத்தியுள்ளார் எனப் பொலிஸார் நம்புகின்றனர்.

**கொலை முயற்சியில் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டுள்ளனரா?**

குறித்த முன்னாள் புலி உறுப்பினர்களை வழிநடத்தினார் எனக் கருதப்படும் வெளிநாட்டில் வதியும் முக்கிய புலி உறுப்பினரின் தொலைபேசி இலக்கத்துடன் இலங்கையின் வேறு பல இலக் கங்களும் தொடர்பைப் பேணி வந்துள்ளன. இதனால் அந்த இலக்கங்களுக்கு உரிய உரையாடலைப் பெறும் முயற்சிகள் இடம்பெறறன.

அவற்றின் அடிப்படையில் உரியவர்களை இனங்கண்டுகொண்டுள்ளனர் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார். தற்போது அத்தகைய இலக்கங்கள் அனைத்தும் இராணுவ புலனாய்வு அதிகாரிகளினது இலக்கங்கள் என்பதைப் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

இவ்வாறு இனம் காணப்பட்டவர்களை விசாரிக்கும் அதிகாரம் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடையாது என்கின்ற நிலமையே தற்போது வரையில் இந்த நாட்டின் சட்ட ஏற்பாடகவுள்ளது. இதனால் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் தமது அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் செய்வதறியாது குழம்பியுள்ளனர்.

இவ்வாறான குழப்பங்களின் மத்தியில், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கொலை செய்யவேண்டிய தேவை இராணுவத்தினருக்கு ஏன் ஏற்பட்டது. அல்லது அதற்கான அவசியம் என்ன என்பதே இன்று விடை காண வேண்டிய முக்கிய கேள்வி. இந்த நாட்டின் இராணுவத்தினரது செயற்பாடுகள் முழுமையாக அரசின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை எடுத்தியம்பும் மற்றுமோர் உதாரணம் இது. அந்தவகையில் இலக்கு நிறைவேறாதபோதிலும், இராணுவத்தினர் மற்றொரு வகையான இலாபமீட்டலை எதிர்பார்க்கின்றனர். அதாவது குறித்த திட்டத்தைத் தமது சொல்கேட்டு இயங்கும் ஒரு வெளிநாட்டுவாழ் புலி உறுப்பினர் மூலம் இயக்கி, வடக்கில் புலிகள் மீள் உருவாக்கத்துக்கான தகவல்களைக் கண்டறிந்து கொள்ளமுடியும்.

**புலிகளது மீள் உருவாக்கம் குறித்து அஞ்சும் இராணுவத் தரப்பு**

தமிழரில் ஒருவருக்கே இந்த நிலையெனில், எமது நிலைமை என்ன எனக் கூக்குரல் இட்டு அரசியல் ஆதாயம் தேடுதல் மற்றொரு எதிர்பார்ப்பாகும்.

அதே நேரம் வடக்கு - கிழக்கு தமிழர்களது எழுச்சியைத் தடுக்கவும் வேண்டும். இதனை இலக்கு வைத்தே திட்டம் முன்நகர்த்தப்பட்டது.

உண்மையில் கிராமப்புறத்தில் வசிப்பவர்களுக்குப் பொலிஸார் அல்லது இராணுவத்தினருடன் தொடர்பை ஏற்படுத்துவது அவ்வளவு கடினமான செயற்பாடு அல்ல. ஆனால் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாருடன் தொடர்பை மேற்கொள்வது மிக மிகக் கடினம். ஆனால் சுமந்திரனின் கொலை முயற்சியில் ஈடுபட்ட குழுவுடன் சேர்ந்து செயற்பட்டவருக்கு எவ்வாறு அந்தத் தொடர்பு கிடைத்தது என்பது குறித்து பலத்த சந்தேகமே நிலவுகின்றது. முன்னாள் போராளிகளைப் பொறுத்தவகையில் இராணுவத்தினரைத் தெரிந்தே இருக்கும். ஏனெனில் அவர்கள் புனர்வாழ்வின் பின்னர் இராணுவத்தினரின் விசாரணைக்கென அவர்களிடம் சென்று வந்தார்கள்.

இதேநேரம் குறித்த கொலை முயற்சி வடக்கு - கிழக்கில் இடம்பெற்றபோதிலும், நாடு கடந்து பணிபுரிபவர்களுக்கே அது பற்றிய தகவல் முதலில் கிட்டி இருக்கிறது. இது பல கேள்விகளை எழுப்புகின்றது.

இடம்பெற்ற சம்பவங்களின் அடிப்படையில் தமது முயற்சி மூலம் ஏதோ ஓர் இலக்கை அடைய எண்ணிய குறித்த அணியும் மாட்டிவிடப்பட்டது. அவர்கள் பயன்படுத்திய பொருள்கள், பாவனையில் இருந்த கைத் தொலைபேசிகள் என்பவை தடயப் பொருள்களாகப் பாரப்படுத்தப்பட்டன.

தற்போது கைது செய்யப்பட்டுள்ள 5 பேரின் தொலைபேசி இலக்கங்களுக்கு எங்கிருந்து அழைப்பு வந்தன என்பதைப் பரீட்சிப்பதோடு மட்டுமல்லாது, இந்த ஐந்து பேருக்கும் தகவல் வழங்கியதாகக் கூறப்படும் அந்த ஒருவருடன் தொடர்பைப் பேணிய இலக்கங்களில் உள்ள ஏனைய இலங்கையர்களது இலக்கங்களை அறிவதிலேயே இந்த விடயத்தின் உண்மை அடங்கியுள்ளது. அவை இலங்கை இராணுவத்தின் கீழ் இயங்கும் புலனாய்வின் உயர் அதிகாரிகளினதே எனத் தற்போது அறியப்படுவதால், இந்த விடயத்தின் நோக்கம் ஒரு தமிழனை அழிப்பதல்ல என்பது மட்டும் புரிகிறது.

# தமிழ்நாட்டின் தலைவிதி சசிகலாவின் கைகளிலா?

சேரலாதன்

தமிழ் நாட்டின் தலைவிதியைச் சிறைக்குள் அடைக்கப்பட்டிருக்கும் ஒரு குற்றவாளி தீர்மானித்துக் கொண்டிருக்கின்றார். சசிகலா என்ற அந்தப் பெண்மணி, மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் நெருங்கியதோழியென ஒரு காலத்தில் அறியப்பட்டவர். அ.தி.மு.கவில் எந்தவொரு பதவியையும் வகிக்காத அவர், அவ்வப்போது தமது அதிகாரத்தை அதிகாரிகளிடம் வெளிப்படுத்தி வந்திருக்கின்றார். ஜெயலலிதா உயிருடன் இருக்கும் வரையில், அ.தி.மு.கவைப் பொறுத்தவரையில் அவரே எல்லாமாக இருந்திருக்கிறார். அமைச்சர் முதல், தொண்டர்கள் வரை ஜெயலலிதாவின் கால்களில் வீழ்ந்து வணங்குவதில் ஆத்ம திருப்தியைக் கொண்டிருந்தனர். ஆண்களைத் தனது காலடியில் விழ வைப்பதில் ஜெயலலிதாவுக்கு ஒரு குரூர திருப்தி மேலோங்கிக் காணப்பட்டது.

தமது கால்களில் விழுகின்ற எவரையும் அவர் தடுத்து நிறுத்தியதில்லை. ஜெயலலிதாவின் முன்பாகக் கூனிக்குறுகி நின்றவர்களைக் காணும் போதெல்லாம் வேடிக்கையாக மட்டுமன்றி, பரிதாபமாகவும் இருந்தது. சொத்துக் குவிப்பு வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பின்னரும், ஜெயலலிதாவுக்கு அ.தி.மு.கவினர் மத்தியில் இருந்த மதிப்புக் குறையவில்லை. அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது, பலர் தீக்குளித்துத் தமது உயிரை மாய்த்துக் கொண்டனர். பலர் ஜெய லலிதா சார்பாகப் பல்வேறு நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொண்டனர். ஊண் உறக்கத்தைத் துறந்தவர்கள் பலர். ஜெயலலிதா அடைக்கப்பட்டிருந்த சிறை வாசலில் தினமும் தவம் கிடந்தவர்களின் எண்ணிக்கை ஏராளம். இன்று சசிகலாவும் ஜெயலலிதா அடைத்து வைக்கப்பட்டிருந்த அதே சிறைச்சாலையின் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கிறார்.



### அரசியல் காய் நகர்த்தல்களால் பரபரப்பை ஏற்படுத்திய சசிகலா

சிறைக்குச் செல்வதற்குச் சில தினங்களுக்கு முன்னர் அவர் ஆடிய ஆட்டம் கொஞ்ச நஞ்சமல்ல. அ.தி.மு.கவின் அதி முக்கிய பதவியான பொதுச்செயலாளர் பதவியில் முதலில் அமர்ந்து கொண்டார். முதலமைச்சர் பதவியில் அமருகின்ற நோக்கத்துடன் அ.தி.மு.கவின் சட்டமன்றத் தலைவரானார். தம்மை முதலமைச்சராக நியமிக்குமாறு ஆளுநரிடம் கேட்டுக் கொண்டார். ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் முதல்வரான ஓ.பன்னீர்செல்வம் சசிகலாவால் ஓரம் கட்டப்பட்டார். சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பு வெளியாவதற்குச் சில தினங்களே இருந்த நிலையிலும், சசிகலா தனது அதிகாரத்தை நிலை நிறுத்துவதில் தீவிரமாக இருந்தார். அ.தி.மு.க.சட்ட மன்ற உறுப்பினர்கள் கூண்டோடு அழைத்துச் செல்லப்பட்டு, சொகுசு விடுதியொன்றில் அடைத்து வைக்கப்பட்டனர். இவர்கள் வெளியிலும் செல்லமுடியாது, வெளியிலிருந்து எவரும் அங்கு சென்று இவர்களைச் சந்திக்க முடியாது என்ற வகையில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தன. சசிகலா அடிக்கடி அங்கு சென்று அவர்களுக்கு மூளைச் சலவை செய்து வந்தார். மிரட்டும் தொனியில் அவர்களிடம் நடடந்து கொண்டார். வழக்கின் தீர்ப்பு வெளியானது. சசிகலா சிறைக்கைதியானார். ஆனாலும் அவரது நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படவில்லை. ஓ.பன்னீர்செல்வத்தையும் அவரைச் சார்ந்தவர்களையும் கட்சியிலிருந்து நீக்கினார். தனது தீவிர ஆதரவாளரான எடப்பாடி பழனிச்சாமியை முதலமைச்சர் பதவியில் அமர்த்தும் திட்டத்துடன் காய்களை நகர்த்தினார். அ.தி.மு.க.சட்ட மன்ற உறுப்பினர்களின் ஆதரவுக் கடிதத்துடன் ஆளுநரைச் சந்தித்த எடப்பாடி பழனிச்சாமி, தம்மை முதலமைச்சராக நியமிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆளுநரின் உத்தரவின் பிரகாரம் சட்ட சபை கூடியதும், அங்கு குழப்பங்கள் ஏற்பட்டதும், நம்பிக்கை வாக்கெடுப்பில் எடப்பாடி பழனிச்சாமி வெற்றிபெற்று முதலமைச்சரின் கதிரையில் அமர்ந்ததும் தெரிந்த விடயங்கள்தான். ஆனால் ஒரு குற்றவாளியென உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள சசிகலா என்ற சாதாரணப் பெண்மணி, தமிழ் நாட்டின் தலைவிதியைத் தற்போது தீர்மானித்துக் கொண்டிருப்பது எந்த வகையில் நியாயம் என்பதுதான் புரியவில்லை.

### அம்மாவென்ற ஜெயலலிதாவைத் தொடர்ந்து சின்னம்மா ஆன சசிகலா

ஜெயலலிதாவின் பெயரை உச்சரிப்பதற்குக்கூட அஞ்சி சட்டமன்ற அமைச்சர்கள், உறுப்பினர்கள் உட்பட அ.தி.மு.கவினர் அம்மாவென முன்பு அழைத்தார்கள். இன்று சசிகலா சின்னம்மா ஆகிவிட்டார். சசிகலாவுக்குச் சார்பான தொலைக்காட்சியில்கூட அவரது பெயருக்குப் பதிலாகச் சின்னம்மா என்றே குறிப்பிடப்படுகின்றது. அந்த அளவுக்குச் சசிகலாவின் செல்வாக்கு உச்சத்தைத் தொட்டு நிற்கின்றது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சிறைக்குச் சென்றபோதிலும், அவர்கள் தியாகிகளாகவே இன்றும் மதிக்கப்படுகின்றனர். ஆனால் மோசடியான முறையில் சொத்துக் குவித்த வழக்கில் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவரைப் போற்றி வணங்குவதும், அவரது ஆணைக்குக் காத்திருப்பதும் எந்த வகையிலும் நியாயமானதல்ல. அறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர் ஆகியோரின் நேர்மையான ஆட்சியின் கீழ் மதிப்புடன் விளங்கிய தமிழ் நாட்டின் இன்றைய பரிதாபகரமான அரசியல் நிலையைப் பார்க்கும்போது பாரதியின் "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால் நெஞ்சு பொறுக்குதில்லையே...." என்ற பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றது. பதவியும் பணமும் கிடைத்தால்போதும் என்பதற்காகத் தராதரம் பார்க்காது எவரது காலிலும் வீழ்ந்து விடலாம் என்ற அவல நிலை தமிழ் நாட்டில் நீடிப்பது ஒட்டுமொத்தத் தமிழினத்துக்கே தலைக்குனிவை ஏற்படுத்திவிடும்.

குற்றவாளிகளுக்கு அரசியலில் இடமேயில்லை. அரசியல் என்பது ஆரம்ப கால கட்டத்தில் மிகப்புனிதமாகவே காணப்பட்டது. பின்னர் ஊழல் வாதிகளும் மோசடியாளர்களும் அரசியலுக்குள் புகுந்து அதைத் சாக்கடையாக்கி விட்டார்கள். சசிகலா போன்றவர்களின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு தொடர்ந்து நடைபோடுமாயின், அதைவிட வெட்கக்கேடான காரியம் எதுவுமே இருக்க முடியாது.



## வாசகர் திருமுகம்

### உண்மைகள் உறங்குவதில்லை

அநியாயத்துக்கு ஆயிரம் சட்டத்தரணிகள் தேவைப்படலாம். ஆனால் நியாயத்துக்கு கடவுளின் கருணை ஒன்றே போதும் . இந்த உண்மையை 25.02.2017 அன்று உதயன் பத்திரிகையின் 19ஆம் பக்கத்தில் வெளியாகிய 'கஜேந்திரகுமாரின் கனவு நிறைவேறுமா?' என்ற தலைப்பிலான கட்டுரை மக்களுக்கு வெளிச்சமாக்கியுள்ளது. இது காலத்தின் தேவை. இதனை ஆக்கியோன் தி.ராஜ்ஜுக்கும், உதயன் பத்திரிகை நிர்வாகத்துக்கும் தமிழ் கூறும் நல்லுலகம் சார்பில் பாராட்டுக்களும் மனம் நிறைந்த நன்றிகளும் எந்நாளும் உரித்தாகுக. பிறரை மாற்றிக் கொள்ள புத்தி சொல்லுகின்றனர். ஆனால் தங்களை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை. குளத்தைக் கலக்கி பருந்துக்கு இரையாக்குகின்ற படலம் தமிழ் மக்கள் வாழ்விலும் வரலாற்றிலும் இன்னமும் தொடர வேண்டுமா? தமிழ்மக்கள் பட்ட துன்பங்களும் துயரங்களும்போதும் . இனியாவது சிந்தித்துச் செயற்படுவோம். நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிருப்போம் . இதுதான் தமிழ் மக்களின் இன்றைய தேவையும் வேண்டுகையுமாகும். கேட்கச் செவியுள்ளவன் கேட்கக் கடவான். ஒற்றுமையே எமது பலம்.

*பிலிப் அருளானந்தம்*
*யாழ்ப்பாணம்*

### குடாநாட்டுப் பொலிஸார் பொறுப்புணர்வுடன் செயற்படுவார்களா?

குடாநாட்டில் எதுவித அச்சமுமின்றி வாள்களுடன் வீதிகளில் அடாவடித்தனம் புரியவர்களைத் தப்பவிடாது கைது செய்து நீதியின் முன் நிறுத்துவது பொலிஸாரின் தலையாய கடமையாகும். குற்றவாளிகளைச் சுதந்திரமாக உலவுவதற்கு அனுமதிப்பது குற்றச் செயல்கள் பெருகுவதற்குக் காரணமாக அமைந்துவிடும். அண்மைய நாள்களாகக் குடாநாட்டில் வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசம் எல்லைமீறிச் சென்று கொண்டிருக்கின்றது. ஆனால் இந்தக் குழுக்களைச் சேர்ந்த எவருமே கைது செய்யப்பட்டதாகத் தகவலில்லை. அவ்வாறாயின் குற்றச் செயல்கள் எவ்வாறு குறையும்? பொலிஸார் அதிக விழிப்புடன் செயற்படும்போது தான குற்றவாளிகளைக் கைது செய்ய முடியும். குற்றச் செயல்களும் குறைவடையும். பொது மக்களின் பாதுகாப்புப் பொலிஸாரின் கைகளிலேயே தங்கியுள்ளது. பொலிஸார் பொறுப்பு ணர்வுடன் செயற்பட்டுப் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டும்.

*அ. செல்லத்துரை,*
*வண்ணார்பண்ணை.*

# சுடோக்கு
## எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 5 | 3 | | | 7 | 6 | 9 |
| | | 3 | | 7 | | | 8 | |
| 6 | 7 | | | 8 | | | 1 | |
| 7 | | | | 3 | | | | |
| | 1 | | | | 4 | | 7 | 6 |
| | | | | | | 2 | | |
| | | 1 | 5 | | | | | |
| 5 | | 9 | | | | 1 | | |
| | | 7 | 2 | 1 | 3 | | 9 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 6 | 4 | 7 | 9 | 1 | 8 | 3 |
| 7 | 3 | 9 | 2 | 1 | 8 | 6 | 4 | 5 |
| 1 | 4 | 8 | 6 | 5 | 3 | 9 | 7 | 2 |
| 4 | 1 | 7 | 8 | 6 | 2 | 3 | 5 | 9 |
| 9 | 2 | 5 | 7 | 3 | 4 | 8 | 1 | 6 |
| 6 | 8 | 3 | 1 | 9 | 5 | 4 | 2 | 7 |
| 8 | 7 | 4 | 9 | 2 | 6 | 5 | 3 | 1 |
| 5 | 9 | 1 | 3 | 8 | 7 | 2 | 6 | 4 |
| 3 | 6 | 2 | 5 | 4 | 1 | 7 | 9 | 8 |

சுடோக்கு
ஒரு எண் விளை யாட்டு.
தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.
சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 2017 ஒஸ்கார் விருதுகள்





அமெரிக்க திரையுலகினருக்கு வழங்கப்படும் உயரிய விருதாகக் கருதப்படும் ஒஸ்கார் விருதுகள் வழங்கும் நிகழ்வு அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கோலாகலமாக நடைபெற்றது. 24 பிரிவுகளில் ஒஸ்கார் விருதுகள் வழங்கப்பட்டன. இதில் லா லா லேண்ட் திரைப்படம் 14 விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டது. சிறந்த நடிகை, இயக்கம், தயாரிப்பு வடிவமைப்பு, இசை, பாடல் மற்றும் ஒளிப்பதிவு என 6 பிரிவுகளில் விருது வென்றது.

சிறந்த துணை நடிகர் : மஹேர்சலா அலி (மூன் லைட்)
சிறந்த ஆடை வடிவமைப்பாளர் - கொலின் அட்வுட் (பென்டாஸ்டிக் பீஸ்ட் அண்ட் வேர் டூ பைண்ட் தம்)
சிறந்த ஆவணப்படம் : ஓ.ஜே. மேட் இன் அமெரிக்கா
சிறந்த ஒலி வடிவமைப்பு : அரைவல்
சிறந்த ஒலி மிக்ஸிங் - கெவின் ஓ கனெல், ஆண்டி ரைட், ராபர்ட் மெக்கென்சி, பீட்டர் க்ரேஸ்(படம்- ஹாக்ஸா ரிட்ஜ்)
சிறந்த துணை நடிகை : வயோலா டேவிஸ் (படம் - பென்சஸ்)
கௌரவ ஒஸ்கார் விருது : ஜாக்கிசான் (1960ஆம் ஆண்டு முதல் கலைத்துறையில் பணியாற்றி வருவதற்காக)
சிறந்த வெளிநாட்டு மொழிப் படம் : தி சேல்ஸ்மேன் (ஈரான் நாட்டு படம்)
சிறந்த அனிமேசன் குறும்படம் : பைபர்
சிறந்த அனிமேன் படம் : ஜூட்டோபியா
சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு : லா லா லேண்ட்
சிறந்த விஷ்வல் எபெக்ட்ஸ் : தி ஜங்கிள்புக்
சிறந்த பட வடிவமைப்பு : ஹாக்ஸா ரிட்ஜ்
சிறந்த ஆவணக் குறும்படம் : தி ஒயிட் ஹெல்மெட்ஸ்
சிறந்த லைவ் அக்ஷன் குறும்படம் : சிங்
சிறந்த ஒளிப்பதிவு : லினஸ் சாண்ட்கிரின் (லா லா லேண்ட்)
சிறந்த இசை : ஜஸ்டின் ஹர்விட்ஸ், (லா லா லேண்ட்)
சிறந்த பாடல் : சிட்டி ஆப் ஸ்டார்.. என்ற பாடல் (லா லா லேண்ட்)
சிறந்த திரைக்கதை : மான்செஸ்டர் பை தி சீ - கென்னத் லோனர்கேன்
சிறந்த திரைக்கதை தழுவல் : மூன் லைட் - பேரி ஜேக்கின்ஸ் மற்றும் டேரல் அல்வின் மெகர்னே
சிறந்த இயக்குநர் : டேமியன் சால்ஸே (லா லா லேண்ட்)
சிறந்த நடிகர் : கேஸி ஆப்லெக் (மான்செஸ்டர் பை தி சி)
சிறந்த நடிகை : எமா ஸ்டோன் (லா லா லேண்ட்)
சிறந்த படம் : மூன் லைட்

பக்தா! ஏன் உன் மனைவியைத் தூக்கி வீட்டுக்கு வெளியே எறிந்தாய்?




சுவாமி! நீங்கள் தானே சொன்னீர்கள் கவலையைத் தூக்கி எறி வாழ்க்கையில் முன்னேறலாம் என்று...

டேய் நம்ம கணக்கு வாத்தியாருக்கு அறிவே இல்லையடா? எதை வைச்சு சொல்லுறாய்?



அவரோட நாலாவது பொண்ணுக்கு "அஞ்சு" என்று பேரு வச்சிருக்கிறாரே...

ஏன் மணி - அம்மா செத்த அதிர்ச்சியில செத்தவங்க 70 பேர் தானா... இப்ப எப்படி 470 பேர் என்று சொல்றீங்களே?



மணி - இந்த 400 பேரும் சின்னம்மா வந்த அதிர்ச்சியில செத்தாங்க...

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** எதிர்கால நலன் குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் இருப்பர்.



**இடபம்:** நல்லவர்களை தவறாகக் கருதும் சூழல் ஏற்படலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவை. லாபம் சுமாராக இருக்கும். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.



**மிதுனம்:** சுயநல நோக்குடன் சிலர் உங்களை அணுகுவர். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைச் சந்திப்பர்.



**கடகம்:** பேச்சில் சாமர்த்தியம் வெளிப்படும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பணக்கடனில் ஒரு பகுதி அடைபடும்.



**சிங்கம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்களுக்கு வீட்டுத் தேவை குறைவின்றி நிறைவேறும்.



**கன்னி:** குடும்பப் பிரச்சினையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைத் திறம்பட சமாளிப்பர். உடல் நலத்துக்கு சிகிச்சை தேவைப்படலாம்.



**துலாம்:** எதிலும் முன்யோசனையுடன் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைப்பதில் தாமதம் உண்டாகும்.



**விருச்சிகம்:** சோதனையை முறியடித்து சாதனை படைப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு.



**தனுசு:** நிதானத்துடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெண்கள், உறவினருடன் கருத்துவேறுபாடு கொள்வர்.



**மகரம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். தொழிலில் லாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் சலுகைப் பெற்று மகிழ்வர். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.



**கும்பம்:** பொறுமையுடன் இருப்பது அவசியம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்களுக்கு சக ஊழியருடன் கருத்து வேறுபாடு ஏற்படும். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.



**மீனம்:** எதிர்பார்ப்பு எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். உறவினர் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1700 -சுவீடனில் இன்றைய தினம் மார்ச் முதலாம் திகதியாகப் பின்பற்றப்பட்டது. அதற்கமைய சுவீடன் நாள்காட்டி உருவாக்கப்பட்டது.

1784 -ஜோன் வெஸ்லியால் மெதடிஸ்ட் சேர்ச் சட்ட பூர்வமாக்கப்பட்டது.

1885 -அமெரிக்க தொலைபேசி மற்றும் தந்திக் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது.

1935 -டூபொன்ற் விஞ்ஞானி வல்லஸ் கரதேர்சால் , நைலோன் உருவாக்கப்பட்டது.

1940 -கூடைப் பந்தாட்டம் முதன் முதலாக தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

1947-தைவானில் 30,000 குடிமக்கள் உயிரிழப் புடன் குடியியல் குழப்பம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

1957 -பொதுமக்கள் பாவனைக்கு வர்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் விற்பனைக்கு இடப்பட்டது.

1991 - முதலாவது வளைகுடாப் போர் முடிவுக்கு வந்தது.

1992 -காய்கறிகள் அமோக விளைச்சல்; ஆனால் சீரான சந்தை வாய்ப்பு இல்லை, நெருக்கடிகளைச் சவாலாக எடுத்தும் உரிய பயனில்லை.

1992 -ஐ.தே .நாடாளுமன்ற உறுப்பினர்கள் 3 பேர் வெளியேற்றம்; சட்டரீதீயானதென உயர் நீதிமன் றம் தீர்ப்பு.

1992 -விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல். வாழைச்சேனைப்பகுதியில் 20 படையினர் உயிரிழப்பு.

1992 -களுத்துறை முகாமில் 432 தமிழர்கள் காவலில்.

1992 -பாதுகாப்புக்காக இந்தியா இஸ்ரேலிடமிருந்து எதனையும் பெறத் தயார் என பிரதமர் பி.வி நர சிம்மராவ் தெரிவிப்பு.

1997 -வட ஈரான் பூகம்பத்தில் 3,000 பேர் வரை உயி ரிழந்தனர்.

1998-கொசோவா விடுதலைப்படைக்கு எதிராக கொசோ வாவில் சேர்பிய பொலிஸார் எதிர் நடவடிக்கைகளைத் தொடங்கினர்.

2002 -குஜராத்தில் மதக் கலவரத்தில் 97 பேர் உயி ரிழந்தனர்

2005 - ஈராக் அல்ஹில்லாவில் பொலிஸ் ஆட்சேர்ப்பின் போது இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில், 127 பேர் கொல்லப்பட்டனர்.

2013 -பாப்பரசர் 15ஆம் பெனடிக்ற், பாப்பரசர் பதவி யிலிருந்து இராஜினமாச் செய்தார்.

1415-ஆம் ஆண்டின் பின் இவ்வாறு இராஜினமா செய்த பாப்பரசர் இவராவார்.

2016 -இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எனது மகன் தவற விடப்பட்டார். ஆணைக் குழுமுன் சகோதரி சாட்சியம். தன்னை மீட்குமாறு கடிதம் எழுதியதாகவும் தெரிவிப்பு

2016 -செங்கை ஆழியான் தனது 75 ஆவது வயதில் காலமானார்.



## இது புதுசு

ஆண் களுக்கான ரீசேட்களில் கீழ்ப்பக்கம் ரீசேட் வகையிலும், மேற் பக்கம் சேட் துணி வகையிலும் தைக்கப் பட்ட ரீசேட்கள் தற் போது சந்தைக்கு வந்துள்ளன. இவை ஆயிரத்து 400 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப் படுகின்றன.

## நாளை

**மாசி-17**

புதன்கிழமை -01.03.2017
திதி: திருதியை பி.ப. 05.18
நட்சத்திரம்: ரேவதி பி.இ.05.20
சுபநேரம்:04.58-06.28 வரை
ராகுகாலம்:12.28-01.58 வரை



# தூய்மையான சருமத்தைப் பெற இயற்கை வழிகள்

சருமத்தை பொலிவுடனும், தூய்மையுடனும் வைத்தி ருக்க விரும்பும் பெண்கள் வீட்டில் கிடைக்கும் இயற் கைப் பொருள்களைப் பயன்படுத்திப் பயன் பெற லாம்.

அனைவருக்கும் மாசு, மறுவின்றி, பளிங்குபோல் சருமம் விருப்பமானதாகவே இருக்கும். ஆனால் உங்கள் சருமம் அப்படி எப்போதும் இருக்குமென்று சொல்ல முடியாது. உங்கள் வீட்டில் எப்போதும் இங்கே சொல்லப்பட்டிருக்கும் பொருள்களை கைவசம் வைத்தி ருங்கள். இவை உங்கள் சருமத்தை மிக மிருதுவாகவும் பளிச்சென்றும் வைத்திருக்கும்.

அவை என்னவென்று காண்போம்.


**தங்கம் போல் தோற்றம் பெற:**

வேப் பிலையை அரைத்து உடல் முழுவதும் பூசி சரி யாக 15 நிமிடம் ஊறவைத்த பிறகு நன்றாக தேய்த்துக் குளித்துப் பாருங்கள். அதன் பின் சோப் போடக் கூடாது. நீங்களே மாற்றத்தை உணர்வீர்கள். சருமத் தோல் நிறமேறும். மிக மென்மையாக மாறும். தினமும் முடியாவிட்டாலும் வாரம் 3 நாள்கள் உபயோகியுங்கள். அற்புதமான மூலிகை மருந்து இது. குறிப்பாக வெயில் காலத்தில் பயன்படுத்துங்கள்.

**வறண்ட சருமம் பெற்றவர்கள் :**

வறண்ட சருமம் பெற்றவர்கள் ரோஸ் வாட் டரில் சிறிது தேன் கலந்து முகம், கழுத்தில் தேயுங்கள். 15 நிமிடம் கழித்து கழுவினால் சருமத்தின் ஆழமாக உள்ள அழுக்கு, இறந்த செல்கள் வெளிவந்துவிடும். ஈரப்பத மும் அளிக்கும். மற்ற அழகு சாதனங்கள் போல் முகத்தில் வறட்சியை ஏற்படுத்தாது

# விரல் நுனி சொல்லும் குணாதிசயங்கள்




நம் உடலின் ஒவ்வொரு பகுதியும், நம் குணநலன் களைத் தெளிவாக விளக்கிச் சொல்லும். அதில் நாம் இதுவரை முக வடிவம், பாதம், தூங்கும் நிலை, மூக்கு போன்றவை நம் குணத்தைப் பற்றி என்ன சொல்கிறது என்று பார்த்தோம்.

ஆனால் இப்போது விரல் நுனியின் வடிவம், உங் களின் குணத்தைப் பற்றி என்ன சொல்கிறது என்பது குறித்துப் பார்க்கப் போகிறோம். சரி, இப்போது நீங்கள் இவற்றில் எந்த ரகம் என்று சொல்லுங்கள். உங்களின் குணம் என்னவாக இருக்கும் என்று சொல்கிறோம்.


**முதல் ரகம்**

இந்த மாதிரியான விரல்நுனியைக் கொண்டவர்கள், தங்களது உணர்வுகளை மறைப்பார்கள் மற்றும் மன தைரியம் உள்ளவர்கள் போன்று நடிப்பார்கள். ஆனால் உண்மையில் இவர்கள் மிகவும் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள். மேலும் நீங்கள் மற்றவர்கள் முன் பொய் கள், பாசாங்குத்தனம், ஏமாற்றுத்தனம் போன்றவற்றை வெறுப்பது போல் செயற்படுவீர்கள்.

இந்த ரகத்தினர் பார்ப்பதற்கு என்ன தான் திமிர் பிடித்த வர்கள் போன்று இருந்தாலும், உண்மையில் பெரிய மனம் படைத்தவர்கள் மற்றும் மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை கொண்டவர்களாக இருப்பர். கொடுக்கும் வேலையைக் கச்சிதமாக முடித்துவிட்டுத் தான் மறு வேலையைப் பார்ப்பார்கள்.

**இரண்டாம் ரகம்**

இந்த மாதிரியான கைவிரல் நுனியைக் கொண்டவர்கள், எவருடனும் அவ்வளவு எளிதில் பழகமாட்டார்கள் மற்றும் எவருடனும் தானாக சென்று பேசமாட்டார்கள். மிகவும் விசுவாசமுள்ளவர்களாக இருப்பர். ஒருவர் மீது அன்பு வைத்துவிட்டால், அவர்கள் மீது முழு கவனத்தையும் செலுத்துவதோடு, எந்நேரமும் அவர்களைப் பற்றிய சிந்தனையிலேயே இருப்பார்கள்.



உண்மையில் மிகவும் சென்சிடிவ்வானவர்கள். ஆனால் பார்ப்பதற்கு அப்படி தெரியமாட்டார்கள். ஒருவரது உணர்வுகளை மதித்து ஏதாவது செய்ய நினைத்து விட்டால், தன்னால் முடிந்த அளவு அனைத்தையும் செய்வார்கள். மற்றவர்கள் மனதை புண்படுத்திவிடு வோமோ என்ற அச்சத்துடன், நல்லவர்களாக நடந்து கொள்ள முனைவார்கள். பார்ப்பதற்கு தைரியசாலி போன்றும், சுதந்திரமாக செயற்பட விரும்புவது போன்று பேசுவார்கள். இருந்தாலும், மற்றவர்களின் பேச்சால் எளிதில் புண்படக்கூடியவர்கள்.

**மூன்றாம் ரகம்**

இந்த வகையினர் தங்களை எரிச்சலூட்டும் எந்த ஒரு செயலையும் அல்லது நபரைப் பற்றியும் கண்டுகொள் ளமாட்டார்கள். ஆனால் மற்றவர்களிடம் நல்ல மதிப்புட னும், மரியாதையுடனும் நடந்து கொள்வார்கள். மற் றவர்களுடன் வாதாடும் போது, மிகவும் ஈகோ பிடித்த வர்கள் போன்று பேசினாலும், முதலில் இவர்கள் தான் மன்னிப்பு கேட்பார்கள். தொடர்ச்சி தன்னுடைய உணர்வு களையும், தனக்குள்ள பிரச்சினைகளையும் மற்ற வர்களிடம் அவ்வளவு எளிதில் வெளிக்காட்டமாட்டார்கள். பூப்போன்று மென்மையான மனம் படைத் தவர்களாக வும், எளிதில் மனம் புண்படக்கூடியவராகவும் இருப்பர். அதே சமயம் மற்றவர்கள் தன்னிடம் வந்து மன்னிப்பு கோரினால், உடனே அவர்களை மன்னித்துவிடுவார்கள்.

## 'யாழ். பாரதி வெளியீட்டின்' பாராட்டு வாழ்த்துக்கள்





**திரு. சிவலிங்கம் சிவதாசன்**
Justice of Peace (All Island)
NDT (Pri),B.A(Hons),
PGDE,M.Ed, SLTS 2-I
யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

**திரு. மகாதேவன் முகுந்தன்**
NDT(Science), B.A(Tamil),
B.Ed(Science), M.Ed, SLPS III
அதிபர் – யா/சங்கானை ஸ்தான சி.த.க. பாடசாலை

**திரு. நாகலிங்கம் சதீஸ்கரன்**
NDT(Science),B.Ed (Merrit),
M.Ed(Merrit, SLTS 2-I
யா/சைவத்தா இந்துக் கல்லூரி

அண்மையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் யாழ்பாரதி வெளியீட்டின் ஆசிரியர்களான

- கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பட்டம்பெற்ற திரு. சி.சிவதாசன், திரு.ம.முகுந்தன் ஆகியோரையும்
- யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற திரு.நா.சதீஸ்கரன் அவர்களையும்

**உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

முகாமையாளர்
யாழ் பாரதி வெளியீட்டகம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18.03.1956
மறைவு 28.02.2016



திருமதி ஜனககுமாரி
**குணரத்தினம்**
(முன்னாள் சங்கீத ஆசிரியை)

எங்கள் இனிய தெய்வமே நீங்கள் எமைவிட்டு பிரிந்து
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறாது எம் துயரம்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில் என்றும் நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஜனகமஹால்,
நெல்லியடி வடக்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.

## நீங்கா நினைவில் 31 ஆம் நாள்



மலர்வு
11.10.1931

உதிர்வு
28.01.2017

## திருமதி மேரி செசிலியா இராயப்பு

பத்துத் திங்கள் கருவினில் சுமந்து
பகலிரவாய் மனதினில் நினைந்து
பக்குவமாய் பாரினில் வாழ்ந்து
பரமனடி சென்றிட்ட எம்மாயே
உள்ளத்தில் என்றும் அன்பையே
உச்சமாய் தந்திட்ட அன்னையே
உன்பாசம் உரைத்திட வார்த்தையில்லை
உலகினில் எமக்கினி தாயில்லை.

என்றும் தாயின் நினைவில் துயருறும்

சில்லாலை.

பிள்ளைகள்

### கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

1 மாத, 3 மாத, ஊர்க்கோழிக் குஞ்சுகள் ஒரு நாள் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:– 077 245 3673

### பெண் பணியாளர் தேவை

மிக்சர் தொழிற்சாலைக்கு பெண் பணியாளர் உடன்தேவை.
சம்பளம் நாள் ஒன்றிற்கு 500/=
தொடர்பு - 077 130 9215
077 469 2649

### வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன **Tilko Jaffna City Hotel** இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

* பராமரிப்பு உதவியாளர்கள். அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
தொடர்பு - 077 330 6985, 077 981 7617

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 08 1938



மறைவு 24 02 2016

அமரர்
**சிவசுப்பிரமணியம் மங்களேஸ்வரி**

பத்து மாதம் அவள் வயிற்றில் பத்திரமாய் எனைச்சுமந்து
உலகிற்கு உவந்தளித்த உயர் தெய்வம் அன்னை தானே .
உதிரத்தை பாலாக்கி உணவாக எனக்களித்த
கண்முன்னே உலாவிவரும் கடவுள் தானே என் அன்னை
துன்பங்கள் அவளை வந்து துளைத்தெடுத்த போதெல்லாம்
துவளாமல் எனை வளர்த்த என் அன்னை தெய்வம் தானே.
ஓம் சாந்தி.

மாவடி வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்
திருமதி உமா காங்கேசர்
(மகள்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் நடத்தப்பெற்ற அறநெறி மாணவர்களுக்கான தேசிய விருதுகள் வழங்கும் நிகழ்வில் யா/கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம் மற்றும் கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவியான

**செல்வி கி. சுதர்மிகா**

கட்டுரைப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations
வாழ்த்துவோர்:
Congratulations

சாவகச்சேரி, கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தினர்.

## தமிழ் பல்கலைக்கழகம்
## தஞ்சாவூர்

**தமிழ் இணையக்கல்விக் கழகத்தினூடாக தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் B.A தமிழ் சிறப்புப் பட்டதாரியாகும் வாய்ப்பு**

- 2017 கல்வியாண்டுக்கான விரிவுரைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.
- க.பொ.த உயர்தரத்தில் எத்துறையாயினும் 03 பாடங்கள் சித்தி.
- தொழில் புரிபவர்கள் பதவி உயர்வுக்காக இப்பட்டத்தை மேற்கொள்ளலாம்.
- உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டது.

இப்பட்டம் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் (University Grant Commission) அங்கீகரிக்கப்பட்டது.

(பதிவுசெய்யும் இறுதித்திகதி : 20.03.2017 வரை நீடிக்கப்பட்டுள்ளது.)

தமிழ் இணைய கல்விக் கழகம் பாரதி இன்ஸ்ரிரியூட்
காளிகோயில் வீதி, மீசாலை மேற்கு, மீசாலை, சாவகச்சேரி.
தொ.பே. 077 805 1173, 076 382 2578


தமது... (தொடர்ச்சி)

கிராமத்தில் வழங்கப்பட்ட காணி அல்லது பிலக் குடியிருப்பு வான்படையினர் வைத்துள்ள காணி இரண்டில் எது தேவை என்பதைப் பிலக் குடியிருப்பு மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கூட்டமைப்பினருக்கு நேற்றுத் தெரிவித்துள்ளமை தொடர்பில் பிலக்குடியிருப்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களிடம் கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர். 2012 ஆம் ஆண்டு கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் எம்மைக் குடியேற்றும்போது, பிலக் குடியிருப்பில் பிடித்து வைக்கப்பட்டுள்ள காணி விடுவிக்கப்படும் போது இந்தக் காணியையும் (மாதிரிக் கிராமக் காணி) நீங்கள் வைத்துக் கொள்ளலாம் என்று வாக்குறுதி வழங்கியிருந்தனர். தற்போது இரண்டில் எது தேவை என்று வாக்குறுதிக்கு மாறாகக் கேட்கக் கூடாது.

மேலும் கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் தங்கியிருந்த மக்களில், சீனியாமோட்டையிலும், திம்பிலியிலும் மக்கள் சொந்தக் காணிகளில் குடியமர்த்தப்படும்போது அவர்களிடம் கேப்பாபிலவு மாதிரிக் கிராம காணியை மீளத்தருமாறு கேட்கவில்லையே. எம்மிடம் மாத்திரம் ஏன் கேட்கின்றனர்.

கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் வழங்கப்பட்ட காணியில் நாம் அபிவிருத்தி செய்து விட்டோம். அந்தக் காணியை அரசுக்கு மீள வழங்குவதாக இருந்தால் 25 லட்சம் ரூபா நட்டஈடு தரப்பட வேண்டும். இல்லாவிட்டின் எங்கள் போராட்டம் தொடரும் என்றனர். (த-57)

# வீடுகளில் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள்

பெருநகரங்களில் இருக்கும் தனி வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் உள்ளிட்ட பகுதிகளில் சொந்த வீட்டில் அல்லது வாடகை வீட்டில் வசிப்பவர்கள் கவனம் செலுத்த வேண்டிய பல முக்கியமான விடயங்கள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமாக இருப்பது வீடுகளில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகும். கதவுகள், சுற்றுமதில் கேற்றுகள், பல்வேறு லொக்கர்கள் மற்றும் கண்காணிப்பு கமராக்கள் போன்றவை நேரடியாக வீடுகளின் பாதுகாப்பில் பங்காற்றுகின்றன.


இன்றைய நகர்ப்புற வாழ்க்கையில், வீடுகள் அல்லது குடியிருப்புப் பகுதிகளில் அத்துமீறி நுழையும் வெளியாள்கள் அல்லது அடையாளம் தெரியாத நபர்களால் வீடுகளில் இருக்கும் பொருள்கள் களவாடப்படும் நிகழ்வுகள் பல இடங்களில் எதிர்பாராமல் நடந்து விடுகின்றன. பல்வேறு பாதுகாப்பு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டிருந்தாலும், அவ்வப்போது பொருள்கள் காணாமல் போய் விடுகின்றன. வீடுகள் உள்ளிட்ட அடுக்குமாடி குடியிருப்புகளில் தனிப்பட்ட முறையில் கடைப்பிடிக்கவேண்டிய சில பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி பார்க்கலாம்.

1. ஓர் இடத்திலிருந்து வேறோர் இடத்துக்குக் குடியேறுபவர்கள் முதலில் செய்யவேண்டியது புதிய வகையிலான நவீன பூட்டுக்கள் மற்றும் ஜன்னல் களுக்கான நவீன பாதுகாப்பு அமைப்புகள் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். பழைமையான பூட்டும் முறையைக் கொண்ட கதவு கள், பழைய பூட்டுக்கள் ஆகியவற்றால் முழுமையான பாதுகாப்பு கிடைக்க வாய்ப்பு இருக்காது.
2. வெளியில் அல்லது வெளியூர்களுக்கு செல்லும் தருணங்களில் எல்லாக் கதவுகளும், ஜன்னல்களும் கச்சிதமாகப் பூட்டப்பட்டுள்ளன என்பதை ஒன்றுக்கு இரண்டு முறை சோதனை செய்து கொள்வது நல்லது. பக்கத்து வீட்டுக்காரர்களோடு சுமுகமான உறவுமுறைகள் இருப்பதும் இன்னொரு வகையில் பாதுகாப்பாக இருக்கும்.
3. புது வீடு கட்டும்போதும் அல்லது பழைய வீடுகளுக்கு குடியேறும்போதும் அவற்றிலுள்ள கதவு மற்றும் ஜன்னல்கள் உறுதி எவ்வாறு இருக்கிறது? என்பதை கண்டிப்பாக கவனிக்கவேண்டும். கதவுகளின் கூடுதல் பாதுகாப் புக்காக இரும்பினால் செய்யப்பட்ட பக்கவாட்டு கதவுகள், ஜன்னல்களுக் கான கிரில் தடுப்புகள் அமைப்பது பற்றி தக்க ஆலோசனைகள் பெற்று அமைத்துக் கொள்ளலாம்.
4. ஒரு சில அடுக்குமாடிக் குடியிருப்புகளில் பிரதான கதவு பூட்டுக்கான இணைச் சாவியை கதவுக்கு மேலாகவோ, அருகிலோ மறைவாக வைத்திருப்பது பலரது வழக்கமாக உள்ளது. கையில் இருக்கும் சாவி தொலைந்து விடும் பட்சத்தில் அதை பயன்படுத்தலாம் என்பது அவர்களது முடிவு. மேலும் கதவுக்கு அருகில் உள்ள ஆளிப் பெட்டி, கதவு நிலைக்கு பக்கத்தில், கதவுக்கு அருகில் உள்ள பூச்சாடி ஆகியவற்றிலும் மாற்று சாவி அல்லது வீட்டு சாவியை வைத்து விட்டு செல்வது கூடாது.
5. பின் கதவுகள், ஆள் நுழையும் அளவு பெரிதாக உள்ள வீட்டு ஜன்னல் அல்லது பாத்ரூம் ஜன்னல்கள் ஆகியவற்றின் மூலமாக வெளியாள்கள் வீடுகளுக்குள் நுழைந்து பொருள்களை எடுத்து சென்று விடுகிறார்கள். அதனால் அவற்றில்தான் முதலில் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.
6. பொதுவாக வீடுகளுக்கு மிக அருகில் ஆள்கள் மறைந்து கொள்ளும் அளவுக்கு உள்ள இடங்கள் இருந்தால் அவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
இருட்டாக அல்லது இடிந்த கட்டட அமைப்புகள் இருந்தால் அவற்றை அடிக்கடி கவனிப்பது அவசியம். வீடுகளின் நுழைவாயிலுக்கு அருகில் வெளியே ஒரு ஆள் மறைந்து கொள்ளும் வகையிலான பூந்தொட்டிகள் அல்லது கட்டட வடிவமைப்புகள் இருப்பதும் தவறான அமைப்புகள் ஆகும். வீட்டுக்கு பின் பக்கத் தில் உபயோகமற்ற நிலையில் ஏணி களை போட்டு வைத்திருப்பதும் கூடாது.
7. தற்கால தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக, தமது விடுமுறையில் செல்லக்கூடிய இடங்கள் அல்லது சுற்றுலா பற்றி சமூக வலைதளங்களில் முன்னதாகவே பலரும் தெரிவிக்கிறார்கள். முற்றிலும் தவறான விடயங்களில் இதுவும் ஒன்று.
மேலும் வெளியூர் செல்லும் சமயங்களில் நமது தபால் அல்லது பேப்பர்களை பக்கத்து வீட்டுக்காரர்கள் பெற்று வைத்திருக்கும்படி செய்ய முடிந்தால் நல்லது.

# கை, இடுப்பு வலியை குணமாக்கும் அர்த்தகடி சக்கராசனம்

கை, தோள் பட்டை, இடுப்பு வலியிலிருந்து விடுபட எளிய ஆசனம் உள்ளது. இந்த ஆசனத்தை தினமும் செய்து வந்தால் விரைவில் நல்ல பயனைப் பார்க்கலாம்.

பக்கவாட்டில் வளைந்த தோற்றம். 'அர்த்த என்றால் பாதி, 'கடி என்றால் இடுப்பு. 'சக்கர என்பது சக்கரம். ஆசனத்தின் உச்ச நிலையில் உடல் பக்கவாட்டில் அரைச் சக்கர வடிவத்தில் இருக்க வேண்டும்.



**செய்முறை:**

விரிப்பில் நேராக நின்று கொண்டு வலது கையை, வலது பக்கவாட்டில் மெதுவாக மூச்சை உள்ளிழுத்தபடி மேலே உயர்த் தவும். கை, காதைத் தொட்டவுடன் மெதுவாக மூச்சை வெளி விட்டபடி இடது பக்கம் சரியவும். சிறிது நேரம் சீராக மூச்சு விட்டபடி நிற்கவும்.

மெதுவாக மூச்சை உள்ளிழுத்தபடி நேராக நிமிர்ந்து வரவும். பின் மூச்சை வெளிவிட்டபடி கையைக் கீழே இறக்கவும். ஐந்து முறை செய்தல் நலம்.

இதேபோல், இடது கையைத் தூக்கி மறுபக்க மும் செய்ய வேண்டும்.

**பயன்கள் :**

இடுப்பு வலியிலிருந்து விடுபடலாம். ஆஸ்துமா போன்ற மூச்சு தொடர்பான பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம். கை, தோள் வலியிலிருந்து விடுதலை கிடைக்கும்.

**எச்சரிக்கை:**

ஆசனம் செய்யும்போது கைகளை மடக்கவோ, முட்டியை மடக்கவோ கூடாது. இதய நோய் இருப்பவர் கள் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுச் செய்ய வேண்டும்.

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 51
சீட்டிழுப்பு திகதி 2017.02.27
வெற்றி இலக்கங்கள்
01 33 49
இவ்வார இலட்சாதிபதிகள் 28
வழங்கப்பட்ட மொத்த பரிசு 5,154,460/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1344
சீட்டிழுப்பு திகதி 2017.02.27
வெற்றி இலக்கங்கள்
22 29 44 54 G
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 18,456,839/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 621
சீட்டிழுப்பு திகதி 27.02.2017
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
30 47 52 64 V
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.52,006,235/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
பச்சை நிற டிக்கட்டுக்கள் 2017.03.02 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விசாலாட்சி (குஞ்சு) இராஜதுரை



தோற்றம் 16.03.1935
மறைவு 27.02.2017

நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி இராஜதுரை நேற்று (27.02.2017) பி.ப 4.15 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகரத்தினம் தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்புச் சகோதரியும் நிமல்ராஜ் - மைதிலி, மகிந்தன் - கோஜனா, சயந்தன் - சாமினி, ஜெயந்தன் - ரமா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான நடராசா, பத்மநாதன் மற்றும் சரஸ்வதி, சுந்தரலிங்கம், சண்முகநாதன், பொன்னம்மா ஆகியோரின் மைத்துனியும் பாவனா, அஜகன், காசினி, கதிரவன், வர்ஷான், மாதுமை ஆகி யோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**88, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி கலாமணி தம்பிராசா



கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாமணி தம்பிராசா 25.02.2017 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கலாவினோதன் (M.P. அண்ணாசாமி) - சாரதாமணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னவன் (ஆவரங்கால்) தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் (ஓய்வுநிலை ஆசிரியர்) அன்பு மனைவியும், சுஜீவன், சுகுணன், சாளினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரஸ்நேவ்வின்(பிரான்ஸ்) அன்பு மாமியாரும், சாகித்யா, சகிஷா (பிரான்ஸ்), ஷயிரா ( பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கீதாமணி, ஜீவகன், உமாமணி, உஷா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.03.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஜீவமஹால்,**
**கரணவாய் கிழக்கு,**
**கரவெட்டி.**

(N/271)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மனித...

என்பதை ஆராயுமாறு இலங்கைக்குக் கூறியுள்ளதாக, ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசைன் தெரிவித்துள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34 ஆவது அமர்வு ஜெனிவாவில் நேற்று ஆரம்பமானது. ஆரம்ப உரையை ஐ.நா.வின் புதிய பொதுச் செயலர் அன்டோனியோ குட்டரஸ் நிகழ்த்தினார். தொடர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசைன் உரை நிகழ்த்தினார்.
ஐ.நா. ஆணையாளர் தனது தொடக்க உரையில் மனித உரிமைகள் தொடர்பான பொதுவான நிலைப்பாடுகளைப் பற்றியே அதிகம் கரிசனை செலுத்தி உரையாற்றினார்.
இலங்கையில் நம்பகத்தன்மையான பயனளிக்கக் கூடிய, முழுமையான நிலை மாற்றுக் கால நீதிப் பொறிமுறைகளை ஏற்படுத்துவதற்கான தேசிய கலந்தாய்வுகளுக்கும், சாட்சிகள் பாதுகாப்புத் தொடர்பாகவும் தனது அலுவலகம் ஆதரவளித்துள்ளதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார்.
ஐக்கிய நாடுகள் அமைதிப்படை நடவடிக்கைகளுக்கு இலங்கைப் படையினரை அனுப்புவதற்கு முன்னர் அவர்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்களா என்று ஆராயுமாறு இலங்கைக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.
அவர் தனது உரையில், அடிப்படை உரிமைகளுக்கான அர்ப்பணிப்பு, மனிதர்களின் கௌரவம், ஆண்கள், பெண்கள் மற்றும் தேசங்களுக்கான சம உரிமை ஆகியவை குறித்த அர்ப்பணிப்பு இல்லாத சந்தர்ப்பத்தில் உலகம் குழப்பம், துயரம் மற்றும் போர் நிறைந்ததாக மாறிவிடும். பன்னாட்டு மனித உரிமைகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கும் அரசியல் தலைவர்கள், பன்னாட்டு மற்றும் பிராந்திய உடன்படிக்கைகள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களில் இருந்து விலக நினைக்கும் தலைவர்களும் கடந்த ஏழு தசாப்தத்தில் உலகம் எவற்றையெல்லாம் சாதித்துள்ளது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (த-5)

## ஐ.நாவில்...

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரான்ஸ் செனட்டர்கள் குழுவினர், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனை, எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.
இந்தப் பேச்சின்போது, புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் முதலில் ஆராயப்பட்டுள்ளது. இதன்போது மாகாணங்களுக்குக் கூடியளவில் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.
ஐ.நா.வில் இலங்கை அரசு இணங்கி இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றிய தீர்மானத்தில் மிகச் சொற்பமான விடயங்களையே செய்துள்ளது. எஞ்சிய விடயங்களை இலங்கை செய்து முடிப்பதற்கு கடும் நிபந்தனைகளுடன் கூடிய காலஅவகாசம் வழங்கப்படலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளார் என்று பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## சிறைச்சாலை...

பொலிஸார் தெரிவித்தனர். படுகாயமடைந்த சிறைச்சாலை அதிகாரிகள் 4 பேர் நாகொட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
தெற்கில்இயங்கும் பாதாளக் கோஷ்டியொன்றின் தலைவர் எனக் கருதப்படும் அருண உதயசாந்த பத்திரணவும் (சமயன்) சம்பவத்தில் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இரண்டு பாதாளக் குழுவினருக்கிடையில் நீண்ட காலமாக இருந்து வந்த மோதலின் காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.
களுத்துறை மல்வத்தைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கைதிகள் சிலரை கடுவலை நீதிமன்றத்துக்கு ஏற்றிச் சென்ற சிறைச்சாலை பேருந்தே மல்வத்தைப் பகுதியில் வைத்து நேற்றுக் காலை 8.30 மணியளவில் திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டது.
பொலிஸாரின் காக்கி உடைக்கு ஒத்த உடையணிந்திருந்த 16 க்கும் மேற்பட்ட குழுவொன்றே குறித்த பகுதியில் சினிமாப் பாணியில் பேருந்தை வழிமறித்துச் சரமாரியாகச் சூடு நடத்தியுள்ளது. கைதிகளுக்குப் பாதுகாப்பு வழங்க வந்த மற்றுமொரு பேருந்து மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.
பின்னர், பேருந்துக்குள் நுழைந்தும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. பின்னர் அந்தக் குழுவினர், அங்கு நின்ற வானொன்றில் தப்பிச் சென்றனர். சம்பவத்தால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது. மக்கள் சிலர் அச்சத்தில் வீட்டுக்குள்ளேயே முடங்கினர்.
இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பான முழு பொறுப்பையும் பொலிஸாரே ஏற்க வேண்டும் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.
பாதாள உலகக் குழு நபர்களை நீதிமன்றுக்கு அழைத்துச் செல்லும் போது போதுமான பாதுகாப்பு வழங்குவது பொலிஸாரின் கடமை. எனினும் அதனைத் தவறவிட்டுள்ளனர் என்று அவர் பொலிஸார் மீது குற்றஞ்சாட்டியுள்ளார். (த-4)

## தூதரகங்களின்...

வலியுறுத்தி அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.
வடக்கு கிழக்கைச் சேர்ந்த காணாமற்போனோரின் உறவினர்கள் சுமார் நூறு பேர் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களுடன் காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலர் சுந்தரம் மகேந்திரனும் இணைந்து கொண்டார்.
அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக நேற்றுக் காலை முதலில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. மக்களின் போராட்டத்தைத் தொடர்ந்து அமெரிக்கத் தூதரக அதிகாரிகள், கோரிக்கை மனுவைப் பெற்றுக்கொண்டனர். தம்மால் எடுக்கக் கூடிய நடவடிக்கையை எடுப்பதாக அவர்கள் உறுதியளித்தனர். இதன் பின்னர் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. தூதரகத்தினுள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களிடம் மனுவைப் பெற்றுக் கொண்டு வெளியேறுமாறு தூதரக அதிகாரிகள் பணித்ததாகப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். இந்தியத் தூதரகத்தின் அலட்சியமான செயற்பாட்டைக் கண்டித்து மக்கள் கண்டனக் கோசம் எழுப்பியுள்ளனர். பிரிட்டன் தூதரகத்துக்குக் காலை 11.45 மணியளவில் சென்ற போராட்டக்காரர்கள், தூதரகத்தின் முன்பாகச் சிறிது நேரம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தூதரக அதிகாரிகள், மக்களின் கோரிக்கை மனுவைப் பெற்றுக் கொண்டனர். இறுதியாக கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. இதன்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கான மனுவும் கையளிக்கப்பட்டது.
போராட்டங்களின் முடிவில் மாலை 3.30 மணியளவில் கொழும்பில் பத்திரிகையாளர் சந்திப்பும்நடத்தப்பட்டது. அதன்போது, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, முன்பு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது காணாமற்போனோர் விடயத்தில் கரிசனையுடன் செயற்பட்டார். இப்போது அலட்சியப் போக்குடன் செயற்படுகின்றார் என்று காணாமற் போனோரின் உறவினர்கள் குற்றம் சுமத்தினர். (த-5)

## விசாரணைக்கு...

ஐந்து பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.
களுத்துறைப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கண்காணிப்பின் கீழ் 3 பொலிஸ் குழுக்களும், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு, மிரியான சிறப்புக் குற்றத் தடுப்பு பிரிவு ஆகியனவற்றின் கீழ் இரண்டு பொலிஸ் குழுக்களும் செயற்படவுள்ளன.
கொழும்பு, களுத்துறை, நுகேகொடை, அத்துருகிரிய ஆகிய பகுதிகளை மையப்படுத்தி தேடுதல் வேட்டையும், விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
தாக்குதல் நடத்துவதற்காகச் சூத்திரதாரிகள் பதுங்கியிருந்த இடம், அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய நபர்கள், சிறைச்சாலை பஸ் பயணித்த வீதி ஆகியன தொடர்பில் பொலிஸ் தனது கழுகுப் பார்வையைச் செலுத்தியுள்ளது.
அதேவேளை, துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த உதயசாந்த பத்திரணவுக்கு (சமயன்) எதிராகச் செயற்பட்டு வந்த குழு அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இது குறித்த விசாரணைகளை கொழும்பு குற்றப் பிரிவு முன்னெடுத்து வருகின்றது.
கொலையாளிகள் பயணித்த வாகனம் பிடிபட்டுள்ளது. அந்த வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ள உரிமையாளரிடம் பல கோணங்களில் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (த-4)

## இலங்கை...

இந்தச் சந்திப் பின்போதே அவர் மேற்படி கோரிக்கையை வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
தமிழகத்தில் மிக நீண்டகாலமாக தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு இன்னமும் குடியுரிமை வழங்கப்படவில்லை. அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும். விரைவில் அது நடைபெற வேண்டும் என்று மோடியிடம் கேட்டுக் கொண்டுள்ளதாக பழனிச்சாமி குறிப்பிட்டுள்ளார். (த-5)

## புதுக்குடியிருப்பிலும்...

இராணுவம் வசமுள்ள 19 ஏக்கர் காணியை விடுவிக்கக் கோரி கடந்த 25 நாள்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் அறவழிப் போராட்டத்துக்கு நேற்றுத் திருகோணமலையில் இருந்து வந்த வடக்கு கிழக்குச் சிவில் சமூக செயற்பாட்டுக்கான ஒருங்கிணைப்புக் குழுவினர் நேரில் தமது ஆதரவுகளைத் தெரிவித்தனர்.
புதுக்குடியிருப்பு நகரின் மத்திய பகுதியில் அமைத்துள்ள இந்த இராணுவ முகாமினால் பிரதேச செயலத்துக்கு வந்து செல்வோர், பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் எனப் பலரும் சிரமப்படுகின்றனர். இந்த முகாம் அகற்றப்படவேண்டிய ஒன்று. நல்லாட்சி அரசு இதனை உடனடியாகச் செய்யவேண்டும் என அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர். (த-7)

## போராட்டங்களுக்கு...

இவ்வாறு யாழ்ப்பாண வணிகர் கழகத்தினால் அனுப்பப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இந்த நாட்டில் சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது நீண்ட காலத்துக்கு இழுபட்டுச் செல்வது அனைவருக்கும் எதிர்காலத்தில் தீமையையே விளைவிக்கும். இதனால் நாட்டின் அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்படும் என்பதை அரசு உணர வேண்டும். கடந்தகால உள்நாட்டுப் போர் காரணமாக எமது மக்கள் பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புக்களைச் சந்தித்துள்ளனர். இலட்சக்கணக்கான மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேற்றப்பட்டனர். எமது பொருளாதாரமும் முற்றாக சீரழிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னரும் இன்னம் பல மக்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பமுடியாத நிலை காணப்படுகின்றது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் நல்லாட்சியை நிறுவி மக்களின் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் முடிவு கட்டுவதாகக் கூறப்பட்ட உறுதிமொழிகளை நம்பிப் புதிய அரசை அமைக்கத் தமிழ் மக்கள் தமது ஏகோபித்த ஆதரவை வழங்கினர். ஆனால் உறுதியளித்தபடி மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படாது மக்கள் மீண்டும் ஏமாற்றப்பட்டுள்ளனர்.
இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் எல்லோரையும் தமது சொந்த வாழ்விடங்களுக்குச் செல்ல அரசு இனியும் காலம் தாழ்த்தாது வழிவகைகளைச் செய்யவேண்டும். எந்தவித விசாரணைகளும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும். மக்களின் விவசாய நிலங்கள் மற்றும் பொருளாதார மையங்கள் மக்களிடமே மீண்டும் ஒப்படைக்கப்பட வேண்டும். இவை யாவும் மக்களின் அடிப்படை உரிமைகளாகும். இதனை அரசு செய்யத் தவறின் இதனால் எதிர்காலத்தில் நாட்டுக்கு ஏற்படப் போகும் பாதிப்புக்களுக்கு அரசு பொறுப்புக் கூற வேண்டியிருக்கும்.
இவ்வாறான நிலைமை ஏற்படின் மக்கள் போராட்டங்களுக்கு அரசு முகம்கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை அரசு விளங்கிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் நாட்டின் ஸ்திரத்தன்மையும், பொருளாதார அபிவிருத்தியும் பெரியளவு பாதிப்புக்குள்ளாகலாம். எனவே இந்த நல்லாட்சி அரசு இவற்றை தீவிரமாகப் பரிசீலித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றுள்ளது. (த-10)

## 28 நாள்களைக்...

தொடர்ந்தது. நேற்று அங்கு ஐந்தாவது கொட்டகையும் முளைத்தது.
விமானப்படை தன்னகப்படுத்திய தமது காணிகளை விடுவிக்கக் கோரி தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு ஆதரவு தெரிவித்து திருகோணமலை வடக்கு கிழக்கு சிவில் சமூக செயற்பாட்டுக்கான ஒருங்கிணைப்புக் குழுவினர் நேற்று பிலக்குடியிருப்புப் பகுதிக்கு நேரில் சென்றனர்.
விமானப்படை முகாமுக்கு முன் தகரக் கொட்டகைகள் அமைத்து மக்கள் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றுப் புதிதாக கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் கொட்டகையை அகற்றுமாறு பொலிசாரால் தெரிவிக்கப்பட்டது. குழந்தைகளுடன் இருக்கும் எமக்குப் பற்றைக்காடுகளாக உள்ள இடத்தில் கொட்டகை போடமுடியாது எனப் பொதுமக்கள் பொலிஸாருக்குப் பதிலளித்தனர்.
அறவழி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை நேற்றைய தினம் புதிய ஜனநாயகப் போராளிகள் கட்சி உறுப்பினர்கள் நேரில் சென்று சந்தித்து ஆதரவு தெரிவித்தனர். (த-7)

## 9படையினர்...

நீடிக்கப்பட்டது.யாழ்ப்பாணம் - சிறுப்பிட்டிப் பகுதியில் இரு இளைஞர்கள் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் 16 இராணுவத்தினருக்குஎதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது.
2 இராணுவத்தினர் உயிரிழந்துவிட்டதால் தற்போது 14 ராணுவத்தினருக்கு எதிரான வழக்கு விசாரணையில் உள்ளது.
அவர்களில் 5 பேர் பிணை கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 9 பேரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் மறியல் எதிர்வரும் மார்ச் மாதம் 13ஆம் திகதிக்கு நீடிக்கப்பட்டது.
1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி இரு இளைஞர்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். இதனுடன் தொடர்புபட்டதாக குற்றஞ் சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரை அச்சுவேலி காவல்துறையினர் கைது செய்தனர். எனினும் 1998 ஆம் ஆண்டு நீதவான் நீதிமன்றம் குறித்த நபர்களுக்குப் பிணை வழங்கியது. இதனைத் தொடர்ந்து கிடப்பில் போடப்பட்ட வழக்கு கடந்த வருடம் சட்டமா அதிபரால் விசாரணைக்கு கொண்டுவரப்பட்டது. (த-4ரி)

## களுத்துறை...

கொண்டார் என உறவினர்கள் தெரிவித்தனர். சம்பவத்தில் மேலும் இரு சிறைச்சாலை அதிகாரிகளும் உயிரிழந்துள்ளனர். அத்துடன் மூன்று அதிகாரிகள் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். (த-ய-46)

## மேலும்...


தற்போது வவுனியாவில் மட்டும் 7 பேர் இந்தத் தொற்றினால் பீடிக்கப்பட்டுள்ளனர். வடக்கு முழுவதும் 26 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத் துறையினர் கூறுகின்றபோதும் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம் என்று கூறப்படுகிறது.
நேற்றுமுன்தினம் 2 பேருக்கும் நேற்று 3 பேருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளதாக வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் கு.அகிலேந்திரன் தெரிவித்தார்.
"கடந்த 22ஆம் திகதி இனங்காணப்பட்ட 25வயதுடைய ஹெப்பிட்டிக்கொலாவப் பகுதியைச் சேர்ந்த குழந்தை பெற்றெடுத்து ஒரு கிழமையான தாயார் தொடர்ந்தும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார். அவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. மற்றைய 37 வயதுடைய பூவரசம்குளம் பகுதியைச் சேர்ந்த பெண்ணுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு அதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.
பன்றிக்காய்ச்சல் தொற்றியவர்களைப் பார்வையிடுவதற்கு கர்ப்பிணித் தாய்மார், சிறுவர்களை வைத்தியசாலைக்கு அழைத்து வரவேண்டாம். காய்ச்சல், தடிமன், உடல் சோர்வு ஏற்பட்டால் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெறுங்கள் என்று மருத்துவர் மேலும் தெரிவித்தார். (த-4)

## காலைக் காட்சி

- நமது கண்களுக்கு விருந்தளிக்கும் காட்சிகளுள் காலைக் காட்சியும் ஒன்று.
- காலை வேளையில் பறவைகள் இன்னிசை கீதம் பாடும்.
- அவை தம் கூடுகளை விட்டு சிறகடித்து வானில் பறந்து செல்லும்.
- சூரியன் தன் செங்கதிர்கள் பரப்பி கிழக்கு வானில் உதயமாவான்.
- அவன் வரவு கண்டு தடாகங்களில் தாமரைகள் மலரும்.
- பூங்காக்களில் பல வர்ண மலர்கள் மலர்ந்து நறுமணம் வீசும்.
- தேனீக்களும், வண்டுகளும், வண்ணத்துப்பூச்சிகளும் தேனை உண்ண மலர்களை நாடி வரும்
- ஆலயங்களில் மணி ஓசை கேட்கும்; வழிபாடுகள் நடைபெறும்.
- மக்கள் துயில் நீங்கி எழுந்து காலைக் கடன்களை முடிப்பர்.
- பெண்கள் முற்றத்தைக் கூட்டிப் பெருக்கி வாசலில் கோலம் போடுவர்.
- கால் நடைகள் புல் நிலங்களை நாடிச் செல்லும்.
- உழவர்கள் கலப்பைகளைச் சுமந்தும் எருதுகளை ஓட்டியும் வயல் நிலங்களுக்குச் செல்வர்.
- தோட்டங்களில் காய்கறிகளைப் பறித்து சந்தைகளுக்கு கொண்டு செல்வர்.
- மாணவர்கள் சீருடை அணிந்து பாடசாலைகளுக்குச் செல்வர்.
- அலுவலகங்கள், தொழிற் சாலைகள் யாவும் செயற்படத் தொடங்கும்.



## மான் தாகத்தால் அலைகிறது அதற்கு ஆற்றை நோக்கி வழிகாட்டுவோம்



## நோய்கள் பல விதம்

சோம்பல் என்பது நோயாகும்
சோர்வே அதன் அறிகுறியாம்

பேராசை என்பதும் நோயாகும்
பொறாமை கொள்வதே அறிகுறியாம்

வெறுப்புக் கொள்ளல் நோயாகும்
வீண் சந்தேகமே அறிகுறியாம்

ஈடுபாடின்மை நோயாகும்
இயலாமைதான் அதன் அறிகுறியாம்

பொறுப்பில்லாமையும் நோயாகும்
பொழுதை வீணாக்கல் அதன் அறிகுறியாம்

அன்பில்லாமை நோயாகும்
இகழ்வாய்ப் பேசுதல் அறிகுறியாம்

ஆணவம் என்பது நோயாகும்
ஆத்திரம் கோபம் அறிகுறியாம்

நேர்மை இன்மை நோயாகும்
பொய்யும் புரட்டும் அறிகுறியாம்

அறிகுறி அனைத்தையும் அலசிடுவோம்
அவையும் நோய்களே அகற்றிடுவோம்



## கறுப்புப் பெட்டி





கறுப்புப் பெட்டி என்னும் இக்கருவி விமானச் சேவையோடு தொடர்புபட்ட ஒன்றாகும். இந்தக் கருவி விமானம் வானில் பறந்து கொண்டிருக்கும் போது காற்றின் வேகம், விமான ஓட்டிக்கும் விமானக் கட்டுப்பாட்டு அறைக்குமிடையே நடைபெறக் கூடிய உரையாடல்கள், விமான இயந்திரத்தின் சீரான ஒலி ஆகியவற்றை அப்படியே பதிவு செய்து வைக்கக் கூடியது.

விமானம் ஏதாவது ஒரு விபத்தில் சிக்கி சுக்கு நூறாக உடைந்து போனாலும் இந்தப் பெட்டி எக் காரணம் கொண்டும் தீப் பற்றி எரியாது. அமிலம் போன்ற எவையும் இப் பெட்டியை அரிக்காது. இது கறுப்புப் பெட்டி என்று சொல்லப்பட்டாலும் இது பளபளப்பான சிவந்த செம்மஞ்சள் நிறம் பூசப்பட்ட பெட்டியாகும். விமானம் தற்செயலாக விபத்துக்குள்ளானால் விமானம் விபத்துக்குள்ளான இடத்தில் இப்பெட்டியை எளிதில் கண்டறிந்து உடனடியாக தகவல்கள் பெறுவதற்கே இந்த நிற ஏற்பாடு.

## புண்ணியவான்களின் பயணம்

இடிச் சத்தம் காதைக் கிழிக்க, மின்னலொளி கண்ணைப் பறிக்க அடை மழை விடாது பெய்து கொண்டிருந்தது. வெறிச் சோடிப் போயிருந்த வீதியில் ஆள்கள் நிறைந்த ஒரு பேருந்து மட்டும் சென்று கொண்டிருந்தது. அந்தப் பேருந்தில் பயந்த சுபாவமுடைய அப்பாவி ஒருவனும் பயணம் செய்தான்.

பேருந்தில் இருந்தவர்கள் அனைவரும் "இடி இந்த வண்டி மேல் விழப் போகிறதே! நாம் எல்லோரும் எரிந்து சாம்பல் ஆகப் போகிறோம்" என்று அஞ்சிக் கலங்கினர். அப்போது அங்கிருந்த ஒருவர் "இந்த பேருந்தில் பெரும் பாவங்கள் செய்த யாரோ ஒரு பாவி இருக்கிறான். அவனால் தான் பேருந்தின் மேல் இடி விழப் போகிறது" என்றான். மற்றொருவன் "அந்த ஒருவனுக்காக நாம் ஏன் உயிரை விட வேண்டும்" பேருந்தைஇங்கே நிறுத்தி விட்டு எல்லோரும் அதோ அந்த மரங்களின் கீழ் போய் நிற்போம்" என்றான். உடனே ஓட்டியும் பேருந்தை நிறுத்த, எல்லோரும் இறங்கி மரங்கள் நின்ற இடம் நோக்கி ஓடினர். ஆனால் அந்த பயந்த சுபாவம் உள்ளவன் மட்டும் இடி மின்னலுக்குப் பயந்து வெளியே இறங்கி அவர்களுடன் செல்லாமல் பேருந்தின் உள்ளேயே இருந்தான். சிறிது நேரத்தில் மழையின் வேகமும் குறைய இடியும் மின்னலும் நின்று போயின. மரங்களின் கீழே நின்றவர்கள் எல்லோரும் வண்டியில் வந்து ஏறினர். அப்போதுதான் உள்ளே இருந்தவனை எல்லோரும் கவனித்தனர். "இதோ இவன்தான் மகாபாவம் செய்தவன் போலும். அதுதான் குற்ற உணர்வால் எம்முடனே இறங்கி வராது இங்கேயே இருக்கின்றான்" என்று கூறி எல்லோரும் அவனைப் பேருந்தை விட்டுப் பலவந்தமாக வெளியேற்றினர். அவனோ பயந்து நடுங்கியபடியே ஓடிச் சென்று மரம் ஒன்றின் கீழ் நின்றான்.



அப்பொழுது திடீரென கண்ணைப் பறிக்கும் மின்னலோடு பலத்த சத்தத்துடன் இடி ஒன்று சிறிது தூரத்தில் விழுந்தது. அவனோ பயத்தில் கண்களையும் காதுகளையும் மூடிக் கொண்டான். சிறிது நேரம் கழித்து அவன் கண்களைத் திறந்த போது அவன் பயணம் செய்த அந்தப் பேருந்து தீச்சுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்தது.

**நம்மில் பலர் எண்ணற்ற தீமைகளைப் பிறருக்குச் செய்கின்றோம். ஆனால் பெரும் புனிதர்களைப் போல அடுத்தவரின் குற்றங்களை மட்டும் பேசித் தூற்றுகிறோம்.**

**"உன் முதுகின் அழுக்கை முதலில் நீ கழுவு"**

## விடுகதைகள்

1. கண்கள் உண்டு. ஆனால் பார்க்க முடியாது. அது என்ன?
2. உணவு கொடுத்தால் உயரமாக வளருவான்; அருந்த நீர் கொடுத்தால் இறந்து போவான். அவன் யார்?
3. அடித்தால் அன்றிப் பேச மாட்டான். அவன் யார்?
4. பறந்து கொண்டே இருக்கும். ஓய்வு என்பதே எடுக்காது. அது எது?
5. உறையாத நீர் எந்த நீர்?
6. நான் ஆகாய விமானமும் அல்லன். ஆனால் பறப்பேன், நான் நதியும் அல்லன். ஆனால் என்னிடம் நீருண்டு. நான் யார்?
7. எல்லாத்திசைகளிலும் பயணிப்பேன். ஆனால் நிலத்திலும் இல்லை. ஆகாயத்திலும் இல்லை. நான் யார்?
8. அடித்தால் விலகாது. அணைத்தால் நிற்காது. அது என்ன?
9. செய்யாத குடத்தில் சுவையான நீர் இருக்கும், அது என்ன?
10. கண்ணீர் விடுவான். ஆனால் இறுதி வரை ஒளி தருவான் அவன் யார்?
11. உனக்குச் சொந்தமானது. ஆனால் உன்னை விட மற்றவர்களே அதனை அதிகமாக உபயோகிப்பர். அது என்ன?
12. போட்டதை எடுக்க முடியாது. ஆனால் பூமிக்கு அது அழகூட்டும். அது என்ன?

*(விடைகள் 02.03.2017 வெளிவரும்)*

# மகாஜனவை வென்றது சென். ஜோன்ஸ் அணி

யாழ்ப்பாணம், பெப். 28
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான டெஸ்ட் ஆட்டம் ஒன்றில் அபார வெற்றி பெற்றது சென். ஜோன்ஸ்.
சென். ஜேன்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்த ஆட்டம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 286-9 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. யதுசன் ஆட்டமிழக்காமல் 110 ஓட்டங்களையும், லியோனி 79 ஓட்டங்களையும், தேவபிரசாத் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சுஜீவன் 4 இலக்குக்களையும், யதுசன் 2 இலக்குகளையும், டினேஸ், ஜசிந்தன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய மகாஜனக் கல்லூரி அணி, 156 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக முரளிதரன் 50 ஓட்டங்களையும், பிரணவன் 27 ஓட்டங்களையும்,



தயிஸ்ரன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் யனுசன் 6 இலக்குகளையும், சோமஸ்கரன் 2 இலக்குகளையும், கபில்ராஜ், அபினாஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மகாஜனக்கல்லூரி அணி 102 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந் தது.
இதனையடுத்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 28 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (ம-23)



# இமையாணன் மத்தி. கிண்ணம் வென்றது

கரணவாய், பெப். 28
கரவெட்டி பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.
நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதிநிழ்வுகள் நடைபெற்றன. தடகளம் மற்றும் பெருவிளையாட்டு ஆகியவற்றில் சிறப்பாக செயற்பட்ட இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் 37 புள்ளிகளைப்பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. 34 புள்ளிகளைப் பெற்ற மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் இரண்டாமிடத்தையும், 31 புள்ளிகளைப்பெற்ற கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் மூன்றாமிடத்தையும் தமதாக்கின.
தடகளத்தில் ஆண்கள் பிரிவில் அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகம் 38 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும், மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் 30 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும், கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் 26 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் தமதாக்கின.
பெண்கள் பிரிவில் 50 புள்ளிகளைப் பெற்று உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகம் முதலாமிடத்தையும், இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் 45 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் மூன்றாம் இடத்தையும் தமதாக்கின. (ம-108-422)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 28

**இளைஞர் வி.க. கால்பந்தாட்டம்**
வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டமொன்றில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட கூடைப்பந்து**
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது.
முன்னதாக பிற்பகல் 3.15 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில், ஜமகா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பட்டபிளை விளையாட் டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து சுன்னாகம் கே.கே.எஸ். அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி வி.க. கால்பந்தாட்டம்**
உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். ஐக்கிய அணியை எதிர்த்து நியூவோரியஸ் அணி மோதவுள்ளது. மாலை 4.45 அணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து கொலின்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

# டயமன்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 28
கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் வதிரி டயமன்ஸ் அணி சம்பியனானது.
நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் அணி மோதியது. ஆட்டத்தின் முதல் பத்து நிமிடங்கள் வரை இரு அணி வீரர்களும் தற்காப்பு ஆட்டத்தை வெளிப்படுத்தினர். கோல்கள் எவையும் பதிவாகவில்லை. ஆட்டத்தின் 15 ஆவது, 19 ஆவது நிமிடங்களில் டயமன்ஸ் வீரர் பிறேம்குமார் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்தார். இதனால் முதல்பாதியில் 2:0 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் முன்னிலை வகித்தது.
இரண்டாம் பாதியின் 13 ஆவது நிமிடத்தில் பொம்மர்ஸ் அணியின் நிருசாந் தனது அணிக்கான முதல் கோலைப் பதிவுசெய்தார். 24 ஆவது நிமிடத்தில் துசிகரன் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் வதிரி டயமன்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422-108)

# யாழ். பிரதேச செயலக கால்பந்து இறுதி இன்று

யாழ். பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்துத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ள இறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதவுள்ளது. இறுதிநாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக் கழக உடற்கல்வி பணிப்பளர் எஸ்.கணேசநாதன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட வி்ளையாட்டுத்துறை அதிகாரி கே.விஜிதரன் மற்றும் யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)



# யாழ். கல்வி வலய உடற்கல்வி ஆசிரியர்களின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 28
யாழ்ப்பாணம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. பெருவிளையாட்டுக்கான போட்டி அட்டவணை தயாரித்தல், மெய்வல்லுநர் போட்டி நடத்துவது தொடர்பாக கலந்துரையாட இருப்பதனால் அனைத்து உடற்கல்வி ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணம் கல்வி வலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் சண் தயாளன் அறிவித்தார். (ம-422)



# 19 வயதுப்பிரிவு கால்பந்து; பற்றிக்ஸ் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், பெப். 28
தேசிய ரீதியில் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவந்த 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் இறுதிக்குத் தகுதி பெற்றதன் மூலம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி பிரிவு ஒன்றுக்கு தகுதிபெற்றது.
காலியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து திருகோணமலை கிண்ணியா கல்லூரி அணி மோதியது. இரு அணிகளும் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தின. முதல்பாதி ஆட்டம் நிறைவடைய 5 நிமிடங்கள் இருக்கும்போது கிண்ணியா கல்லூரி அணிக்கு மூலை உதை கிடைத்தது. அதனை அவர்கள் சரியாகப் பயன்படுத்தி கோலாக்க, முதல் பாதியாட்டத்தில் கிண்ணியா கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியும் கிண்ணியாவின் ஆதிக்கத்துடன் நகர்ந்து முடிந்தது. 0:1 என்ற கணக்கில் பற்றிக்ஸ் தோல்வியடைந்த போதிலும் இறுதிக்குத் தகுதிபெற்றதன் மூலம் அந்த அணி பிரிவு ஒன்றுக்கு முன்னேறியது. (ம-422)



# டோனி சதம்

இந்திய அணியின் முன்னணி வீரர் டோனி, மாநிலங்களுக்கு இடையிலான ஆட்டமொன்றில் சதம் விளாசி தனது ஜார்க்கண்ட் அணியை வெற்றிபெற வைத்தார்.
விஜய் ஹசாரே தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் ஜார்கன்டை எதிர்த்து சத்தீஸ்கர் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜார்கன்ட் 9 இலக்குகள் இழப்புக்கு 243 ஓட்டங்களைப் பெற்றார். அதிகபட்சமாக டோனி 129 ஓட்டங்களைப் பெற்றார். இவற்றில் 10 பவுண்டரிகள் 6 சிக்சர்கள் உள்ளடங்குகின்றன.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சத்தீஸ்கர் 165 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 78 ஓட்டங்களால் வென்றது ஜார்கன்ட். (ம)

# வல்வை விளையாட்டுக் கழக கால்பந்தாட்டம் இன்று ஆரம்பம்


கரணவாய், பெப். 28
வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடர் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.



அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் அனைத்தும் வல்வை விளையாட்டுக் கழக மைதானத்திலேயே இடம்பெறவுள்ளன. இதன்படி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழக ஏ அணி பலப்பரீட்சை நடத்தவுள்ளது.
தொடர்ந்து பிற்பகல் 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.
(ம-108)

# கெபியின் விக்கெட் வேட்டையை உதாசீனம் செய்கிறார் ஹர்பஜன்

இந்தியா–ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டம் புனேயில் நடைபெற்றது. ஆஸ்திரேலிய சுழல் வீரர் கெபி 12 இலக்குகளைக் கைப்பற்றி ஆஸியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார். இந்த நிலையில் இந்த ஆட்டம் நடந்த ஆடுகளம் டெஸ்ட் தரமுடைய ஆடுகளமல்ல என்று குறிப்பிட்டார் இந்திய அணியின் அனுபவ வீரர் ஹர்பஜன் சிங்.
நேர்மையாக சொல்ல பந்து வீசி இலக்குகளை வீழ்த்தும்வகையில் உள்ள இந்த ஆடுகளத்தில் துடுப்பாட்ட வீரர்களால் விளையாட முடியாது.
கெபியின் பந்துவீச்சுப் பெறுதி தொடர்பில் கருத்துக்கூற விரும்பவில்லை. சிறந்த ஆடு களத்தில் அவர் எப்படி பந்து வீசப் போகிறார் என்பதை பார்க்க விரும்புகிறேன். இதுபோன்ற ஆடுகளத்தில் அல்ல. அதற்குப் பிறகு என்னுடைய கருத்தை நான் பதிவு செய்கிறேன் என அவர்மேலும் குறிப்பிட்டார்.



வேண்டுமென்றால் இது ஓர் ஆடுகளம் கிடையாது. டெஸ்ட் ஆட்டம் கடைசி நாளான ஐந்தாவது நாள் வரை செல்ல வேண்டும். எந்தவொரு பந்து வீச்சாளரும் இதில் முன்னதாக, இந்தத் தொடரில் ஆஸ்திரேலியா 0:4 என்ற அடிப்படையில் படுதோல்வியடையும் என்று ஹர்பஜன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# பதிலடி கொடுக்குமா நியூசிலாந்து அணி

நியூசிலாந்து – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. நியூசிலாந்தின் ஹமில்டன் மைதானத்திலேயே இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களில் தென்னாபிரிக்கா அணி 2:1 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் நாளைய ஆட்டத்திலும் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றால் கிண்ணம் அந்த அணியிடமே செல்லும். எனவே சொந்த மண்ணில் வைத்துத் தொடரை இழக்காமல் தனது இருப்பைத் தொடர்ந்தும் தக்கவைத்து இறுதியாட்டம் வரை விறுவிறுப்புத் தன்மையைப் பேண வேண்டுமாயின் நியூசிலாந்து இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற அவசியம் உள்ளது.
தொடர் ஆரம்பமாகும் முன்னர் தென்னாபிரிக்க அணித் தலைவர் வில்லியர்ஸ், உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்திடம் அடைந்த தோல்விக்கு இந்தத் தொடரில் பதிலடி கொடுக்கப்படும் என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மெதடிஸ்த பெண்கள் அணி பூப்பந்தாட்டத்தில் சம்பியன்

கரணவாய், பெப். 28
வடமராட்சி வலய பூப்பந்தாட்டத்தில் 20 வயதுப் பெணகள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை அணி கிண்ணம் வென்றது.
நெல்லியடி மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் வல்வை மகளிர் கல்லூரியும் மோதின.
மூன்று தனிநபர் ஆட்டங்கள், இரண்டு இரட்டையர் ஆட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டதாக இறுதி அமைந்தது. மூன்று தனிநபர் ஆட்டங்களையும் மெடிஸ்த பெண்கள் அணியினர் கைப்பற்றினர். இதனால் அந்த அணி இரட்டையர் ஆட்டத்துக்கு வேலை வைக்காமல் 3:0 என்ற நேர் செற் கணக்கில் சம்பியனானது. (ம-108)



வெளிவந்துவிட்டது
குவி அச்சகத்தின் புதிய வெளியீடுகளாக
* Class Work Book Grade-8
* Happy Kids English Grade-1
* Practise your Grammar Grade-11
* கணிதம் தரம்-7(தமிழ் மொழி மூலம் & English Medium)
* கணிதம் தரம்-10(தமிழ் மொழி மூலம் & English Medium)
சகல புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
K.V,Printers Book Distributing Centre
355, Clock Tower Road, Jaffna.
T.P:- 021 720 0237

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துந்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 04.03.2017
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
1. வாரநாள் பிரிவுகள் : (திங்கள், புதன்) காலை 8-10 காலை 10-12
2. வாரநாள் பிரிவுகள் : (செவ்வாய்,வியாழன்) காலை 8-10 காலை 10-12
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

காணி விற்பனைக்கு
சங்கானை சந்தை சதுக்கத்தில் அமைந்துள்ள முன்னாள் தனியார் வைத்தியசாலை ஆதனம், கிணறு, கட்டடங்களுடன் விற்பனைக்குள்ளது. தயவு செய்து மேலதிக விவரங்களுக்கு நேரடியாக அணுகவும். தரகர்களைத் தவிர்க்கவும். உரிமையாளர்கள் உடனடித் தீர்வு எடுப்பதற்காக ஆதனத்தில் தங்கியிருக்கின்றார்கள்.
071 681 0996/ 077 774 8404

# மன்செஸ்டர் யு னற்ரெட் இங்கிலாந்தில் சம்பியன்




இங்கிலாந்து கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் மன்செஸ்டர் யுனைற்ரெட் அணி சம்பியனானது.

இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு இந்த இறுதியாட்டம் இடம் பெற்றது. மன்செஸ்டர் யுனைற் ரெட்டை எதிர்த்து சவுத்தாம்ப்டன் அணி மோதியது. ஆட்டத்தின் 19ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் யுனைற்ரெட்டை தண்டனை உதை தேடிவந்தது. வாய்ப்பை மிகவும் நேர்த்தியாகப் பயன்படுத்தினார் முன்னணி வீரர் இப்ராகிமோவிக். 38ஆவது நிமிடத்தில் ஜெஸி லிங்கார்ட் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய 2:0 என்று முன்னிலை பெற்றது மன்செஸ்டர் யுனைற்ரெட். 44 ஆவது நிமிடத்தில் சவுத்தாம்ப்டன் அணியின் மனோலோ கேபியாடினி கோலொன்றைப் பதிவு செய்ய முதற்பாதியின் முடிவில் 2:1 என்று முன்னிலை வகித்தது மன்செஸ்டர் யுனைற் ரெட்.

இரண்டாம் பாதியின் மூன்றா வது நிமிடத்தில் மனோலோ கேபியாடினி மேலும் ஒரு கோலைப் பதிவுசெய்ய 2:2 என்ற நிலையில் மேலும் விறுவிறுப்பானது ஆட்டம். இரண்டாம் பாதியின் பெரும்பாலான நிமிடங்கள் 2:2 என்ற நிலையி லேயே நகர்ந்தன. ஆட்டம் நிறைவடைய 3 நிமிடங்கள் இருந்த போது இப்ராகிமோவிக் பிறிதொரு லைப் பதிவு செய்ய 3:2 என்ற கோல் கணக்கில் றி பெற்று சம்பியனா னது மன் செஸ்டர் யுனைற்ரெட்.

விம்லே மை னத்தில் நடை பெற்ற இந்த ஆட்டத்தை 84 ஆயிரத் 64 ரசிகர்கள் நேரில் சென்று பார்த்தனர். மன்செஸ்டர் னற்ரெட் அணியின் முகாமையாளராக மொரின்ஹே பொறுப்பேற்ற முதல் தொடரிலேயே அந்த அணி ண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. மன்செஸ்டர் ணியின் தலை வர் ரூனி நடந்து முடிந்த பல ஆட்டங் ல் தடு மாற்றத் த வெளிப்படுத்தி வந்தார். இதனா விரைவில் அவர் அணியில் இருந்து நீக்கப்படவுள்ள ார் என்று தகவல்கள் வெளியா கியி ருந்த நிலையில் இந்தக் கிண் ணத்தைத் தனது தலைமையில் வென்று காட்டியுள்ளார் ரூனி. (ம)

அன்பான பெற்றோர்களே மாணவர்களே
"முதலாம் தவணைப் பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற"
யாழ் நதி.. வெளியீட...
சகல பாடங்களின் வினாத் தாள்கள் விடைகளுடன்
இலங்கையின் பல பாகங்களை சேர்ந்த ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை.
இலங்கையின் அனைத்து புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ள முடியும்.
தொடர்பு:-
0777417143

யாழ்ப்பாணத்தில்......
திறமையின் தேடல்
ஊடகத்துறையில் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.
Dip.in Mass Media
தயாராகுங்கள்...

இலங்கைய
சர்வதேசத்
துடிப்பு மி
ஓர் அறிவிப்ப
வெற்றியடை
3 - Mon
லை கிடையாது.
வானொலி
பத்திரிகை
விளம்பரத்
துறை
ஊடகத்துறை
பரிணாமம்.
பதிவுகளுக்கு முந்துங்க
BRC
BRITISH ROYAL COLLEGE
ne, Jaffna.
ில்)
5002

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் சிவகணேசன்

(பிரதி அதிபர், யாழ். ஏழாலை மகா வித்தியாலயம்)



மாகியப்புலவீதி, ஏழாலை வடக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சிவகணேசன் நேற்று (27.02.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிநாதர் சிவசுப்பிரமணியம் மற்றும் சிவசுப்பிரமணியம் சிவயோகம் தம்பதியரின் அன்பு மகனும் சிவானந்தினி (ஜேர்மன்), மாலினி (பிரான்ஸ்), யாமளா, பத்மினி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோத னும் சிவம்(ஜேர்மன்), இரத்தினலிங்கம்(பிரான்ஸ்), பிரண ரூபன், பிரதீபன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் யாம், நவீணன், சினேகா, அக்சயன் ஆகியோரின் அன்பு மாமனா ரும் சிவபாதசுந்தரம் (கனடா), சிவானந்தநாதன் (ஆனந்தன்), சிவ ஞானசுந்தரன் (Dr.ஞானா-ஏழாலை) ஆகியோரின் அன்பு மருமகனும் சிவநாயகி, காலஞ்சென்ற சிவம ணி மற்றும் சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புப் பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணி ளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
மாகியப்புல வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை.
077 922 7300

இப்பத்திரிகை, நியூ உதயன் ப ... வனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்